Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20

# ஈழநாடு

தேசிய வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, கார்த்திகை 12- ஆம் நாள். ஜமாதிலவ்வல் பிறை 26 (28-11-59) சனிக்கிழமை இதழ் 43.

கலாநிலையப் பதிப்பக
தினக்குறிப்பு
1960
மிக அழகான முறையில்
வெளிவருகின்றது.
மாணவர்களுக்கும், மற்றோருக்கும்
உபயோகமானது.
விலை சதம் 75

பார்லிமெண்டில்

# ஒரே ஒரு வாக்கினால்

## அரசாங்கத்தின் உயிர் தப்பியது!

## மெஜாரிட்டி ஐந்திலிருந்து ஒன்றுக்குக் குறைந்துவிட்டது!

## நீதி மந்திரி மீது ஸிட்னி கூறும் புகார்

### டாக்டர் கொல்வின் போட்ட திடீர் குண்டு!

— நமது பார்லிமெண்ட் நிருபர் —

ஒரே ஒரு வாக்கினால் தகநாயக்கா அரசாங்கத்தின் உயிர் தப்பியது.

எதிர்க் கட்சியினர் நீதி மந்திரியின் மீது கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு சாதகமாக 45 பேர்களும் பாதகமாக 46 பேர்களும் வாக்களித்தனர்.

சென்ற முறை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது 5 வாக்குகள் அதிகமாகப் பெற்ற அரசாங்கம், இப்போது ஒரே ஒரு வாக்குத்தான் அதிகமாகப் பெற முடிந்தது.

கடைசிவரை முடிவு என்னவாகுமென்பது சந்தேகமாகவே இருந்தது. ஒரு வாக்கினால் பிரேரணை தோற்றதென்று தலைவர் அறிவித்த பின்னரே அரசாங்கக் கட்சிக்கு உயிர் வந்தது.

எனினும் அடுத்த வாரமும் பிரதமர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறது.

சமஷ்டிக் கட்சியினர் 7 பேரும் சபையில் இருந்து பிரேரணைக்குச் சாதகமாக வாக்களித்தனர்.

நியமன அங்கத்தவர்கள் 6 பேரும் அரசாங்கத்தை ஆதரித்தனர். அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த ஆர். ஈ. ஜயதிலக்கா, டானி இலங்கக்கூன், மகானாம சமரவீரா இவர்கள் மூவரும் எதிர்க் கட்சி பிரேரணையை ஆதரித்தனர். நோய்வாய்ப் பட்டிருந்த தபால் மந்திரி மரிக்கார், கடைசி நேரம் சபைக்கு வந்து அரசாங்கத்தைக் காத்தார்.

காலையில் எஸ். டி. பண்டாரநாயக்கா, ஸ்ரீமதி. குஸுமா ராஜரத்தின இவர்கள் பிரேரணையை ஆதரிப்பதாக அறிவித்திருந்தனர். ஆனால் அவர்களது மனம் மாறி விட்டது! சேர் ஜோன், விமலா, ஜி. ஜி. முதலியவர்கள் வரவில்லை. டாக்டர் கொல்வினின் பேச்சு அபாரம்.


இடைவேளைக்குப் பின் சபை 2 மணிக்குக் கூடியதும், திரு. எம். டி. பண்டா, (யு. என். பி) நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்துப் பேசினார். திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா பிரேரணையை எதிர்த்தார். (ஏற்கெனவே இவரும் குஸுமா ராஜரத்னாவும் பிரேரணையை ஆதரிப்பதாக அறிவித்தனர். ஆனால் குசுமாவின் தொகுதிக்குஒருலட்சரூபாய்க்கு மேல் மான்யம் அளித்ததால் அவர் மனம் மாறிவிட்டார் என்றும் ஆர்.பேட்குணவர்த்தன குற்றம் சாட்டினார்.)

அரசாங்கக் கட்சியை சேர்ந்த திருமகாநாமசமரவீரா, பிரேரணையை ஆதரித்தார். "நீதிமந்திரி மீது குற்றம் உண்டு. அவர் ராஜினாமாச் செய்யவேண்டும். கட்சி நடவடிக்கை என்ன எடுப்பினும், நான், இப் பிரேரணைக்குச் சாதகமாகவே வாக்களிக்கப் போகிறேன்" (எதிர்க்கட்சிபலத்தகரகோஷம்

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த திரு. ஆர். ஈ. ஜயத்திலக்க (நாவலப்பிட்டி) இப் பிரேரணையைத் தாம் ஆதரிக்க வேண்டியதே தமது கடமை என்று, எதிர்க்கட்சி கரகோஷத்திடையே கூறினார்.

திரு. பீட்டர் கெனமன் (கொம்யூனிஸ்ட்) பிரேரணையை ஆதரித்துப் பேசினார். "அரசாங்கம் வரும் அரசாங்கம் போகும். தகநாயக்காவின் அரசாங்கம் ஏற்கெனவே அதிககாலம் இருந்துவிட்டது. இந்தப் பிரேரணையால் இந்த அரசாங்கம் வீழ்ந்தால் அதனால் நாட்டுக்குப் பயனுண்டு. இந்தப் பிரேரணையில் இது ஒழியாவிட்டாலும், வெகு சீக்கிரத்தில் இது ஒழிந்துவிடும். இந்த அரசாங்கத்தை, அதைச் சேர்ந்த இரு அங்கத்தினர்களே பகிரங்கமாக எதிர்த்துள்ளது அரசாங்கத்துக்கு, வலிப்புகண்டுவிட்டதற்கு அடையாளமாகும். ஸிட்னியும் நீதிமந்திரியும், இந்த அறிக்கைமூலம் விசாரணைக்கு முட்டுக்கட்டை போட்டுள்ளனர். அதேநீதிமந்திரியின் பொறுப்பில் இந்த விசாரணைக்கான பொறுப்பு இருந்து வருகின்றது. இச்சபையை இவ்விருவரும் சேர்ந்து பெரிதும் அவமதித்துள்ளனர். ஒரு அரசாங்க அதிகாரி, இச்சபை அங்கத்தவர்களை இப்படி அவமதிப்பதைச்சகிக்கவே முடியாது. பார்லிமெண்டின் ஆதிபத்தியத்தை அதிகார வர்க்கம் இந்த அறிக்கைமூலம் பறிப்பதாக

(8ஆம் பக்கம் பார்க்க)




நந்தாவில்: ஆழாழிபோல் அமைதியாக இருக்கும் இந்தக் குளம் எங்கோ வன்னிப்பகுதியிலாக்கும் என்று நினைக்க வேண்டாம். இதுதான் நந்தாவில் குளம். அடக்கம் நிறைவைக் குறிக்கும். நந்தாவில் குளம் நிறைந்து வழிகிறது. படத்தில் காணும் ஆடுகால் அரைவாசிக்கு ஆழ்ந்து விட்டது தினையும், குரக்கனும், மரவள்ளியும் வளரும் இக்குளக்கரைகளில் இன்று வெள்ளம் ஆதிக்கம் செலுத்துகிறது. 'நந்தாவில் விளைந்தால் நாடு விளையும், நாடு விளைந்தால் நந்தாவில் விளையாது' என்ற முதுமொழி இவ் வருடம் பொய்த்து விட்டது. ஏன், நாடும் விளையவில்லை நந்தாவிலும் விளையவில்லை.



கீரிமலை: கடல் கொண்ட கபாட புரமா, அல்லது மாமல்ல புரமா? இரண்டுமில்லை. உங்கள் கீரிமலையேதான். சமுத்திர அலைகளைத் தடுப்பதற்காகப் போடப்பட்ட அரை தொன் பாறைக் கற்களை மழை வெள்ளமும் கடல் வெள்ளமும் சேர்ந்து கடலுக்குள் இழுத்துச் சென்றுவிட்டன. (கட்டுரை 3-ம் பக்கம் பார்க்க)

படங்கள்: ஆனந்தன்.




Wolseley Pumps

"வூல்ஸிலி" பம்புகள்

தோட்டக்காரர்களினால் பாராட்டப்படுகின்றன.

நீங்கள் நீர் இறைக்கும் இயந்திரம் வாங்க எண்ணினால் வூல்ஸிலியை நம்பி வாங்குங்கள்.

எல்லா உப-பாகங்களும் எப்பொழுதும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்:

ஓட்டோஸ் லிமிட்டெட்

ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்.

போன்: 496 தந்தி: "ஓட்டோஸ்" யாழ்ப்பாணம்

## வரி விளம்பரம்

**அறிவித்தல்**

புற்று நோயைத் தமிழ் மருந்தால் தடையின்றி மாற்றலாம். உலகினிலே கொடிய ரோகம் புற்று நோய் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. இந்நோய் சத்திரசிகிச்சை, ஒளி சிகிச்சை மூலமே குணப்படலாமே தவிர தமிழ் மருந்தினுலல்ல என்ற அபிப்பிராயம் இனி நிலவ இடமில்லை. மீட்க முடியாதெனக் கைவிடப்பட்ட அநேகர் **யோகீஸ்வரரசம்** என்ற பெயருடைய தமிழ்மருந்தினுல் குணமடைந்துள்ளனர். இம்மருந்திற்கு அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. புற்று நோயைப் பற்றி என்னுடன் ஆலோசியுங்கள்.

**பொ. செல்லையா**
ஆயுள்வேத வைத்தியர்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்


## ஆசிரியருக்குக் கடிதங்கள்

### தமிழினத்தின் ஒற்றுமைக்கு தமிழ்ப் பல்கலைக் கழகம் வழி வகுக்கின்றது

தமிழ் பேசும் மக்கள் தமிழ் மொழியையும், தமிழினப் பண்புகளையும், பிற கலைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்குப் பல்கலைக் கழகம் ஒன்று மிக அவசியமாகின்றது. இந்நாட்டின் ஆட்சியாளர் தம் இனத்தின் மொழியையும், கலை, கலாச்சாரத்தையும் வளர்த்து அவற்றைத் தேசியமாக்கத் திட்டமிட்டுள்ளார்கள். ஆகவே, தமிழ் மொழியையும், பண்புகளையும், கலையையும் பாதுகாத்துக்கொள்ளவேண்டிய பொறுப்பும், அவசியமும் தமிழ் பேசும் மக்களையே சார்ந்ததாகும். தமிழ் மக்களில் பெருஞ் செல்வமுடையவர்களாக இருப்பவர்களுக்கு இதுபோன்ற காரியங்களில் சிரத்தை குறைவாக இருந்தபோதிலும், ஒரு சிலரின் நல்லார்வத்தாலும், விடாமுயற்சியாலும் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவுவதற்கு ஏற்ற நல்ல அறிகுறிகள் தோன்றின. தென்னிந்தியாவில் தனிப்பட்ட ஒருவரே ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவ முடிந்தது என்ருல், இங்கு தமிழ் பேசும் மக்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கு முயற்சித்தால் அது முடியாத காரியமாக இருக்குமா? பல்கலைக் கழகத்தின் அவசியம் பற்றிய உணர்வும், முயற்சியும் நடைபெற்றன. தமிழ் பேசும் மக்களிடையே பல்வேறு மதத்தினரும், பல்வேறு இனத்தினரும் இருந்தபோதிலும் மொழி, இனம் என்ற அடிப்படையில் வேறுபட்ட தன்மையில் ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆரம்பமாகியது.

தமிழினத்தின் அரசியல் சுதந்திர உரிமைகளைப் பெறுவது எவ்வளவு அவசியமாகுமோ, அதேபோலத் தமிழினத்துக்கு ஒரு பல்கலைக்கழகம் அவசியமென்பதை நன்குணர்ந்த அரசியல் தலைவர்கள் பல்கலைக்கழக இயக்கத்துக்குத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து கொடுத்தார்கள். தமிழ் மக்களின் நல்லார்வத்தால்; நன்முயற்சியால், நல்ல காரியம் ஒன்று நடைபெறுகின்றது என்பதை உணர்ந்தோர் யாவரும் மகிழ்ச்சியடைந்தார்கள். ஆட்சியாளரின் உதவி இல்லாமல், அவர்களின் எதிர்ப்புக்களிடையே இருந்தும், எமக்குரிய அவசிய தேவைகளை நாமே ஆக்கிக்கொள்ள வேண்டும் என்ற தன்னம்பிக்கை உறுதிகொண்டு தமிழ்ப் பல்கலைக் கழகம் உதயமாயிற்று.

இது இவ்வாருக, இடையில் ஒன்று புகுந்து தமிழ்மக்களைத் திடுக்கிட வைத்துள்ளது. இதுபோன்ற காரியங்களால் தான் தமிழினம் பின்நோக்கித் தாழ்ந்தது என்ற பேருண்மை புலனுகிவிட்டது. ஒரு சில பெரியார்கள், கல்விமான்கள், இதுவரைகாலமும் மௌனமாக இருந்துவிட்டு, இப்போது தமது கருத்துக்களை வெளியிடுகின்றனர். ஆட்சியாளரும் சாட்டுச்சொல்லித் தட்டிக்கழிக்க வாய்ப்பாக இருக்கின்றது. முன்னர் ஒரு முறை 'காங்கேசன் துறையா— ஊர்காவற்றுறையா' என்றது போல இன்று 'தமிழ்ப் பல்கலைக்கழகமா இந்துகலாசாரப் பல்கலைக்கழகமா' என்று வந்துவிட்டது. இது ஆட்சியாளர் தமது எண்ணத்தை நிறைவேற்ற மிகச் சுலபமாக இருக்கிறதல்லவா?

யாழ்ப்பாணத்தில் இந்து கலாச்சாரப் பல்கலைக் கழகம் அவசியமெனக் கூறுகின்றவர்கள், இராமநாதனின் கனவும் அதுவே எனக்கூறி அதனை நிலைநாட்ட வேண்டுகின்றனர். அந்தப் பெரியாரின் பேரிலுல் தமிழினத்தைப் பிரித்து வைப்பது அவர் கனவை நனவாக்குவதாக இருக்க முடியாது. இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, மன்னுர் என்ற பிரிவு மனப்பான்மை காட்டாமல், இந்து, கிறிஸ்து, முஸ்லிம் என்ற மதபேதம் இல்லாமல் தமிழ் மொழியின் பேரிலுல், இனத்தின்பேரிலுல் ஒன்றுபட்டிருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இதனை உணராமல் சமய அடிப்படையில் பல்கலைக் கழகம் வேண்டுமென்பது 'பிறமதத் தமிழ் மக்களைப் புறம்பாக்குவதாகக் கருத இடம் ஏற்படுத்திவிடும். இதனுல் தமிழ் இனத்தில் பிளவுகள் ஏற்பட்டுவிடவும் கூடும். இதுபோன்ற காரியங்களில் தமிழ் மக்கள் நடந்துகொள்ளும் முறையில் தான் தமிழினத்தின் ஒற்றுமை பலப்பட்டுவர வாய்ப்பு இருக்கிறது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் எல்லாமதவாதிகளுக்கும் இடம் இருக்கிறதல்லவா? விரும்பினுல் தத்தம் மதங்களைப் பேணுவதற்கான முறைகளையும் ஒழுங்குசெய்துகொள்ளலாம். இதனைவிட்டுத் தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்கு இடையூருக இருந்துகொண்டு மத அடிப்படையில் பல்கலைக் கழகம் அமையவேண்டும் என்பது தவருகும். இவர்கள் கோரிக்கை தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு இடையூருக இருப்பதாலுல், அது தமிழுக்கும் தமிழினத்துக்கும் துரோகமாகவே இருக்கும். எனவே ஒன்றுசேர்ந்து வளர்கின்ற தமிழினத்தை மேலும்வளர்த்து இனப் பலத்தைப் பெருக்க வேண்டியதன் அவசியத்தை நாம் மறக்கலாகாது. முதலில் தமிழும், தமிழினமும் காப்பாற்றப்படவேண்டும். இதனைத் தமிழ் பேசும் மக்கள் எக்கருமத்திலும் நினைவுபடுத்திக் கொள்ளல் வேண்டும். எம்முள் பிரிவுற்று மாற்ருனின் கொள்கைக்கு இடம் கொடாமல் தமிழ் பேசும் மக்கள்யாவரும் ஒன்றுபட்டு 'தமிழ்ப் பல்கலைக் கழகம்' செவ்வனே அமைவதற்கு ஆவன செய்வதே கடமையாகும்.

தி. பஞ்சாட்சரம்
மண்டைதீவு.

### தமிழர் ஒத்துழைப்பு அவசியம்

இலங்கைத் தமிழரும், இந்தியத்தமிழராகிய இலங்கை வாழ் தமிழ் மக்களிடையேயுள்ள பல்வேறு கட்சிகளும், கூட்டங்களும், தனிப்பட்டவர்களும் ஒத்துழைக்கவேண்டியதன் தேவை எப்பொழுதும் இருந்து வந்திருக்கிறது. 1958ஆம் ஆண்டுச் சம்பவங்கள் இத்தேவைக்கு கீழ்க் கோடு இடுகின்றன. 1959ஆம் ஆண்டில் நிகழ்ந்த, நிகழும், நிகழப்போகும் சம்பவங்களில் தமிழரிடையே இப்போதிருப்பதைவிடக்கூடிய ஒத்துழைப்பு இருக்கவேண்டியது மிகவும் அவசியமாகிறது.

பரிபூரணமான ஒற்றுமை எய்துவது முடியாத காரியம். விறைப்பான ஒருமைவை எய்துவதும் இயலாத விஷயம். அது விரும்பத் தக்கதுமல்ல. பலனளிக்கக்கூடிய சகவாழ்வுக் கொள்கையே இப்பொழுது தேவைப்படுகிறது.

தற்சமயம் இயங்கி வரும் அரசியல் கட்சிகள், நாடிருக்கும் நிலைமையில், தங்கள் கொள்கைகளை விற்றுவிடுமென்ருே, இரண்டறக்கலந்து விடுமென்ருே எதிர்பார்க்க முடியாது. நமது நிலைமையைப் புனராலோசனை செய்து, வேண்டிய சில மாறுதல்களை உண்டாக்கி, ஒத்துழைப்புக்கு வழி தேடுவதே சிறந்த மார்க்கம். அரசியலில், எது நடை முறையில் மிகவும் எளிதானதோ அதுவே சிறந்ததாகும்.

தமிழரிடையே ஒத்துழைப்பை உண்டுபண்ணக் கூடிய வழி துறைகளை ஆராய்ந்து பார்க்கும் காலம் நெருங்கிவிட்டது. இந்நோக்கத்துடன் முன்பு நடந்த முயற்சிகள் தோல்வியடைந்து விட்டனவே என்று தயங்கக் கூடாது. ஒரு அரிய இலட்சியத்தை அடைய வேண்டுமானுல் அதற்காக எவ்வளவு பிரயத்தனங்கள் செய்தாலும் தகும். ஸ்கொட்டிஸ் தேச பக்தனுகிய ருெபேட் ப்ரூஸும் அவனுக்கு வழிகாட்டியாயமைந்த சிலந்தியும், எத்தனையோ தடவைகள் முயன்றும் வெற்றி பெருவிட்டாலும், மனம் சலிக்காது முயன்று ஈற்றில் வெற்றி பெற்ற கதையை நாம் நினைவிலிருத்தலாம்.

இம்முயற்சியில் அக்கறை கொண்ட தமிழர் உத்தியோகப் பற்றில்லாத முறையில் மாநாடு கூடிப்பேசவிரும்பினுல், அத்தகைய ஒரு மாநாட்டைக் கூட்டுவதற்கு நான் வேண்டிய உதவி செய்யக் காத்திருக்கிறேன். இவ்விஷயத்தில் ஆர்வங் கொண்டவர்கள் தங்கள் கருத்துக்களையும் எண்ணங்களையும் எனக்குத் தயவு செய்து தெரிவிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எஸ். சிவசுப்பிரமணியம்
கொழும்பு, 12.

### தீபாவளிக் கலை விழா

இவ்வாண்டு, இலங்கை வாஞெலித் தமிழ்ப்பகுதியினர் திருக்கோணமலையிற் கலைவிழாவை நடாத்தினர். சங்கீத,நடன, நாடக நிகழ்ச்சிகள் இடம் பெற்ற அவ்விழாவைத் திருக்கோணமலையில் நடத்துவதற்கு நன்றி தெரிவிக்க வேண்டிய அதே நேரத்தில் அதையிட்டு முக்கிய குறையொன்றையும் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

அவ்விழாவில் இடம்பெற்ற எல்லா நிகழ்ச்சிகளிலும், திருக்கோணமலைப் பட்டினத்தைச் சேர்ந்த பாடசாலைகளும் கலைச் சங்கங்களுமே பங்குபற்றின. பட்டினத்திற்கு வெளியே உள்ள கொட்டியாபுரப்பற்று, தம்பலகாமப்பற்று, கட்டுக்குளம்பற்றுக் கிராமங்களிலிருந்து எந்த நிகழ்ச்சியுமே இடம் பெறவில்லை. இப்படி ஒருவிழா நடக்கப்போவதாகவே அயற் கிராமங்கட்குத் தெரியாது. இதனுல் திருக்கோணமலைப் பகுதியின் கிராமிய நிகழ்ச்சிகள் இடம் பெருமல் கலைவிழா திருக்கோணமலையைப் பிரதிபலிப்பதாகவே இருக்கவில்லை. இந்தக் கலைவிழாவை நடாத்தியவர்கள் விட்ட மன்னிக்கமுடியாத குற்றம் இது.

இப்படியான விழாக்களை நடத்துபவர்கள் இனிமேலாவது கிராமங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வ. அ. இராசரத்தினம்.
மூதூர்.

### கோப்பாய் இடைத் தேர்தல்

கோப்பாய்த் தொகுதி இடைத்தேர்தல் வடபகுதி மக்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றது. 'திருமதி வன்னியசிங்கம் போட்டியிடும்போது மற்றவர்களுக்கு அத்தொகுதியில் என்ன வேலை?' என்று கூடச்சிலர், இத்தேர்தல் பற்றிப் பேசும் பொழுது கேட்கிருர்கள்! தனிப்பட்டவர்களின் மரணத்தை யொட்டி ஏற்படும் அனுதாபத்தைக் கட்சி வெற்றிக்காக அரசியல்வாதிகள் பயன்படுத்திக் கொள்வது வரவேற்கத்தக்கதல்ல. இந்தமாதிரியான சூழ்நிலையில் கோப்பாய்த் தொகுதியில் போட்டியிடும் திருமதி கோமதி வன்னியசிங்கம், தன்னைத்தானே பிரதிநிதித்வம் செய்து கொள்ளமுடியாது. அவர் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதியேயாவர், ஆகவே, தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை எதிர்க்கும் கட்

[15 ஆம் பக்கம் பார்க்க]

## ஹொரகொல்லைக்கு ஆயிரம் பேர் ஊர்வலம் பிரதமரின் கல்லறையைத் தரிசிக்க அனுராதபுர மக்களின் ஆர்வம்

### புதிய நகரில் குற்றங்கள் பெருகுகின்றன

— நமது நிருபர் —

அனுராதபுரம்

சமீபத்தில் நடைபெற்ற அனுராதபுரம் பௌத்த மண்டலத்தின் சிறப்புக் கூட்டம் ஒன்றில், ஹொரகொல்லைக்கு ஆயிரம்பேர் ஊர்வலமாக டிசம்பர் மாதம் 26 ஆம் தேதி அன்று சென்று காலஞ்சென்ற பிரதமரின் கல்லறையைத் தரிசிப்பது என முடிவு செய்யப்பட்டது.

திரு. நிஸங்கா பி. விஜேரத்தினுவின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மண்டலத் தலைவர் திரு. டபிள்யு. ஏ. பி. ஆரியதாச பேசுகையில், மறைந்த பிரதமரைச் சுட்டது ஒரு பௌத்த குருதான் என்றபோதிலும் அதற்காக பௌத்தர்களின் ஸ்தாபனமான 'சங்க' நிர்வாகத்தை முற்ருகப் பழிக்கக் கூடாது என்று குறிப்பிட்டார்.

தலைவர் பேசுகையில், "இறந்து போன தலைவரான திரு. பண்டாரநாயக்காவின் கல்லறையைத் தரிசிக்க இங்கிருந்து ஆயிரம்பேர் செல்வது சரித்திரத்தில் இடம்பெறும் அம்சமாக இருக்கும். ஏனெனில் "ஸ்ரீ சங்கபோவின் கல்லறையைத் தரிசிக்க இங்கிருந்து முன்னர் இதுமாதிரியான பெரும் ஊர்வலம் சென்றது மட்டும்தான் சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளது. பௌத்த குருமாரை அரசியலில் இழுக்கக் கூடாது என்ற விழிப்புணர்ச்சி இப்போது பெருகி வந்துள்ளது. பல்லாண்டுகளுக்கு முன்னரே நமக்கு இந்த விழிப்புணர்ச்சி வந்திருக்க வேண்டும் என்று நான் கூற விரும்புகிறேன்.

"இதை ஆதரித்து சாஸன கொமிஷன்சிபாரிசு செய்துள்ள யோசனைகளை சில பௌத்த சங்கங்கள் எதிர்க்கின்றன. இது விரும்பத் தக்கதல்ல. தங்களது சொந்த இலாபத்துக்காகப் பௌத்த குருமாரை அரசியலிலும் வியாபாரத்திலும் இழுப்பது மக்கள்தான். அவர்கள் தான் இனி அந்த "கைங்கரியத்தை"ச் செய்யாமல் இருக்க வேண்டும்!" என்ருர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், அனுராதபுரம் புனித நகரமாகப் புகழப்பட்ட போதிலும் அங்குதான் சகலவிதமான குற்றங்களும் அதிகரித்துக் கொண்டு வருவதைத் தான் அறிந்துள்ளதாகவும் அவற்றைச் சமாளிக்க நடவடிக்கைகள் எடுப்பதாகவும் கூறினுர். அவர் கூறியதாவது: "புனித நகரமாக்கப் படும் பழைய நகரில் அதிகமான கள்ளச் சாராய நிலையங்களும், விபச்சார விடுதிகளும் பெருகி வருகின்றன. அவற்றை ஊக்குவிப்பது மக்கள்தான். அவர்கள் தான் அதை அறவே ஒழித்துக்கட்ட வேண்டும்!"

### நீதிபதிக்குப் பிரியாவிடை

கடந்த எட்டாண்டுகளாக, அனுராதபுரம் மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிய திரு. வி. கே. கந்தசுவாமி திரு. பண்டாரநாயக்கா கொலை வழக்கை விசாரிக்கவிருக்கும் சிறப்பு நீதிபதிகளில் ஒருவராகப் போவதால் இவ்வார முற்பகுதியில் அன்னுருக்கு அனுராதபுரம் நீதி மன்றத்தில் வழக்கமான பிரியாவிடை அளிக்கப்பட்டது.

வழக்கறிஞர்கள் சார்பில் திரு. எஸ். நடராஜா, திரு. கந்தசுவாமியைப் பாராட்டிப் பேசினுர். திரு. கந்தசுவாமி நன்றி தெரிவித்துப் பேசுகையில் தனது உழைப்பில் தான் தவறு செய்யவில்லை என நம்புவதாகவும், அவ்வாறு நம்புவதற்கு வழக்கறிஞர்களினதும் பொலிஸ் அதிகாரிகளினதும் ஒத்துழைப்பும், அன்பும், மரியாதையுமே காரணம் என்றும் குறிப்பிட்டார்.

இம்மாதம் 26ஆம் திகதியிலிருந்து கொழும்புப் பிரதம நீதிபதி திரு. சி. வி. உடலகம அனுராதபுர மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றுவார்.

### அனுராதபுரம் வென்றது

அகில இலங்கை உதை பந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதல் ரவுண்டில் அனுராதபுரம் யுனைட்டட் யாழ்ப்பாணம் கிராஸ் ஹொப்பர்ஸ் கோஷ்டியை மூன்று கோல்களால் தோற்கடித்தது.

ஹென்றி குணசேகர, அலோசியஸ் வென்டகெட், டில்சன் சில்வா ஆகியோர் மூன்று கோல்களையும் போட்டனர். டி. மாணிக்கராஜா சிறப்பாக ஆடினுர்.

யாழ்ப்பாணம் கோஷ்டியின் பக்கத்தில் அவர்களது கப்டன் ஏ. பி. மனுவேல் பிள்ளையின் ஆட்டம் சிறப்பாக இருந்தது.

அனுராதபுரம் இனி மூன்ருவது ரவுண்டில் திருக்கோணமலைக் கோஷ்டியையோ, கண்டிக் கோஷ்டியையோ எதிர்த்து விளையாடும்.

# அடைமழையால் வடபகுதியில் அழிவு

## தலை தூக்கிய பயிர்கள் தாழ்ந்து மடிந்தன

### கீரிமலையில் விம்மி எழுந்த கடல் அலைகள்

— வி. என். பி. —

"கர்ணனுக்கு மிஞ்சிய கொடையுமில்லை; கார்த்திகைக்கு மிஞ்சிய மழையுமில்லை". யாழ்ப்பாணத்தில் வழங்கிவரும் இந்த முதுமொழி எவ்வளவு தூரம் உண்மையென்பதை ஒவ்வொரு வருடமும் தான் கண்டு வருகிறோம். ஆனால், இவ் வருடம் கார்த்திகை மாதத்தில் பெய்த மழைக்குப் பிறகு அதை முதுமொழியாக்காமல் என்றும் இளமை குன்றாத 'இளமொழி' யாக்க வேண்டும் போலத் தோன்றுகிறது.

கார்த்திகை மாதம் 4ஆம் நாள் (20-11-59) வெள்ளிக்கிழமை தொடங்கிய மழை ஆறு நாட்களாக அடித்துக் கொட்டியது. குளங்கள் நிரம்பின, வயல்கள் அழிந்தன, வீடுகள் விழுந்தன, கிணறுகள் வழிந்தன—அடைமழை பொழிந்தது.

தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் மேற்கு, பட்டினப் பகுதிகளில் மழையின் அட்டாதுட்டி அதிகரித்துக்கொண்டே வருகிறது. நிலம் ஈரத்தில் சுவறிப்போய் வீட்டுச் சுவர்களும், மதில்களும், மதவுகளும் சரிந்து விழுந்தவையும் விழாதவையுமாயிருக்கின்றன. கரையோரங்களில் வசித்த பலர் குடிபெயரும்ப நேரிட்டுவிட்டது. உள்நாட்டிலும் மண்வீட்டில் வசிப்பவர்களின் பாடு மிகவும் அந்தரமாயிருக்கிறது.

### பயிர்கள் அமிழ்ந்தன

ஒரு வாரத்துக்கு முன் தலை நிமிர்ந்துவிட்டோம் என்று துணிச்சலுடன் வெள்ளத்துக்கு மேல் எட்டிப் பார்த்த பசும் பயிர்கள் இருந்த இடம் தெரியாமல் மறுபடியும் வெள்ளத்தில் ஆழ்ந்துவிட்டன. ஓரளவுக்கு வளர்ந்து நாலைந்து இலை விட்ட பயிர்கள் வெள்ளத்தின் தாக்குதல் தாங்கமுடியாமல் தலை குனிந்து மடிந்துபோயிருப்பதையும், குருத்துக் கக்கிய பயிர்கள் படைபடையாக தெருவோரங்களில் வந்து குவிந்திருப்பதையும் பார்க்க நெஞ்சம் குமுறுகிறது! பணமுள்ளவர்கள் யானை விலை, குதிரை விலை கொடுத்து நாற்று வாங்கி நடுகிறார்கள். பணமில்லாதவர்கள் நடப்பது நடக்கட்டும் என்று வாளாவிருக்கிறார்கள். கிளிநொச்சி பரந்தன் முதலிய வன்னிப் பிரதேசங்களிலிருந்து லொறிகளில் கொண்டு வரப்பட்டு ஒரு பிடி நாற்று 35 சதமாக விற்கப்படுகிறது. பிடியில் ஆகக் கூடியது 100 பயிர்கள் தானிருக்கும். இளம் நாற்றானால் இலகுவில் வேரூன்றித் தழைத்து விடும். முற்றிய பயிர் தலையெடுப்பது சிரமம்.

இந்த ஆறு நாட்களாக சூரியன் எந்தத்திசையிலிருக்கிறதென்பதே தெரியாதவாறு கார்மேகங்கள் வானில் படர்ந்திருக்கின்றன. சனி, ஞாயிறு போன்ற கடுமழை இல்லாவிட்டாலும் அடிக்கடி தூறல் போட்டுக் கொண்டேயிருக்கிறது. இப்படியே இன்னும் சில நாட்களுக்கு மழை பெய்தால் யாழ்ப்பாணத்தில் பெரு வெள்ளம் உண்டாவது நிச்சயம்.

### அந்தோ! ஐயகோ!

சுதுமலை அம்மன் கோவிலைச் சுற்றி ஒவ்வொரு வருடமும் மாரி காலத்தில் வெள்ளம் நிற்பது வழக்கம். இவ் வெள்ளத்தைக் கடலுக்கு வெட்டி விடுவதற்காக சில வருடங்களுக்கு முன்பு ஒரு லட்சம் ரூபாய் செலவில் வாய்க்கால்கள்வெட்டிப் பிரமாதமான வேலைகள்நடந்தன. ஆனால்இன்றும் மூன்று மைல் சுற்றளவுக்கு வெள்ளம் வியாபித்து நிற்கிறது. சென்ற வருடம் வெள்ளம் இல்லாதபடியினால் இங்கே பரப்புக்கு 3 பறை நெல் விளையக் கூடிய முறையில் பயிர்கள் செழித்தோங்கி நின்றன. ஆனால், இன்று பயிரின் பச்சனவுக்குப் பதிலாக வெள்ளத்தின் மஞ்சளே தோற்றமளிக்கிறது. இவ் விபரீதக் கதை இங்கு மட்டுமன்று- இலங்கை முழுவதிலும்தான். களனி ஆற்றில் வெள்ளம் வந்தபின் தான் "அந்தோ ஐயகோ" என்று கரை கட்ட ஓடுவார்கள். அதற்கிடையில் வெள்ளம் தன் அழிவுவேலையை செய்து விட்டுப் போய்விடும். பிறகு வெள்ளத்தில் சேதமுற்றவர்களுக்கு நிவாரணமளிப்பார்கள். இத்தனை வருட காலமும் அளித்து வந்த நிவாரணப் பணத்தில் அரைவாசியைச் செலவு பண்ணி, எமது என்ஜினியர்மாருக்கு முடியாவிட்டால் பிற நாட்டு நிபுணர்களைத் தருவித்து, இந்த வெள்ளக் கொடுமைக்கு ஒரேயடியாக முற்றுப் புள்ளி வைத்துவிட எமது அரசாங்கங்கள் ஏனோ நினைக்கவில்லை!

### கீரிமலையிற் சேதம்

வாடைக் காற்றின் முழு மூச்சையும் எதிர்த்து நிற்கும் வட பகுதி பட்டினங்களாகிய பருத்தித்துறை, காங்கேசன் துறை, கீரிமலை ஆகிய இடங்களில் மழையும் கடலும் காற்றும் சேர்ந்து அழிவு கொடுக்கும். அரைப் பனை உயரத்தில் ஓங்கி வந்து இடிக்கும் அலைகள் கரையோரங்களிலுள்ள மரங்களையும், கட்டடங்களையும், மீன் பிடிப்போர் குடிசைகளையும் தவிடு பொடியாக்கி விட்டன. கீரிமலையில் உல்லாசப் பிரயாணிகள் நீராடும் தடாகத்துக்கே இம்மழை சேதம் இழைத்து விட்டது. தடாகத்தைச் சுற்றிவர இரும்பு சலாகைகளில் நிறுத்தப்பட்ட விளம்பரங்கள் இரவோடு இரவாகச் சரிந்து விழுந்து விட்டன. பல இடங்களில் நிலம் நொய்ந்து போய் தடாகப் படிக்கற்கள் புதைந்து போய்க் கொண்டிருக்கின்றன. கடும் மழையின் போதெல்லாம் விம்மி வரும் கடலலைகள் நேரே தடாகத்துள் வந்து உடைந்தன. தடாகத்து நன்னீரும் கடல் நீரும்சங்கமமாகும்வாய்க்காலில் நீரைத் தடுப்பதற்கு வைக்கப்பட்ட பெரிய பாறைக் கற்கள் வெள்ளத்தால் அடியுண்டு கடலுக்குள்விழுந்து விட்டன.

### புயல் அடிக்குமா?

வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்படாத இடங்கள் மேட்டுப் பாங்கான இணுவில், சுன்னாகம், உரும்பிராய் முதலிய செம்மண் பகுதிகளேயாகும். இப்பிரதேசத்துக்கும் ஆபத்தென்றால் அப்புறம் காய் கறிகளைக் கனவிலும் நினைக்க முடியாது. மேடான நிலமென்பது ஒருபுறமிருக்க, இங்குள்ள செம்மண் தரை அதிகமாங் கையுள்ளதாகையினால் எவ்வளவு மழை பெய்தாலும் அது நீரை விரைவில் உறிஞ்சி விடுகிறது. ஆனால் இங்கும் காற்று பலமாக அடித்தால் வினைவந்து விடும். வாழைகளும் மரவள்ளிகளும் முறிந்துவிடும். மழை இப்பொழுதிருக்கும் நிலையைப் பார்த்தால் ஒருபுயல் காற்று அடித்து ஓய்ந்தால் தான் அதுவும் வெளிக்கும் போலத் தெரிகிறது.

# புதிய பொதுத் தேர்தலில் எந்தக் கட்சி வெற்றி பெறும்?

## தலதாபன தேர்தல் ஜுரம் பல நகரங்களில் அதிகரித்தல்

கொழும்பு மாநகர சபை தேர்தலுக்கான வேலைகளில் எல்லா அரசியல் கட்சிகளும் முழுமுயற்சியுடன் ஈடுபட்டுள்ளன. ஈராண்டுகளுக்கு முன்னர் அரசாங்கத்தால் கலைக்கப்பட்ட மாநகரசபைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் இம்மாத 25-ம் திகதி ஏற்றுக் கொள்ளப் பட்டது.

வலதுசாரிக் கட்சிகளை எவ் விதத்திலும் முறியடிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் மற்ற எல்லாக் கட்சிகளும்பாடுபடுகின்றன. இத்தனை நாட்கள் முடிவு செய்யாமலிருந்து, இப்பொழுது 37 வட்டாரங்களிலும் போட்டியிடப் போவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அறிவித்துள்ளது.

யு. என். பி. கட்சியும் எல்லாத் தொகுதிகளிலும் அபேட்சகர்களை நிறுத்துமாம். வலதுசாரிகளுக்குள்ளும் ஒரு தேர்தல் ஒப்பந்தம் ஏற்படக்கூடும்.

கொம்யூனிஸ்ட் கட்சி அதிக பலமுள்ள வட்டாரங்களில், லங்காசமசமாஜக் கட்சியும், லங்காசமசமாஜக் கட்சிக்குச் செல்வாக்குள்ள தொகுதிகளில் கொம்யூனிஸ்ட் கட்சியும் போட்டியிடமாட்டா எனத் தெரிகிறது.

திரு. பிலிப் குணவர்த்தனவின் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன (எம். ஈ. பி) என்ற பெயரில் சில தொகுதிகளில் போட்டியிடும் என அறியப்படுகிறது.

கொழும்புநகரில் மொத்தம் 1,75,121 வாக்காளர்கள் உள்ளனர். தேர்தல் அடுத்தமாதம் 19-ம் திகதி நடைபெற விருக்கின்றது. புதிய மாநகரசபையின் முதற் கூட்டம் அடுத்த ஆண்டு ஜனவரியில் நடைபெறும்.

எதிர்வரும் பொதுத்தேர்தலின் முடிவுகளை அறிவதற்கு இந்த மாநகரசபைத் தேர்தல் உதவும் என நம்பப் படுகின்றது.

இதே வேளையில் நாட்டின் பலபாகங்களிலும், ஸ்தலஸ்தாபன சபைகளின் தேர்தல்களுக்கான வேலைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. வெளியூர், நகர, பட்டினகிராமச் சபைகளில் பலர் கட்சிச்சார்பில் போட்டியிடாவிட்டாலும், இவைகளும் எதிர்காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக அமையும்.

இவ்வாண்டு இறுதிக்குள் 32 ஸ்தலஸ்தாபன சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறும் எனத்தேர்தல் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு, வதுளை, மாத்தளை, அட்டன்-டிக்கோயா, காங்கேசன்துறை, பருத்தித்துறை, ஆகிய நகரங்களில் தேர்தல் ஜுரம் அதிகரித்து வருகிறது.


## டியூஷன்

எஸ். எஸ். ஸி. prep. எஸ். எஸ். ஸி. மாணவர்களுக்கு வீட்டில் வந்து டியூஷன் சொல்லப்படும். கணிதம், Mathematics, Physics, Chemistry.

"TUTOR"

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Phone: 348. 14


# பிரிட்டிஷ் நாடகக் குழு

## கொழும்பு வந்துள்ளது

'ஒக்ஸ்போர்ட் பிளேஹவுஸ்' எனும் ஆங்கில நாடகக் கொம்பனி இங்கிலாந்திலிருந்து இலங்கை வந்து சேர்ந்துள்ளது. இங்கிலாந்தில் பிரசித்தி வாய்ந்த நாடகக் குழுக்களில் ஒன்றாக விளங்கும் இக் கொம்பனி, கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தமது நாடகங்களை அரங்கேற்றுவார்கள். இங்கிலாந்திலிருந்து நெடுந்தூர பிரயாணத்தில் இவ்விதம் புறப்பட்டுள்ள முதல் தியேட்டர் குழு இதுவேயாகும். இலங்கையிலிருந்து இவர்கள் இந்தியா, ஜப்பான் முதலிய ஆசிய நாடுகளுக்கும் விஜயம் செய்யவிருக்கிறார்கள்.

உலகப் புகழ் வாய்ந்த ஆங்கில நாடக ஆசிரியரான ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் சிலவற்றையும், ரி. எஸ். எலியற் எனும் பிரபல ஆங்கில நாடகாசிரியரின் நாடகமொன்றையும் இவர்கள் இலங்கை மேடைகளில் நடித்துக் காட்டுவார்கள்.

டிசம்பர் 5-ஆம் திகதியன்று இந்நாடகக் கொம்பனியார் யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் ஷேக்ஸ்பியரின் நாடகமான 'பன்னிரெண்டாவது இரவு' (Twelfth Night) எனும் நாடகத்தை நடிப்பார்கள்.

---

# செம்மணி உப்பளத்தில் இவ்வாண்டுநல்லவிளைச்சல்

யாழ்ப்பாணம்

காற்று, நீர் இவற்றைத் தவிர மனிதனுக்கு அவசியம் தேவையான ஒரு பொருள் உப்பு. உப்பில்லாத வாழ்க்கை உப்புச் சப்பற்றதாய் விடும். உப்பு உணவுக்குச் சமானமானது. ஏன், "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்று சொல்லுகிறோமல்லவா?

இத்தகைய உப்பானது இவ் வருடம் யாழ்ப்பாணத்தில் ஏதேஷ்டமாக விளைந்திருக்கிறது. செம்மணி உப்பளத்தில் சென்ற 1956-ம் ஆண்டில்தான் ஆகக்கூடிய தொகை உப்பு விளைந்ததாகக் கருதப்பட்டது. ஆனால் இவ் வருடம் அத் தொகையையும் மீறி 40,000 அந்தர் உப்பு செம்மணியில் விளைந்தது.

—ந. நி.

# 'பல்கலைக் கழகம் சம்பந்தமாக் இருவரில் ஒருவர் விட்டுக் கொடுக்க வேண்டும்'

—சுவாமி சச்சிதானந்தா

— நமது நிருபர் —

அப்புத்தளை

"போதுமென்ற மனமே பொன் செய் மருந்து" என்பது பழமொழி. ஆனால் ஆசைக்கோ அளவில்லை. நிலத்திலும் நீரிலும் ஆட்சிசெலுத்திய மனிதன் இன்று விண்ணையும் ஆளுகின்றான். ஒரு நாட்டின் மேல் விமானம் பறந்தால், அந் நாட்டுக்குரியவன் குதித்தெழுகிறான். விண் யாருக்குச் சொந்தம்? விஞ்ஞானம் தேவைதான், ஆனால் அதை ஆசையை ஒழித்துச் செய்யவேண்டும். பல லட்ச ரூபாய் செலவிட்டு அணு குண்டைத் தயாரித்து மனிதனை ஒழிக்கமுற்படுவதை விட்டு ஆக்கசக்திகளுக்கு அதனை உபயோகிக்க வேண்டும். விஞ்ஞானத்தால் உலகம் கெடவில்லை. விஞ்ஞானத்தைப் பயன்படுத்தும்மனத்தால்தான் கெடுகிறது" இவ்வாறு பண்டாரவளை, விவேகானந்த மாணவர் விடுதியின் ஆண்டுவிழாவில் யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தா குறிப்பிட்டார். பண்டாரவளை நகரசபைத் தலைவர் திரு. எஸ். எம். நடராஜா இக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

அன்பு எப்போது நாடெங்கும் பரவிப் பின்னர் உலகெங்கும் வியாபிக்கிறதோ அன்றே மனிதன் பூரணத்துவம் பெறுவான் எனச் சுவாமி சச்சிதானந்தா கூறினார்.

தமிழ் பல்கலைக் கழகம் பற்றி சுவாமி சச்சிதானந்தா கூறியதாவது: தமிழரிடையே ஒற்றுமையில்லை. ஒற்றுமையைப் பற்றிப் பேசிக்கொண்டே வேற்றுமையை வளர்க்கின்றோம். நம்மை நாமே திருத்திக் கொள்ள வேண்டும். பல்கலைக் கழகம் சம்பந்தமாக இருவரில் ஒருவர் விட்டுக் கொடுக்க வேண்டும். ஒன்றை அமைத்து விட்டுப் பின்னர் மற்றதை அமைக்க முயலலாம். சாதிப் பாகுபாடு தமிழினத்தின் சாபக்கேடு என்றும் அதை ஒழிக்காதவரையில் தமிழினம் ஒற்றுமை ஏற்பட்டு முன்னேற முடியாதெனவும் கூறினார்.

கண்டி நல்லாயன் கல்லூரி ஆசிரியை திருமதி ரூபராணி ஜோசப் பேசும்பொழுது, கல்வியின் நோக்கம் உத்தியோகம் பெறுவதாக மட்டுமிருக்கக் கூடாதென்றும், ஏட்டுக் கல்வியுடன் வாழ்க்கைக் கல்வியும் மிக அவசியமானதெனவும்கூறித் தொழிற்கல்வியின் அவசியத்தை வற்புறுத்தினர்.

போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கு சுவாமிஜி பரிசு வழங்கியதுடன் விவேகானந்தரின் உருவப் படமொன்றையும் திறந்து வைத்தார்.

---

# வேலை நிறுத்தம்

## சமரச ஒப்பந்தத்தின் பின் கைவிடப்பட்டது

அப்புத்தளை

கபரகலைப் பிரிவைச் சேர்ந்த ரெங்கையா என்ற தொழிலாளி தோட்ட நிர்வாகிகளால் தாக்கப்பட்டதன் விளைவாக, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் யூனியன், இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த, பூனாகலை தோட்டத்தின் ஒன்பது பிரிவுகளிலும் வேலை செய்யும் 2620 தொழிலாளர் மூன்று தினங்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

தோட்ட நிர்வாகிகளும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் ஒரு சமரச ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட பின்னர், வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

—ந. நி.


For Dentures of Perfection (full or partial)

Contact

V. KATHIRVEL PILLAI (of Tellippallai East) at Koddady, — Jaffna.

Ill fitting dentures set right and broken dentures repaired. Charges moderate. Trial Solicited.

15

தொடர் கதை

# துறைக்காரன்

வ. அ. இராசரத்தினம்

## 12. சிறைச்சாலை என்ன செய்யும்?

என்ன கோரமான காட்சி. கடற்கரை வெண்மணலிற் பச்சைரத்தம் உறைந்துபோய்க் கிடந்தது. இரத்த வெள்ளத்தில் அம்மனிதன் கிடந்தான். அவனைச்சுற்றி நின்ற நால்வரும் செய்வதறியாமற் திகைத்துப் போய் நின்றார்கள்.

வேலாயுதம் பரபரப்போடு, தரையிலே குற்றுயிராகக் கிடந்து முனகும் காட்டுவிலங்கைப் போலக் கிடக்கும் அம்மனிதனைக் கூர்ந்து நோக்கினான்.

அங்கு முகமா இருந்தது? முகத்தை அடையாளங் கண்டு கொள்ளமுடியாதபடி சின்னாபின்னமாய், இரத்தக்கறை படிந்து......ஐயோ!

வேலாயுதம் அம்முகத்தைக் கூர்ந்து நோக்கினான்.

அத்தனை கோரத்தினிடையேயும் அந்த நினைவு முகம் அவனுக்குப் பளிச்சிட்டது.

போனவருஷத்தில் ஒருநாள் வேலாயுதம் திருக்கோணமலைக்குப் போயிருந்தான். கந்தோருக்குச் சென்று 'இஞ்சினியரிடம்' புது வள்ளத்தைப் பற்றிப் பேசிவிட்டு கோட்டு வீட்டுப் பக்கமாகப் போனான். ஆலமரத்தின் கீழேஅவனுக்குத் தெரிந்த பல முகங்கள் நின்றன. என்னவோ ஏதோ என்று தெரிந்து கொள்வதற்காக அந்தப் பக்கம் போய்ப் பார்த்தான்.

கோட்டுக்குள்ளே குற்றவாளிக் கூண்டிலே இஸ்மாயிலை நிறுத்திவைத்திருந்தார்கள். மீன் பிடிக்கத் தெரியாத, காற்சட்டைபோட்ட மீன்பிடி இலாக்கா உத்தியோகஸ்தர்கள் வழக்காளியாக இருந்து அவனிடம் ஆயிரம் குறுக்குக் கேள்விகள் கேட்டார்கள்.

அவர்கள் கேட்டதற்கெல்லாம், தைரியமாக, ஆறுதலாக பணிவாக விடை சொல்லிக் கொண்டிருந்த இஸ்மாயிலின் முகம்......இளமையும் அழகும் சொட்டும் அவன் சிவந்த முகமும் அரும்பு மீசையும்...
ஐயோ! அந்த முகம் எத்தனை அலங்கோலமாகிவிட்டது. திரும்பவும் அந்த முகம் தன் பழைய அழகைப் பெறுமா?

வேலாயுதத்தின் எண்ணங்கள் இப்படி ஓடியபோது, கூடவே, இஸ்மாயிலின் உடம்பில் இன்னமும் உயிர் இருக்கிறதா என்ற சந்தேகமும் வேலாயுதத்திற்குத் தோன்றியது. ஆம். முனகற் சப்தங் கூட அடங்கிவிட்டதே!

வேலாயுதம், தன்கையை இஸ்மாயிலின் மூக்கிற்கு நேரே பிடித்து மூச்சு வருகிறதா என்று சோதித்துப் பார்த்தான். நல்ல காலமாக மூச்சு வந்துகொண்டிருந்தது.

இதற்குள் இஸ்மாயிலைச் சுற்றிச் செயலிழந்து நின்ற அவன் நண்பர்கள் சுறுசுறுப்படையத் தொடங்கினார்கள். சட்ட விரோதமானதொழிலைச்செய்ய வந்த இடத்தில் பேராபத்திற் சிக்கிக் கொண்ட அவர்கள், ஒன்றில் இஸ்மாயிலை அப்படியே விட்டு விட்டு ஒன்றுமே தெரியாதவர்கள் போல அவ்விடத்தை விட்டு ஓடவேண்டும். அல்லது, இஸ்மாயிலையுந் தூக்கிக் கொண்டு எவருக்குந் தெரியாமல் வீட்டுக்குப் போக வேண்டும். தப்பித்தவறி விஷயம் பொலிசுக்கென்றும் அரசாங்கத்திற்கென்றும் போய் விட்டால், அந்த நால்வரும் கம்பியெண்ண வேண்டியது தான்.

ஆனாலும் அவர்கள், படுகாயப்பட்ட தங்கள் கூட்டாளியை அவ்விடத்திலேயே விட்டுவிட்டுப் போவதற்கு அத்தனை மனிதத்தன்மை இல்லாதவர்களல்ல.

எனவே, அவர்கள் இஸ்மாயிலை அப்படியே தூக்கினார்கள். கரையிலே நின்ற வள்ளத்திற்குள் வைக்கும்போது தான் இஸ்மாயிலின் வலது கை முழங்கைக்குச் சற்றுக் கீழே அப்படியே துண்டிக்கப்பட்டிருப்பதை வேலாயுதம் கண்டான்.

அதைக் கண்டதும் வேலாயுதம் தன்னை அடக்கிக் கொள்ளமாட்டாதவனாய் ஐயோ! என்று தொடங்கி விம்மி விம்மி அழ ஆரம்பித்தான்.

தோணிக்குள்ளிருந்த இஸ்மாயிலின் நண்பர்களில்ஒருவன் ஆக்ரோசத்தோடு கத்தினான். "நீ சத்தம் போட்டு எங்களைப் புடிச்சிக் குடுத்திராத. விசயம் வெளியில் வந்திச்சோ, பிறகு நீ இல்ல"

அடுத்தவன்—அவன் கிழவன். குழைந்த குரலிற் பரிதாபகரமாகச் சொன்னான். "பொழைக்க வந்த எடத்தில் இப்படி நடந்துபோச்சு தம்பி. அவன் விதி அவ்வளவுதான். அதுக்கு நாம் என்னசெய்றது? நாங்க எப்படியும் எவர் கண்ணிலும் படாமல் வீட்டுக்குப் போயிடுறோம். விஷயம் வெளியில வாறதென்று உன்னால தான் வரவேணும். நீ அதை வெளிக்கிடுத்தி எங்களையெல்லாம் ஒரு வருஷத்துக்குக் கம்பி எண்ண வைச்சிராதை. நாங்க புள்ளகுட்டிக்காரர்"

அந்தக் கிழவன் விக்கி விக்கிப் பேசி முடித்தான். அவன் கண்கள் தாரைதாரையாகநீரை வடித்தன. அந்தக் கிழவன் இஸ்மாயிலின் நெருங்கிய உறவினனாக இருக்கலாம்.

அந்தக் கிழவனையும் அவன் பேச்சையும் கேட்டதும், வேலாயுதத்திற்கு எங்கிருந்தோ ஒரு திடச் சித்தம் வந்து புகுந்து கொண்டது. ஆம்; வேலாயுதம் எதற்கும் என்றைக்குமே கடவுளை நம்புபவன். எல்லாம் விதிப்படி நடக்கும் என்பதிலும் நம்பிக்கையுள்ளவன். இஸ்மாயிலின் விதி அவ்வளவு தான் என்று இருந்தால், நாம் ஏன் இவ் விஷயத்தைப் பகிரங்கப்படுத்தி மற்றைய நால்வரையும் சங்கடத்தில் ஆழ்த்த வேண்டும்? என்று அவன் எண்ணினான். அந்த எண்ணத்தில் தன் வலது கையை முன்னால் நீட்டி, விரல்களை யெல்லாம் நீட்டி விரித்தபடியே "கோணேசர் ஆணையா நான் இதை எவருக்குமே சொல்லமாட்டேன்" என்றான்.

வேலாயுதத்தின் வாக்கில், அந்த நால்வருக்கும் நம்பிக்கை ஏற்பட்டதுபோலத் தோன்றிற்று. அவர்கள் பரபரப்பாக வள்ளத்தைச் செலுத்திக் கொண்டு தங்கள் ஊரை நோக்கிப் புறப்பட்டார்கள். வள்ளம் நீரைக் கிழித்துக் கொண்டு வேகமாகச் சென்று கொண்டிருந்தது. வேலாயுதம் திகைத்துப்போய் அவ்விடத்திலேயே நின்றுகொண்டிருந்தான்.

சற்றுநேரம் அப்படியே அசையாமல் நின்ற வேலாயுதம் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு, கடற்கரையோரமாகத் தன் தோணியை நோக்கி நடந்தான். மெல்லிய கொண்டற் காற்றின் அசைவிற் சப்தமின்றிக் கரையை நோக்கித் தன் கால்களைக் கழுவிச் செல்லும் கடலலைகளையோ, வாடைக் காற்றில் ஒதுங்கிக் கிடக்கும் சின்னஞ் சிறு தடிகளும் கட்டைகளும் தன் காலில் இடறுவதையோ உணரமாட்டாதவனாக வேலாயுதம் நடந்தான். அவன் மனதுள்ளே இஸ்மாயில்நிறைந்திருந்தான்!

ஒரு வருடத்துக்கு முன்னால் அவன் கோட்டிலேசொன்னான்: "எனக்கு வேறு தொழில் தெரியாது; மீன் பிடிக்கும் வலை, வள்ளம், தூண்டில் வாங்கவும் என்னிடம் முதல் இல்லை. இந்தத் தொழிலைச் செய்யாவிட்டால், நானும் என் குடும்பமும் பட்டினி கிடந்துதான் சாகவேண்டும்" என்று.

அவன் வாக்குமூலத்தை உற்றுக் கேட்டுக் கொண்டிருந்த நீதிபதி இடையிலே ஒரு கேள்வி கேட்டார்.

'டைனமற் வாங்கப் பணம் வேண்டாமா? "அதுக்கு அறுபதுசதம் போதும் ஐயா; அந்த அறுபது சதம் செலவழித்தால் என் குடும்பத்துக்குச் சோறு கிடைக்கும்?"

நீதிபதியின் இடைக்கேள்வியையும், இஸ்மாயிலின் வாக்குமூலத்தையும் பார்த்தால், நீதிபதி அவனை மனப்பூர்வமாக மன்னித்துவிடுவார் என்றே வேலாயுதம் நினைத்துக்கொண்டிருந்தான். வேலாயுதம் மட்டும் நீதிபதியாக இருந்தால், இஸ்மாயிலை மன்னித்தே இருப்பான். அல்லாவிட்டால் இரண்டடி கொடுத்து இனிமேல் 'டைனமற்' போடாதே என்று புத்திசொல்லி, இஸ்மாயிலுக்கு வள்ளமும் வலையும் தூண்டிற் கயிறும் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்திற்கோ அல்லது வேறுயாருக்கோ கட்டளை பிறப்பித்திருப்பான். ஆனால் நீதிபதி அப்படிச் செய்தாரா? அவர் சட்டம் படித்தவர். சட்டந் தெரிந்தவர். அவரால் வேலாயுதத்தைப் போல மனிதத் தன்மையுடன் நடந்துகொள்ள முடியாது. சட்டப்படி நடக்கத்தான் அவரால் முடியும். எனவே சட்டப்படி அவனுக்கு ஆறுமாதம் சிறைத் தண்டனை விதித்தார்.

வேலாயுதத்தின் நெஞ்சம் விம்மிக்கொண்டு வந்தது. விம்மிப் பொருமிய அவன் நெஞ்சத்தின் ஆவேசமும், உத்வேகமும் திரிபுரங்களை யெரித்த முக்கண்ணனின் நெற்றிக்கண் சிரிப்பாக வெளிவந்தது. வேலாயுதம் சிரித்தான், சிரித்துக் கொண்டே கேட்டான். 'நீதிபதி, இஸ்மாயிலுக்கு ஆறுமாதத்துக்குச் சிறைத்தண்டனை என்று தீர்ப்பளித்தாரே; அவனுடைய குடும்பத்திற்கு ஆறுமாசத்திற்கும் பசிக்கவே கூடாது என்று அவராற்கட்டளையிட முடியுமா?'

ஆனால் அவன் கேள்விக்கு, முன்னால் விரிந்து கிடக்கும் நீலக்கடல்கூட வாய்விட்டுப் பதிலளிக்க முடியாதபடி மௌனமாகத்தான் அசைந்து கொண்டிருந்தது.

ஆத்திரம் அடங்கியதும், வேலாயுதத்தின் சிந்தனைகள் மீண்டும் தொடர்ந்தன.

ஆறுமாதங்கள் சிறையிலிருந்து வந்த இஸ்மாயில் மறுபடியும் ஏன் இந்தத் தொழிலைச் செய்ய வேண்டும்? தன்மட்டிலேயே இந்தத் தொழில் மிக அபாயகரமானது. அப்படியும் அபாயத்திற்குத் தப்பி, அரசினர்கையிற் பிடிபட்டாலோ சிறைவாசம்... அப்படியிருந்தும் இந்தத் தொழிலை இஸ்மாயிலைப் போன்றவர்கள் ஏன் திரும்பித் திரும்பிச் செய்ய வேண்டும்?

இதன் மூலகாரணம் நீதிபதிக்குத் தெரியாமலே இருக்கலாம். ஆனால் இஸ்மாயிலுக்குத் தெரிந்திருந்தது. அன்றைக்கு அவன் கோட்டிலே சொன்னதை, வேலாயுதம் இப்போது தனக்குள்ளேயே ஆமோதித்தான். ஆம், வயிறு ஒன்று இருக்கிறது. அதன் கொதிப்பை எப்படியும் ஆற்றியே தீர வேண்டும். அதற்காகக் களவெடுக்க வில்லை, பொய் சொல்ல வில்லை தம் உயிரையே திரணமாக மதித்துப் போராடுகின்றனர், இந்தப் பிராந்தியத்து மக்கள். அவர்களின் தீரத்தைப் பாராட்டாமல், அர்த்தமின்றித் திரும்பத் திரும்பச் சிறைச்சாலைக்கு அனுப்பிக் கொண்டு...

வேலாயுதத்தாற் பொறுக்கவே முடியவில்லை.

ஒரு வருடமா இரண்டு வருடமா? ஐம்பதாண்டுகளுக்கு மேலாகத்தான் 'டைனமற்' போடுகிறவர்களைச் சிறைக்கனுப்பிப் பார்க்கிறார்கள். ஆனாலும் அவர்கள் அத் தொழிலைச் செய்யாதிருக்கிறார்களா? குடாக் கரையிலுள்ளவர்கள் வீடு வேய்வதென்றால், பத்துப் பேர் கிடுகு கட்டும் கூரையில் இருபது பேர் இருக்க வேண்டும் என்று, ஆண்டுக்கணக்காக, பழமொழி போலவே இங்கே பேசிக் கொள்கிறார்கள். ஏனென்றால் டைனமற் வெடி போட்டு அவர்கட்கெல்லாம் ஒற்றைக் கைதான் உடலோடு இருக்குமாம். இன்னமும் அந்தக் காலத்திலே டைனமற் வெடிக்குப் போகிறவர்கள், கூடவே பலகையும் வெள்ளைச் சேலையும் கொண்டு போவார்களாம். தற்செயலாக உயிருக்கு ஊறு நேர்ந்தாற் பிரேதத்தைக் கடற் கரையிலேயே அடக்கம் பண்ணுவதற்காக. அப்படிக் கையைக் கொடுத்தும், ஏன் உயிரையே கொடுத்தும், இன்னமும் அவர் சந்ததியினர் அந்தத் தொழிலையே செய்து கொண்டிருக்கிறார்கள்? அவர்கள் எல்லோருக்கும் சொந்தமாக வலையும் வள்ளமும் இருந்தால் இதைச் செய்வார்களா? உயிர் என்ன, இந்த மனிதர்கட்கு அத்தனை மதிப்பற்றதாகவா போய் விட்டது?

வேலாயுதத்திற்குத் தர்மலிங்கம் வாத்தியார் சொன்னது ஞாபகம் வந்தது. இலங்கையிலுள்ள மக்கட்கு மீன் பிடிப்பதிற் பயிற்சியளிப்பதற்காக வேறு ஒரு அரசாங்கம் உதவியளிக்கிறதாம். நைலோன் வலைகளும், மீன் பிடிக்கும் இயந்திரப் படகுகளும் வந்திருக்கின்றனவாம்.

அப்படியானால், இந்தப் பகுதிகளிலுள்ளவர்களுக்கும் பயிற்சியளித்து,மீன்பிடிப்படகுகளும் வலையும் அரசாங்கம் கொடுக்கக் கூடாதா? வயிற்றுப்பாட்டுக்கு வழி காட்டாமல், மறியலுக்கு அனுப்புவதன் மூலம் உலகில் எதையுமே தீர்த்து விட முடியாது! தர்மலிங்கம் வாத்தியார் வரட்டும்! அவரிடம் இந்த விஷயத்தைக் கேட்டுப் பார்க்க வேண்டும்.

இப்படித் தீர்மானித்துக் கொண்டே வேலாயுதம் தன் தோணி கட்டப் பட்டிருந்த இடத்திற்கு வந்து விட்டான்.

பொழுது சற்றுச் சாய்ந்திருப்பினும், வெய்யிலின் அகோரந் தணியவில்லை. இஸ்மாயிலின் நினைவின் உட்புழுக்கம் சேர்ந்து கொண்டு வேலாயுதத்தை வதைத்தது. படுக்கவும் முடியாதவனாக வெம்பிக் கொண்டு தன்னந்தனியாக எத்தகைய இலக்குமின்றி வள்ளத்தை அக் கரைக்குக் கொண்டு போனான்.

(தொடரும்)


'ஹென்றலி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்றலி

★ சேட்
★ ஷோட்ஸ்
★ காற்சட்டை

ஹென்றலி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றலி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினாலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்றலி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.

# பெண்மையைப் போற்றிய தமிழன் கண்ட உண்மை

## மக்கள் சமுதாயம் தோன்றி, நிலைத்து, ஒடுங்குவதற்கு தாயே காரணம்

— கலைப்புலவர், க. நவரத்தினம் —

**உலகம் இன்று சமாதானத்தையும் அமைதியையும் பெரிதும் நாடி நிற்கின்றது. மக்கள் இல்லங்களில் சமாதானமும், அமைதியும் ஏற்படாதிருக்கும் வரை வெளி உலகத்தில் சமாதானம் ஏற்படுவது அசாத்தியம். இல்வாழ்க்கை தூய்மையடைதல் வேண்டும்.**

எந்த வீட்டில் மாதர்கள் பாராட்டப்பெற்றுச் சந்தோஷத்தையடைகின்ருர்களோ, அந்த வீட்டில் எல்லாத் தெய்வங்களும் சந்தோஷத்துடனும் வசிக்கின்ருர்கள்.

(மது. 3, 56.)

இந்து சமயத்தின் ஒருபிரிவு சாக்தம். சக்தியாகிய பராசக்தியை முழுமுதற் பொருளாக வழிபடும் சமயம் சாக்தம் எனப்படும். கடவுளைத் தாயாக வழிபடும் பெருமை இந்து சமயத்தில் காணப்படும் சிறப்புகளிலொன்று. பரம் பொருளாகிய பரமசிவம் சக்தியின் மூலமே உலகத்தைப் படைத்துக் காத்து, அழித்து, அருள் செய்கின்ருர் என்பது சைவ சித்தாந்தங் கூறும் உண்மை முடிபுகளிலொன்ருகும். பராசக்தியாகிய அம்மை உலகத்தை ஈன்றும், அழியாத கன்னியாக விளங்குகின்ருள். இத்தகைய சிறப்புகள் பொருந்தப்பெற்ற பராசக்தியின் வடிவமாகவே பெண்கள் உலகத்தில் விளங்குகின்ருர்கள்.

### சிவமும் சக்தியும்

பரமசிவத்தின் அருட் திருமேனிகளிலொன்று அர்த்தநாரீஸ்வர வடிவம். இவ்வடிவத்தின் வலது பாகம் சிவத்தையும், இடதுபாகம் பராசக்தியையும் குறிக்கும். சிவமும், சக்தியும், பிரிக்கப்படாத ஒரே பொருள் என்னும் உண்மையை விளக்குவதற்கே இவ்வடிவம் தோன்றியது. நெருப்பும் சூடும் எப்படி ஒரே பொருளோ அப்படியே சிவமும் சக்தியும் ஒரே பொருளாகும். நெருப்பிலுள்ள சூடுதான் எல்லா விவகாரங்களுக்கும் காரணம். நெருப்பு ஒளியை மாத்திரம் கொடுக்கும். அதனேடு பொருந்தியுள்ள சக்தியாகிய சூடே பிற பொருள்களுடன் தொடர்பை ஏற்படுத்துகின்றது.

இறைவனின் அருள் நிலையும் (Grace) சக்தி சொரூபமேயாகும். இறைவன் ஆன்மாக்களிடத்தே கொண்டுள்ள கருணையால்தான் உலகத்தைப் படைக்கின்ருன். இறைவனின் செயலற்ற நிலையே சிவம் எனப்படும். கருணைபிறக்கும் நிலை சக்தியெனப்படும். எனவே; சக்தி கருணையே வடிவாக அமைந்துள்ளது. சிவத்தினதும், சக்தியினதும் தொடர்பே உலக விவகாரங்கள் எல்லாவற்றிற்கும் மூலகாரணமாகும் என்பது, சைவசித்தாந்தம் கூறும் உண்மையாகும். இவ்வுயர்ந்த தத்துவ முடிபுகளை ஆதாரமாகக் கொண்டே சைவ சமூக ஒழுங்குகள் யாவும் அமைக்கப்பட்டுள்ளன.

### சமயமும் சமூகமும்

இக்காலக் கல்வி முறையிலும், சமூக வாழ்க்கையிலும் இவ்வுண்மைகள் இடம் பெறவில்லை என்பதை நாம் கூற வேண்டியதில்லை. சைவ மக்களது சமூக வாழ்க்கை உயர்ந்த நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டே விளங்கியதென்பதை நாம் எமது சமய நூல்கள் மூலம் அறிகின்ருேம். பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ள நாயன்மார்களின் இல்வாழ்க்கை, சைவவாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக இன்னும் விளங்குகின்றது. கணவனும், மனைவியும், மக்களும், ஒரே நோக்கத்தோடும், மனப்பான்மையோடும் தமது வாழ்க்கையை வாழ்ந்தார்கள் என்பதற்கு சிறுத்தொண்ட நாயனுர் சரித்திரமும், அப்பூதியடிகள் சரித்திரமும் எடுத்துக் காட்டுகளாகும்.

### புதிய நோக்கங்கள்

பண்டைக்காலத் தமிழ் மக்கள் வாழ்ந்த சைவ வாழ்க்கையை, இக்கால மக்கள் வாழ்வது இயலாதென எம்மவரில் பலர் கருதுகின்ருர்கள். இல்லை நாம் எல்லோருமே கருதுகின்ருேம். இம்மன நிலைகளுக்குக் காரணம் யாது? எமது வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள புதிய நோக்கங்களும், அதன் பயனுய் எம்மிடத்தே தோற்றியுள்ள விருப்பு வெறுப்புக்களுமேயாகும். சுகதுக்கங்கள் அக்காலத்திலும் இக்காலத்தைப்போன்றே மக்களிடையே காணப்பட்டன. ஆனல் அக்காலத்தில் மக்கள் சுக வாழ்வை அடைவதற்குக் கையாண்ட வாழ்க்கை முறைகள் வேறு. இக்காலத்தில், நாம் கையாளும் முறைகள் வேறு.

ஐம்புலனடக்கத்தினுல் மனத்தில் உதயமாகும் இன்பநிலையே சுக வாழ்விற்கு ஆதாரமாக அக்காலத்தில் கருதப்பட்டது. ஆசைகளை மட்டுப்படுத்தி; தேவைகளைக் குறைத்து; அறிவை வளர்த்து, அன்பைப் பெருக்கி, இறைவனை வழிபட்டு வாழும் வாழ்வே சிறப்புடையதென சமய நூல்கள் வற்புறுத்துகின்றன. அவ் வழியில் எமது நாட்டுப் பெருமக்கள் வாழ்ந்தார்கள். அவர்களைப் பின்பற்றிப் பொது மக்களும் வாழ முயற்சித்தார்கள்.

### இன்ப நுகர்ச்சியில் ஆர்வம்

ஆனல், இன்று ஆசைகளைப் பெருக்குவதும், அவற்றைத் திருப்திபண்ணிக் கொள்வதற்கு இடைவிடாது உழைப்பதும், அறிவு வளர்ச்சியில் கருத்தின்றி இன்பநுகர்ச்சியில் மாத்திரம் ஈடுபடுவதுமே எமது நோக்கமாக இருக்கின்றது. எளிய வாழ்க்கையும் உயர்ந்த நோக்கமும் எமது இலட்சியமாக இன்று இல்லை. ஆடம்பரமான வாழ்க்கையும், மட்டற்ற இன்ப நுகர்ச்சியில் அதிக விருப்பும், எமது குறிக்கோளாக மாறிவிட்டது. இது எமது நாட்டின் பண்டைப் பண்பாட்டின் வழிவந்த நிலையன்று; காலப்போக்கில் எமது நாட்டிலேற்பட்ட மாறுதல்களின் பயனுகும்.

ஒவ்வொரு நாட்டிற்கும், மக்கள் இனத்திற்கும் தனிப்பட்ட சுவதர்மம் ஒன்றுண்டு. எனவே, நாடுகளும் மக்களும் அவ்வழி நின்றே தமது வாழ்க்கையை நடாத்துதல் வேண்டும்.

"நன்கியற்றப்படும் பரதர்மத்தைவிட குணமில்லாத்தன் தர்மம் மேலானது. ஸ்வதர்மத்தில் இறப்பதுமேல். பிறர் தர்மம் பயன் தருவதாகா"

எனக் கீதையில் கூறப்பட்டுள்ளது. தனக்குச் சொந்தமாயமைந்துள்ள பண்பாட்டின் மூலமே ஒருவன் உயர்ந்த நிலையை அடையலாம். எமது நாட்டில் இப்பொழுது காணப்படும் நிலைக்கு நாமே காரணர்.

### அன்பும் அறனும்

உலகம் இன்று சமாதானத்தையும் அமைதியையும் பெரிதும் நாடி நிற்கின்றது. மக்கள் இல்லங்களில் சமாதானமும், அமைதியும் ஏற்படாதிருக்கும் வரை வெளி உலகத்தில் சமாதானம் ஏற்படுவது அசாத்தியம். இல்வாழ்க்கை தூய்மையடைதல் வேண்டும்.

**"அன்பும் அறனும் உடைத்
தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது."**

என்ருர் வள்ளுவனுர். அன்பும் அறமும் விளங்கும் இல்வாழ்க்கையை நடாத்துவதை எமது மக்கள் நோக்கமாகக் கொண்டுள்ளார்களாவென்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்தித்தல் வேண்டும். அன்பும், அறமும் இல்லங்களில் விளங்கவேண்டுமாயின் தன்னலமற்ற, தியாக வாழ்க்கையால்தான் அது ஏற்படும். மட்டற்ற ஆசைகளை வளர்ப்பதால் அறம் வளராது. அன்பு மலராது.

### பெண் தெய்வம்

இல்லத்தின் தெய்வமாக ஒரு பெண் விளங்க வேண்டுமென்பது இந்து சமயக் கோட்பாடுகளில் ஒன்று. "இல்லாளகத்திருக்க இல்லாததொன்றில்லை" என்ருர் பெரியோர். ஒரு பெண் தான் சிறந்த வாழ்க்கைத் துணைவியாக இருந்து பின் உயர்ந்த தாயாக அமைதல் வேண்டுமென்பதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டுமென எமது சமய நூல்கள் கூறுகின்றன.

அதுவே எமது நாட்டின் கலாசார வாழ்க்கையின் அடிப்படையுமாகும்.

எப்படி பராசக்தி உலகம் தோற்றி, நிலைத்து ஒடுங்குவதற்குக் காரணமாக விளங்குகின்ருளோ, அப்படியே, ஒரு தாயானவள், மக்கள் சமுதாயம் தோன்றி, நிலைத்து ஒடுங்குவதற்குக் காரணமாக விளங்குகின்ருள். உலகத்தில்சுகவாழ்வு நிலைக்க வேண்டுமாயின் பெண்மை சிறப்படைதல்வேண்டும். தாய்மை போற்றப்படுதல் வேண்டும். உயர்ந்த நோக்குடைய வாழ்க்கைத் துணைவிகளாக அமைதலை சைவப்பெண்கள் விரும்புதல் வேண்டும். சைவ சமூகம் முன்னேறிச் செல்லவேண்டுமாயின்; எங்கள் சமூகத்தில் பல திலகவதிகளும், மங்கையற்கரசிகளும், காரைக்காலம்மைகளும்,

(13ஆம் பக்கம் பார்க்க)


நீங்கள் செய்ய விரும்பும் கணக்கற்ற தையல் வேலைகளை




நெச்சி

தையல் மெஷின் செய்துகொடுக்கும்.

NECCHI

உலகத்திலேயே மிகச்சிறப்பு வாய்ந்த தையல் மெஷின். இலங்கையிலுள்ள வீடுகளிலெல்லாம் நெச்சி தான் இடம்பெற்று வருகிறது. ஏனெனில் நெச்சி மூலம் பெண்களின் கனவுகள் நனவாகின்றன.

உங்கள் பல்வேறு தையல்வேலைகளையும் மிகவும் இலகுவாகவும், திறமையுடனும் செய்து விடுகிறது நெச்சி தையல் மெஷின்.

சாதாரண தையல் மெஷினில் வேலை செய்வதனுல் ஏற்படும் களைப்போ, சோர்வோ நெச்சி மெஷினை உபயோகிக்கும் பொழுது ஏற்படவே மாட்டாது.

நெச்சி சூப்பர் நோவா ஓட்டமெட்டிக்கா தையல் மெஷின், பலவித வர்ணப் பூவேலைகளையும், லேஸ் வேலைகளையும், பட்டன் துவாரங்களையும் எவ்வித கஷ்டமுமின்றி தைத்துக் கொடுக்கும் திறமை வாய்ந்தது.

நெச்சி நோரா, ஓட்டோமெட்டிக்கா ரூ.825 -தொடக்கம்.

நெச்சி எஸ்பெரியா ரூ.375-தொடக்கம்.

நெச்சி மிரெல்லா (மின்சாரத் தாலும் கையினுலும் இயங்குவது) ரூ. 625 தொடக்கம்.

விற்பனையாளர்கள்:

தி நியூ சீத்தா ஸ்டோர்ஸ் (கம்பஹா)


கெந்தலா ஸ்டோர்ஸ் (கெந்தலா)

பி. ஏ. எஸ். டரான்ஸ்போர்ட் லிமிடெட் (ஹோமகம)

தி பயனியர் ஸ்டோர்ஸ் (கண்டி)

5 வருஷ உத்தரவாதத்துடன் கட்டுப்பணத்திற்குக் கிடைக்கும்.

மெஷினின் பாகங்களை எம்மிடமே பெற்றுக் கொள்ளலாம்.



விபரங்களுக்கு

ரிச்சார்ட் பீரீஸ் அன் கோ., லிமிடெட்

மெயின் வீதி, கொழும்பு. போன்: 4753

## பூஜ்யம் தபால்

எம்.எம். முஸ்தாபா அவர்கள்,
நிதி அமைச்சர்,
கொழும்பு.

வாழ்த்துக்கள்!

தாங்கள் பொத்துவில் தேர்தலிலே, தமிழரசுக்கட்சி அபேட்சகராகப் போட்டியிடுகையில், தங்களுக்கு நிதிமந்திரிப் பதவி கிடைக்குமென்று சொப்பனத்திலும் நினைத்தீர்களா? தாங்கள் நினைத்தீர்களோ என்னவோ, நான் கனவிலும் இப்படி நடக்குமென்று கருதவில்லை. "அப்பேஆண்டுவா"வில் தமிழ் பேசும் மக்களுக்கு, அதுவும் தமிழரசுக்கட்சி அபேட்சகருக்கு, அரசாங்கத்தின் கண் போன்ற நிதிமந்திரிப் பதவி கிடைக்குமென்று யார்தான் எண்ணியிருக்க முடியும்? அதுவும் தங்களைப்போன்ற வாலிபருக்கு?

சற்றும் எதிர்பாராதமுறையில் தங்களுக்கு உதவி நிதி மந்திரிப்பதவி கிடைத்தது. பின்னர் தகநாயக்காவின் புதிய மந்திரிசபை ஏற்பட்டதும் நிதி மந்திரியாக விசுவாசப் பிரமாணமெடுத்தீர்கள். ஆனால் ஸ்டான்லி சொய்ஸா திரும்பியதும், அதை அவரிடம் ஒப்புவித்து விட்டு, உதவி மந்திரியானீர்கள். இப்போது ஸ்டான்லியே விலக நேரிட்டதால், மீண்டும் அப்பதவி தங்களுக்கே வந்து விட்டது. தாங்கள் வேண்டாமென்று விட்டாலும் அந்தப்பதவி தங்களை விடமாட்டேனென்கிறது! இதைத்தான் அதிருஷ்டம் என்று சொல்லுவார்கள். ஜாதகப்படி இப்போது உங்களுக்கு என்ன திசையோ? ஒருவேளை பிரதம மந்திரிப் பதவியும் தங்களைத் தேடிக்கொண்டு வரலாம். யார் கண்டது? அதிருஷ்டமிருந்தால் ஏன் வரக்கூடாது?

இப்படிக்கு
பூஜ்யம்.

குறிப்பு :—

இந்த மந்திரி சபையின் ஜாதகத்தைப் பற்றி ஏதேதோ கூறுகிறார்கள். சில நாட்கள் கூட இது நீடிக்காதென்கின்றனர். இது எப்படியாயினும், நீங்கள் கூறியதுபோல் சுறுசுறுப்பாக வேலை செய்யுங்கள். காற்றுள்ள போதே தூற்றுங்கள். அடுத்த பொதுத் தேர்தலைப் பற்றி இப்போதே கவலைப்பட வேண்டாம். அதை அப்போது பார்த்துக் கொள்ளலாம்.

பூஜ்யம்.

* * *

ஸ்ரீமதி டேவிட் டி ஸில்வா,
தேர்தல் அபேட்சகர்,
(முகாம்) அத்தனகல்லை.

அம்மணீ!

ஸ்ரீமதி பண்டாரநாயக்காவுக்குப் போட்டியாகத் தாங்கள் அத்தனகல்லை தொகுதி தேர்தலில் போட்டியிட முன்வந்ததைக் கேட்டுத் திடுக்கிட்டவர்களில் நானுமொருவன்.

அதிலும் தாங்கள் வெளியிட்ட அறிக்கையைப் பார்த்த பின் தாங்கள் ஒரு தமிழ்ப் பெண்மணிதான் என்று நினைத்தேன். ஏனெனில் சென்ற வகுப்புக் கலகத்தின் போது, தாங்கள் தங்கள் புருஷனை உயிரோடு இழந்து விட்டதாயும், அவருடைய சடலம் எங்கு உள்ளதென்பதும் தெரியவில்லை என்றும், ஏழு குழந்தைகளுடன் தாங்கள் தவிப்பதாயும் அறிந்ததும், பாவம் எந்த வகுப்பு வெறியன் தங்களது புருஷனை இப்படிச் செய்தானோ என்று பரிதாபப் பட்டேன்.

ஆனால் பின்னர் விசாரித்ததில் தாங்கள் ஒரு சிங்களப் பெண்ணே என்றும், சென்ற கலகத்தில், பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்துக்குத் தங்கள் கணவனர் பலியானதாகவும் அறிந்ததும், வகுப்புவாத அரக்கனின் அட்டூழியங்களின் பலன் யாரை யெல்லாம் எங்கெல்லாம் சென்று தாக்குகின்றதென்பதை உணரலானேன்.

தங்கள் கணவரின் சடலத்தைக் கண்டு பிடிக்கவும் தங்கள் பரிதாபத்தைப் பார்லிமெண்டில் தெரிவிக்கவும், உங்களைத் தெரிவு செய்து அனுப்பும்படி கேட்டிருக்கிறீர்கள்.

தேர்தல் முடிவு என்ன ஆகுமென்பது எனக்குத்தெரியாது. ஒருவேளை தாங்கள் வெற்றி பெற்று பார்லிமெண்டுக்குச் சென்றால், தயவுசெய்து ஒரு விஷயத்தை மறக்காதீர்கள். நாட்டிலே பல்லாயிரக்கணக்கான தமிழ்ப்பெண்கள், தங்களைவிட மோசமான, சொல்ல முடியாத இம்சைகளுக்கு சென்ற கலவரத்தின் போது உட்பட்டனர். இன்னும் பலர் தலைதூக்க முடியவில்லை. பலர் செத்தும்விட்டனர். பல குடும்பங்கள் சிதைந்தன. அப்பெண்மணிகளின் கண்ணீர் கதைகளையும் விசாரித்து, பார்லிமெண்டில் தெரிவியுங்கள். ஒருவேளை தாங்கள் தோற்றால் பரவாயில்லை. இதைப் பற்றி தங்கள் சமூகத்தவரிடம் சொல்லுங்கள்.

இப்படித் தெரிவிப்பதால், உடன் எவ்வித நன்மையும் இல்லாவிடினும், இனியும் அரசியல்வாதிகள்யாரும் வகுப்பு வெறிகளைக் கிளப்பி, அமைதியாக வாழும் மக்களைப் பலபல இம்சைக்கும் உள்ளாக்காமல் தடுக்க ஏதாவது நல்லஏற்பாட்டைச் செய்யலாமல்லவா?

இப்படிக்கு,
பூஜ்யம்.

குறிப்பு:-

நாட்டின் அரசியல்போக்கைப் பார்க்கையில், எந்தச்சமயமும் எதுவும் நடக்கலாம் போலுள்ளது. ஒருவேளை பார்லிமெண்ட் சபையையே கலைத்தாலும் கலைத்துவிடலாம். அப்படியாயின் இடைத்தேர்தல்களேநடைபெறாமலும்போகலாம். என்றாலும் சீக்கிரத்தில் பொதுத்தேர்தல் நடக்கலாமாதலால், நீங்கள் விடாமல் போட்டியிடுவீர்களென்றே நம்புகின்றேன். நீங்கள் விட்டாலும், உங்களுக்குப் பின்னிற்பவர்கள் தங்களை விடமாட்டார்கள்.

பூஜ்யம்

போதிமர நிழலில்: 4

## கலை தரும் கருத்து

— வெள்ளங்காடு, வீ. வியாகேச தேசிகர் —

அன்புள்ள சீடனே,

எனது கடிதத்திற் கடைசியிலே குறிப்பிட்டிருந்ததை மறந்திருக்க மாட்டாய். அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பாய் என்பது எனது நம்பிக்கை.

கலையென்றால் என்ன?

எடுத்த எடுப்பிலே, "இது தெரியாதா? இது தெரியாமல் நான் எழுத்தாளனாக வர ஆசைப்படுகிறேனா?" என்றெல்லாம் நினைக்கத் தோன்றும். ஆனால் அதை விளக்க வுரைகளில் அமைக்க முற்படும் போதுதான் அது அவ்வளவு இலேசான காரியமல்லவென்பது தெரியவரும்.

கலையைப் போன்று இன்னொரு சௌந்தரிய சொல் 'அழகு'. அழகு என்றதும் அதன் அர்த்தம் பேசுபவனுக்கும் கேட்பவனுக்கும் நன்றாக விளங்குகின்றது. ஆனால் அவர்களுடைய அழகு நுகர்ச்சியும் அழகின் அளவுகோலும் ஆளுக்கு ஆள் வேறுபடுகின்றன. நான் எதனை அழகு என்று கருதுகிறேனோ, அதனையே நீயும் அழகு என்று கருத வேண்டியதில்லை.

ஒரு முறை நான் எனது நண்பன் ஒருவனுடன் பூங்கா ஒன்றிற் புகுந்தேன். அப்போது அங்குள்ள மலர் ஒன்றைக் காட்டி, "இது போன்ற மலரை நான் பார்த்ததில்லை" என்று அவர் இரசிக்கலானார். நானும் அம்மலரைப் பார்த்தேன். அதனுடைய சௌந்தரியம் சாதாரணமானதாகவே எனக்குப் பட்டது. இக்கருத்தை எனது நண்பனுக்கும் தெரிவித்தேன். அவன் பட்டென்று சொன்ன பதில் என்ன தெரியுமா? "அம்மலரை என்கண் கொண்டு பார்!" என்று.

என் நண்பனது கூற்றில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. இருந்தும் மதுரைத் தமிழ்ப் பேரகராதி, இருவரும் கூறிய 'அழகு' என்ற சொல்லுக்கு, ஒரே கருத்தைத்தான் தருகிறது. இந்தக் கலை விவகாரம் இருக்கின்றதே, இதுவும் அப்படித்தான்! இது நமது இதய உணர்ச்சிகளுக்கு இன்பமளிப்பது. சௌந்தர்யமானதெனச் சுற்றி வளைத்துச் சமாளித்துக் கொள்ளலாம்.

இந்த விளக்கத்திலும் குறைபாடு நிறைய உண்டு.

மகாவலி கங்கை நெளிந்து சுழிந்து இன்னிசை மீட்டிக் கொண்டு ஓடிச் செல்லும் லளிதத்திலே உள்ளத்தினைப் பறிகொடுக்கிறோம். சிவனொளி பாத மலை மிடுக்குடன் எழுந்து நின்று முகிற் கூட்டங்களுடன் இரகசியம் பேசும் விந்தை எங்கள் உள்ளத்தைப் பரவசப் படுத்துகின்றது. சோலையிலே தென்றலின் தழுவலில் களி நடம் புரிந்து நறுமணம் பரப்பும் ரோஜா எங்கள் உள்ளத்தை வளைத்துக் கொள்ளுகின்றது. இப்படி எத்தனையோ அனுபவங்கள். நமது உணர்ச்சிக்கு இதம்தரும் இவையனைத்தும் கலையா?

அதுதான் இல்லை.

இன்னிசை பாடி ஓடும் அருவியும், குலவும் மலையும், ஆடும் மலரும் சௌந்தரியமானவை. ஆனால் அவை கலைகள் அல்ல. மனிதனின் கற்பனைத்திறனும் கை வண்ணமும் சேரும்போது தான் கலை கருத்தரிக்கின்றது. கலைஞனின் கருவிகள் வேறுபட்டவையாக இருக்கலாம். கல்லும் உளியும்; சுவரும் தூரிகையும்; தாளும் சொல்லும்; இவ்வாறு சாதனங்கள் பல. ஆனால் கலை ஒன்றுதான். அதன்அனுபவமும் பயனும்கூட ஒன்றுதான். ஆனால் அது வடிவங்கள் பல பெறலாம். ஓவியன் வண்ணம் குழைத்துத் தீட்டும் அருவிக் காட்சி கலை. எழுத்தாளன் சொற்களைக் கோர்த்துச் சித்தரிக்கும் அருவிக் காட்சியும் கலைதான். ஓவியன் சிருட்டித்துள்ள அருவியிலும், எழுத்தாளன் சிருட்டித்துள்ள அருவியிலும் கற்பனையின் துணைகொண்டு நனையாமல் நீந்திவிளையாடலாம். ஏனென்றால் அந்த அருவி பிரம்ம சிருட்டியல்ல; உண்மையானதல்ல. அது மனித சிருட்டி; வெறும் பிரதி, எனவே, கலைஞன் ஒருவன். மாதிரிகள், அல்லது பிரதிகள் தயாரிப்பதில் ஈடுபடுகின்றான். இத்தொழில் நுணுக்கம் கலையாகப் பரிணமிப்பதே கலையென்று சொல்லுவதில் பிழையிருக்க முடியாது.

நாம் ஒன்றைப் பார்க்கின்றோம். நுகர்ந்து அனுபவித்து இன்பம் கொள்கின்றோம். இந்த இன்ப நிகழ்ச்சி எங்கள் உள்ளங்களில் படிந்துவிடுகின்றது. பலர் இந்த அனுபவத்தை 'போட்டோ' பிடித்து உள்ளத்தில் வைத்திருக்கிறார்கள். ஆனால் ஒரு சிலரே ஒரு படி மேலே சென்று அந்த அனுபவத்தைப் பற்றிச் சிந்தித்து சிந்தனை கிழிக்கும் வழி எல்லாம் கற்பனைக் குதிரையைத் தட்டிவிட்டுப் பார்க்கின்றார்கள் சிந்தனையும் கற்பனையும் மட்டும் கலையாகிவிட மாட்டா. எத்தனையோ அருமையான சிந்தனைகள் நீர்க்குமிழிகளாக உள்ளத்திலேயே உடைந்து விடுகின்றன. சிந்தனை தூண்டும் கற்பனை இருக்கின்றதே, அது பிரசவித்தெடுக்கும் உருவமே கலை. ஆகவே, கற்பனையின் உயிரும், உருவமுமுள்ள எழிற் பிரசவமே கலையெனலாம். இதன் காரணமாகத்தான் பல்லாயிரத்தில் ஒருவனே சிறந்த கலைஞனாக மாறுகின்றான்; சிறந்த எழுத்தாளனாக வாழுகின்றான்

கலைஞர்கள் சிருஷ்டிகர்த்தாக்கள். எழுத்தாளன் ஒரு கலைஞன். அதே வேளையில் எழுத்துக்கலை மற்றைய கலைகளிலும் பார்க்க மாண்புடையதென்பது எனது கருத்து. ஓவியன் ஒரு சித்திரம் வரைந்தான். சிற்பி ஒரு சிலை வடித்தான் அவர்களுடைய சிருஷ்டிகள் பூரணமாகிவிட்டன. ஆனால் எழுத்தாளன் சிருஷ்டிக்கும்

(14ஆம் பக்கம் பார்க்க)

"கொக்ஸ்" பிராண்ட்

பிரிட்டனில் தயாரிக்கப்பட்ட இரும்புப் பெட்டகங்கள்


★ பாதுகாப்புக்கு சிக்கனத்துடன் கூடிய திருப்திகரமான முதலீடு!

★ கவர்ச்சிகரமான மிகவும் குறைந்த விலையில் கிடைக்கும்!

★ கள்வர்களிடமிருந்து பாதுகாப்பு!

★ நெருப்பிலிருந்து பாதுகாப்பு!

★ நொறுங்குதலிலிருந்து பாதுகாப்பு!




கீழ்க்காணும் அளவுகளில்
கையிருப்பிலிருந்து கிடைக்கும்:-

24" × 16" × 16"
28" × 23" × 19½"
36" × 23" × 23"
42" × 28" × 24"
48" × 30" × 26"

விலைகளையும், மற்றும்
விபரங்களையும் அறிய,
தயவுசெய்து எங்களைக்
கலந்தாலோசியுங்கள்.
டெலிபோன்: 4268 & 6168

OFFICE EQUIPMENT LTD.
ICELAND BUILDING, STEUART PLACE, COLOMBO-3

மலைநாட்டு விழா: 2

# 'காங்கிரஸ் தோட்டத் தொழிலாளரின் கண் கண்ட தெய்வம்'

— கே. பி. ஹரன் —

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. காலை எழுந்து நண்பர்களுடன் ஹட்டன் கடைத்தெருப் பக்கம் சென்றேன். கார்களில் தோட்டத்தொழிலாளர் கோஷ்டி கோஷ்டியாக வந்து கொண்டிருந்தனர். கடைகளிலும் வியாபாரம் சுறு சுறுப்பாக நடந்து கொண்டிருந்தது. அங்கு ஒரு சாராயக்கடை. எல்லாக்கடைகளையும்விட அங்குதான் அதிக சுறு சுறுப்பு. தோட்டத் தொழிலாளர் பலர் அக்கடைக்குச் சென்று, சாராயப் போத்தல்களுடன் வெளிவந்தார்கள். சாராய விலையை அரசாங்கம் எவ்வளவுதான் உயர்த்தினுலென்ன? அங்கு சாராய வியாபாரம் குறையவில்லை. பாடுபட்டு உழைக்கும் ஏழைகள் பணம், இப்படி குடி அரக்கனுக்கா குட்டிச் சுவராகவேண்டும்?

இதைப்பற்றி நண்பரிடம் விசாரித்தேன், "தோட்டத் தொழிலாளரில் பெரும்பாலோருக்கும் நல்ல வருமானம் கிடைக்கிறது. மனைவி, புருஷன், இரு குழந்தைகள் வேலை செய்யும் குடும்பத்துக்கு முந்நூறு ரூபாய்வரை கிடைக்கிறது. ஆனுல் குடி, சூதாட்டம் இவைகளில் பெரும் பகுதியை இழந்து விடுகிருர்கள்". பாய்மாரிடம் 100க்கு ஒரு மாதத்துக்கு 25 ரூபாய் வட்டிக்குக் கடன் வாங்குகிருர்களாம்! அந்தக் கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாமல், ஆயுள் முழுவதும் கடன்காரர்களாக அவர்களில் பலர் சங்கடப்படுவதாகவும், அவர்களை ஏய்த்துப் பலர் பிழைப்பதாகவும் நண்பர் சொல்லிய கதை, கேட்க மிகவும் பரிதாபமாக இருந்தது. குடியே பல தொழிலாளரின் குடியையும் கெடுக்கிறது. மதுவிலக்குப் பிரசாரம் செய்வாரில்லையா? என்று கேட்டேன். பல காங்கிரஸ் கூட்டங்களில் இது பற்றி பேசுவதுண்டென்றும், ஆனுல் கள்ளு, சாராயக் கடைகளும், கடன் கொடுக்க ஆட்களும் இருக்கும் வரை, அவர்களுக்கு வேறு நல்ல பொழுது போக்குக்கு வழியில்லாதவரை, இந்த மது அரக்கன் பிடியிலிருந்து ஏழைத் தொழிலாளர் தப்புவது கஷ்டமென்றும்தெரிவித்தனர். தொழிலாளரின் சில குடும்பங்கள், குடி முதலிய தீய பழக்கங்கள் இல்லாமல், கண்ணியமாக வாழுவதாகவும் அறிந்தேன். ஆனுல் அவ்வித குடும்பங்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாம்.

சாதாரணமாக தோட்டங்களில் ஞாயிற்றுக்கிழமை வேலையில்லை. கிடைத்த சம்பளத்தையோ கடன் வாங்கிய பணத்தையோ, நாட்டுக்குக் கொணர்ந்து, குஷியாகச் செலவழித்துவிட்டு, பின்னர் திண்டாடுகிருர்கள். சினிமாவில், காலரி வகுப்புக்கு பதில் 'பால்கனி'க்குத்தான் அவர்களிற் பலர் செல்லுகிருர்கள். அவர்களிடமுள்ள பணத்தை ஏமாற்றிப் பறித்துக் கொள்ளுவது கஷ்டமல்ல. டவுண்பக்கம் பலர் இதற்காகக் காத்திருக்கிருர்களாம்.

## எல்லாம் காங்கிரஸ்

அங்குள்ள காங்கிரஸ் காரியாலயத்துக்குச் சென்றேன். காங்கிரஸ்தான் இப்போது அம்மக்களுக்கெல்லாம் தாய், தந்தை, குரு, தெய்வம். தங்களுக்கு என்ன கஷ்டம் வந்தாலும் சரி, புருஷன் மனைவி சண்டை, தோட்டச் சச்சரவு முதலிய எதற்கும் காங்கிரஸின் உதவியையும் பாதுகாப்பையுமே அவர்கள் ஆவலுடன் நாடுகின்ருர்கள். அந்தக் காங்கிரஸ் கிளை ஸ்தாபனத்தில் சுமார் 50 ஆயிரம் மெம்பர்கள் உள்ளனரென்றும், அதில் சிங்களவரும் இருப்பதாயும், தொழிலாளரின் குறைகளை, சங்க மூலம் தோட்டத் துரைக்குத் தெரிவித்து, துரை அவ்வப்போது எழுதும் பதில்களும் அடங்கிய பதிவுப் புத்தகங்களை எல்லாம் காட்டினர். காரியாலய தஸ்தாவேஜுகள் எல்லாம் கச்சிதமாக இருந்தன. யாருக்குஏதாவது புகார் இருந்தாலும் அவர் தமது மெம்பர் அட்டையுடன் அங்கு வந்து புகார் தெரிவிக்கின்ருர். நான் சென்ற சமயம், பல தோட்டங்களிலிருந்தும் தலைவர்கள் வந்திருந்தனர். சில புருஷன் - மனைவி சண்டைகளைக் கேட்டேன். யார் சரி? யார் தவறு? நியாயம் எது? என்று தீர்மானிப்பது மிகவும் கஷ்டம். அப்படிச் சிக்கலான பல பிரச்சினைகளும் வருகின்றன. சில தோட்டங்களில் போட்டிச் சங்கங்களால் சண்டை. தொழிலாளரிடையே சிலர் வீண் சண்டைகளைக் கிளப்பிவிட்டு, கோர்ட்டுகளுக்குஇழுத்துப்பிடுங்கித்தின்பதுண்டாம்! கொலைகளும் விழுகின்றன. காங்கிரஸ் பிளவால் இது வரை 15 கொலைகளுக்கு மேல் நடந்துள்ளதாக ஓர் அன்பர் தெரிவித்தார்.

## ஒரு நல்ல செய்தி

தொழிற் சங்கத் தகராறுகள் முதல், வீட்டுச் சண்டை வரை பலவற்றுக்கும் காங்கிரஸ் மூலம் தீர்வு காண வருகின்ருர்கள். உங்கள் கட்சியில் நியாயமில்லை என்று பிடிக்காத ஏதாவது பதிலைக் கூறினுல், இந்த காங்கிரஸில் இருப்பதில் என்ன பயன்? வேறு யூனியன்களுக்குப் போகிருேம் என்று கூறிவிட்டுச் சிலர் செல்கிருர்களாம். இரு காங்கிரஸுக்கும் சமரசப் பேச்சுகள் நடப்பதாயும், இரு கட்சியினரும் நேரில் பல தடவை கலந்து பேசி ஒரு சுமுகமான சமரசத்துக்கு வந்து கொண்டிருப்பதாயும், சில நாட்களில் இரு ஸ்தாபனங்களும், 'இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்' என்ற பெயரில் ஒன்ருக மீண்டும் ஐக்கியப்பட்டு விடுமென்றும், நல்ல செய்தியைக் கேள்விப்பட்டேன். இதனுல் அனுவசியமான பல சச்சரவுகள் நீங்கி, தொழிலாளர் பலமும் செல்வாக்கும் அதிகரிக்கும். தோட்ட அமைதியும் பலப்படும்.

மற்ற சங்கங்களைப் பற்றி விசாரித்தேன். சமசமாஜக் கட்சி யூனியனில், சிலர் சேர்ந்து அதுசற்றே தலைதூக்கி வந்ததாயும், ஆனுல் இப்போது அதிலிருந்து பலர் காங்கிரஸில் திரும்பச் சேருவதாயும் தெரிவித்தனர். கொம்யூனிஸ்ட் யூனியனில் அப் பகுதியில் அதிக மெம்பர்கள் இல்லை என்று கூறினர். இந்த யூனியன்களெல்லாம் ஒரே ஸ்தாபனமாக இணைந்து வேலை செய்யுமாயின், மலைநாட்டுத் தொழிலாளரின் நிலைமை எவ்வளவோ மேம்பட வழி பிறக்கும்.

## பரிதாபக் காட்சி

ஒரு தோட்டத்தில் ஒரு தொழிலாளி தம் குடும்பத்துடன் எவ்வளவு வருஷம் வேலை செய்தாலும் சரி. ஏதாவது அற்ப காரணத்துக்காக, அவர் வேலை இழந்துவிட்டால், அத் தோட்டத்திலுள்ள லயன் வீட்டிலிருந்து குடும்பத்துடன் வெளியேறி விடவேண்டும். ஒண்டியிருக்கவும் வேறு இடம் கிடையாது. தெருவில்தான் நிற்கவேண்டும். அந்த பல் கிட்டும்குளிரிலே, பல ஏழைத் தொழிலாளர் தங்கள் பெண்டு பிள்ளைகளுடன், தெருவோரம் சுருண்டு கிடப்பது பரிதாபமாகுமென்ருர் ஒரு நண்பர்.

இவர்களுக்காக ஒரு தோட்டம் வாங்கி, தெருவில் தவிக்காமல், அங்கு இருக்கச்செய்து, சில கைத்தொழில்களைக் கற்பித்து, கண்ணியமாக அவர்கள் வாழும்படி செய்ய முடியாதா? அரசாங்க்த்தையோ, அல்லது பிறரையோ எதிர் பார்க்கத் தேவையில்லை. லட்சக்கணக்கான தொழிலாளரடங்கிய காங்கிரஸ் ஸ்தாபனம், இவ்வகையில் செய்யக்கூடிய பணி அதிகமுண்டு. மேலான சமூக சேவை செய்ய விரும்பும் படித்த தமிழ் வாலிபருக்கு அங்கு அதிக இடமும் தேவையுமுண்டு.

## தோட்டத்தில் வரவேற்பு

ஒரு தோட்டத்தில் நடந்த கூட்டத்திற்குச் சென்றேன். மழை தூறிக் கொண்டிருந்தது. என்ருலும் குழந்தைகள் பலர் ஆரவாரம் செய்து கொண்டு எதிர் வந்து வரவேற்றனர். மாலை மரியாதைகள் நடந்தபின், லயன் வீடுகளுக்கு மத்தியிலே போடப்பட்ட ஒரு மேடைக்குச் சென்ருேம். வர்ணக் காகித தோரணங்களால் அலங்கரித்திருந்தனர். பக்கத்தில் கொழும்பு வர்த்தக ரேடியோ இந்துஸ்தானி சங்கீதம் ஒலித்துக் கொண்டிருந்தது. மழை அதிகரிக்கவே, கூட்டம் பள்ளிக் கூடத்துக்கு மாற்றப்பட்டது.

தோட்டப்பள்ளிக்கூடத்தைப் பார்க்க வேண்டுமென்று எனக்கு வெகுநாள் ஆவல். அங்கு செல்லுகையில், தொழிலாளர் வசிக்கும் லயன் வீடுகளைப் பார்த்தேன். ஒரு சின்னவீட்டில் 10 அல்லது 12 பேர். இடமேபோதாது. சுற்று வட்டம் ஒரே அசுத்தம். பல வீடுகளுக்கு ஒரே ஒரு கக்கூஸ். துர் நாற்றம் தாங்க முடியாது. குடி தண்ணீருக்கும் கஷ்டம் என்று நண்பர் பல கஷ்டங்களையும் அடுக்கிக் கொண்டே போனுர்.

வயது வந்த ஆண், பெண்களை தோட்டத்தில் பதிவு செய்து, வேலை கொடுப்பதில்லை. இதனுல் வேலையில்லாக் கஷ்டம் அதிகரிக்கிறது. ஜனத்தொகை பெருகுகிறது. தோட்டத்தைவிட்டு வெளியே சென்ருலோ, கள்ளத்தோணி என்று பிடித்து விடுகிருர்களாம். இப்படிப் பல பல சங்கடங்களையும் கேட்டுக் கொண்டே தோட்டப் பள்ளிக் கூடத்துக்கு வந்துசேர்ந்தேன். அது ஒரு மாட்டுத்தொழுவம் போலிருந்தது. அதில் 6 வகுப்புகளாம். ஒரே ஆசிரியர். 150 பிள்ளைகளுக்குப் படிப்பிக்க வேண்டும். எப்படித்தான் அந்த ஆசிரியர் சமாளிக்கிருரோ? அந்தப் பிள்ளைகள் என்னதான்படிக்கின்றனரோ? இலங்கையிலே அரிச்சுவடி முதல் ஆனர்ஸ் வரை, இஞ்சினியரிங், வைத்தியம் எல்லாக் கல்வியும் இலவசம் என்று பெருமை அடித்துக்கொள்ளுகிருேம். ஆனுல், அந்தத் தோட்டப்பாடசாலைக்கு, வெளியார் யாரும் சென்று பார்த்தால், இலங்கையைப்பற்றி மிக மிகக் கேவலமாக மதிப்பர்.

## தொழிலாளர் வாழ்க!

கூட்டம் ஆரம்பமாயிற்று. ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் கூடி, "தொழிலாளர் வாழ்க" "பெண்களுக்கு 6 மணி வேலை தா" "வாலிபர்களைப் பதிவுசெய்" என்று கோஷ

(15ஆம் பக்கம் பார்க்க)


றெனேல்ட் டோபீன்

கணப்பொழுதில் துரிதமே
இயங்கி விடுகிறது



RENAULT

Dauphine

வாகனப் போக்குவரத்துடேயும்,
முடுக்குகளிலும், நேரான
இடங்களிலும் கச்சிதமாக
இயங்கி விரைந்து செல்கிறது.

இதுவே விதியினிலே வியப்பூட்டும்
ரிங்காரத்துடனும் உறுதியுடனும்
ஓடும் கார் உண்மையான அசல்
விண் தாரகை.

4 கதவுகள் 5 ஆசனங்கள்
45 மைல்கள் ஒரு கலனுக்கு

இதன்
ரகங்களில்
மிகவும்
சிறந்தது

9T-CFT-D-324

ஸி. எப். ரி. என்ஜினியரிங் லிமிட்டெட்
467, யூனியன் பிளேஸ் — கொழும்பு.

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு கார்த்திகை மீ 12 உ (28-11-59)

EELA NADU: National Tamil weekly Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna.
*Colombo Office*: 142, New Bullers Road, Colombo 4.


## நம்பிக்கையில்லாத் தீர்மானம்

நீதி மந்திரி மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒரே ஒரு வாக்கினல் தோற்றது.

இந்த முடிவைக் குறித்து பிரதமர் தகநாயக்கா சற்றும் மகிழ்ச்சியடைவதற்கில்லை. இது அவருக்கு ஏற்பட்ட தார்மீக தோல்வியே.

அவர் பிரதமராகப் பதவி ஏற்ற இரண்டு மாதங்களுக்குள் இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் விவாதத்துக்கு வந்தன. முதல் கண்டத்தில் ஐந்து வாக்குகளால் பிழைத்தார். இப்போது இந்த இரண்டாவது கண்டத்தில் ஒரே ஒரு வாக்கினலேயே அவரது அரசாங்கம் தப்பியுள்ளது.

அரசாங்கத்துக்கு அதிகப்படி வாக்கு பலம் ஐந்திலிருந்து இப்போது ஒன்றுக்குக் குறைந்து விட்டது. அரசாங்கக் கட்சியிலேயே மூவர், பகிரங்கமாக எதிர்த்து வாக்களித்துள்ளனர். ஒரு முக்கிய மந்திரி கொலை சதி வழக்கில் கைதியாகியுள்ளார். மற்றெருவர், இதே சம்பந்தமாக விலக நேரிட்டது.

இந்தக் கண்டத்துக்கு அரசாங்கம் தலை தப்பியது தம்பிரான் புண்ணியம். தங்கள் பதவிகளை இழந்து விடப்படாதே என்ற சுயநலத்தால் உந்தப்பட்டே, தங்களுக்குத் தாங்களே பலரும் வாக்குச் செய்து கொண்டுள்ளனர். என்றாலும் வாக்குப் பலமும், தார்மிக சக்தியும் வர வரக் குறைந்து விட்ட இந்த அரசாங்கம் இனியும் எவ்வளவு காலம் உயிருடன் இருக்க முடியுமென்பது பிரதமருக்கே நிச்சயமில்லை.

'நின்ற வரைக்கும் நெடுஞ்சுவர்' என்று பிரதமர் தகநாயக்கா காலாட்சேபம் செய்கின்றார். அதுவும் நியமன அங்கத்தினரின் தயவுடன் ஆட்சி உயிருடன் உள்ளது. இதே நியமன அங்கத்தவர்களை நீக்கிவிடுவதாக, தேர்தல் வாக்குறுதி அளித்தே எம். ஈ. பி. அரசாங்கம், சென்ற தேர்தலில் வென்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவை யெல்லாம் அரசியல் அனுபவமுள்ள திரு. தகநாயக்காவுக்குத் தெரியாதவையல்ல. இப்போது பெற்ற ஒற்றை வாக்கு வெற்றியால் தமக்குப் பொது ஜன ஆதரவு இருக்கிறதென்றும், இங்கு ஜனநாயக தர்மத்தைத் தாம் நிறைவேற்றுவதாயும் அவர் நினைப்பதாயின் அவர் தம்மையே ஏமாற்றிக் கொள்வதாகும்.

பதவிக்கு வந்த இரண்டு மாதங்களிலும் அவருக்கு நித்திய கண்டம்தான். வருகிற வெள்ளிக்கிழமை மற்றெரு கண்டம் காத்திருக்கிறது. இதையெல்லாம் நினைக்கையில் திரு. தகநாயக்காவுக்கு பிரதம மந்திரி பதவி பற்றி மகிழ்ச்சி அடைய ஒன்றுமில்லை. திட்டுகள், வசையாரிகள், கண்டனங்கள் வெளியில்; தாராளமாக நடமாடமுடியாமல் பயம்; இவை தாம் அவர் கண்ட பலன்.

அவரது தனிப்பட்ட விஷயம் என்ன ஆயினும் சரி பொது மக்களுக்கு இவ்வித அரசாங்கத்தால் உருப்படியான நன்மை ஏற்படமுடியுமா? என்பது முக்கிய கேள்வி. பொது மக்களின் நம்பிக்கையை வெகுவாக இழந்து, தன் உயிருக்கே மன்ருடிக் கொண்டிருக்கையில், இந்த அரசாங்கத்தால் என்ன நன்மை ஏற்படமுடியும்? நிர்வாக ஊழல்கள் மலிந்து தீமைகள் வரவர அதிகரிக்கக்கூடும்.

திரு. பண்டாரநாயக்காவின் கொலைவழக்கு விசாரணையை சரிவர நடாத்தி, குற்றவாளிகளை தண்டனைக்கு உட்படுத்த வேண்டிய பெரிய பொறுப்புள்ளது. இப்பொறுப்பை இந்த அரசாங்கம் சரிவர நிறைவேற்ற முடியுமா? என்ற சந்தேகம் நேற்றைய நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்துக்குப் பின் பொதுமக்களுக்கு அதிகரிக்கும்.

வழக்கு விசாரணை சரிவர நடைபெற்று, பொதுமக்களின் குறைகள் தீர்ந்து, நாடு அமைதியாக முன்னேறவேண்டுமானல், அதற்குப் பலமான அரசாங்கம் அவசியம் வேண்டும். இப்போதுள்ளவர்கள் தாங்களாக விலக மாட்டார்கள். ஜனநாயக தர்மப்படி பார்த்தால் மேற்குறித்த தீர்மானம் உண்மையில் நிறைவேறிய மாதிரிதான். இச்சமயத்தில், நாட்டில் நல்லாட்சி ஏற்பட கவர்னர் ஜெனரல் முன்வந்து இந்த லொடலொட்டை அரசாங்கத்தைக் கலைத்து, பொதுத் தேர்தல் நடாத்தி, பலமான அரசாங்கத்தை அமைக்க வழிவகைகள் செய்ய வேண்டும். இந்த நடவடிக்கையை அவர் இனி வெகு நாட்களுக்குத் தள்ளி வைக்க முடியாது.

## ஏன் இந்த மனப்பான்மை ?

இரு வருடங்களுக்கு முன்னர், இலங்கையில் ஏற்பட்ட பெருவெள்ளம் உலகின் அனுதாபத்தைப் பெறுமளவுக்கு மிகுந்த சேதத்தையும் அழிவையும் செய்துவிட்டு அகப்பட்டதை எல்லாம் அள்ளிவாரிக் கொண்டு சென்றது. இதன் பயங்கர நினைவுகள் இன்னுந்தான் மக்களின் உள்ளங்களை விட்டு அகலவில்லை.

சென்ற சில தினங்களாக வட பகுதியிற் பொழிந்துதள்ளும் மழை குளம் குட்டைகளை நிரப்பி, பயிர் பச்சைகளுக்கு நாசம் விளைத்திருப்பது உண்மையாயினும் எதிர் பார்த்த அளவுக்குச் சேதம் ஏற்படவில்லை. சிற்சில பகுதிகளில் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கும் மக்களுக்குக் காரியாதிகாரிகள் ஆகவேண்டிய உதவிகளைச் செய்து வருகின்றனர். உணவு வசதிகள் அற்றவர்களுக்கு அரிசி, பாண், காய்கறி போன்றவற்றையும் அளிக்கின்றனர் என அறிகின்ருேம். ஆனல் சிற்சில பகுதிகளில் வசிப்போர் இப்படியான உதவிகளைப் பெற மறுக்கின்றனராம். இவற்றுக்குப் பதிலாகக் 'கையில் காசை வையுங்கள்' என அவர்கள் பிடிவாதம் செய்கின்றனர் என்ற செய்தி எமக்குக் கிடைத்துள்ளது.

வெள்ளத்தால் கஷ்டமுறுபவர்களுக்கு அரசாங்கம் ஆற்ற முன்வந்துள்ள உதவியை மகிழ்ச்சியுடன் ஏற்பதை விடுத்துப் பணந்தான் வேண்டுமென வற்புறுத்துவது விரும்பத்தகதாயில்லை. இருவருடங்களுக்கு முன்னர் இலங்கை வெள்ளத்தால் அல்லற்பட்டபோது பிற நாடுகளிலிருந்து விமானங்களில் உணவு வகைகளும் உடு புடவைகளும் வந்து குவிந்தன. அவற்றை எல்லாம் இலங்கை அரசாங்கம் வேண்டாமெனத் திருப்பி அனுப்பி விடவில்லை. இரு கைகளாலும் பெற்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தாராளமாக அளித்து வந்தது. மக்களும் அவற்றுக்காக நன்றியுள்ளவர்களாக இருந்தனர்.

இந் நிலையில் யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள ஒரு சிலர் அரிசியும் பாணும் வேண்டாம் என்று சொல்லி, அவற்றுக்குப் பதிலாகப் பணம் தருமாறு கேட்டார்களாம். அளிக்கப்படும் அரிசி தரத்திற் குறைந்ததாக இருப்பின் அவர்கள் அதனைச் சுட்டிக் காட்டியிருக்கலாம். அரசினரும் இதிற் கவனம் செலுத்தி உணவுக்கு உகந்தற்றை உதவவேண்டும்.

# ஸிட்னி ஓய்வு பெறுகின்ருர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளது. நீதிமந்திரி ஒரு குறிப்பிட்ட அதிகாரிக்கு—ஸிட்னிக்கு பாரபட்சம் காட்டுகிருர். மற்ற அதிகாரிகளுக்கு இந்த சலுகை காட்டப்பட்டதில்லை. அரசாங்கம் தனது நன்மைக்காக, தானே சட்டவிதிகளை மீறியுள்ளது. சில போலீஸ் அதிகாரிகள் பொலிஸ் மந்திரியை ஆட்டி வைக்கிருர்கள். ஸிட்னியின் அறிக்கையை நீதிமந்திரி படிக்கவில்லையா? அல்லது அது அவருக்குப்புரியவில்லையா? இவ்வித ஆசாமி நீதிமந்திரி எவ்வளவு சீக்கிரத்தில் ஒழிகிருரோ அவ்வளவும் நல்லதாகும்."

இச்சமயம், திரு. கெனமன், அந்த அறிக்கையிலிருந்து சிலவற்றைப் படித்து, அது ஸிட்னியின் கௌரவத்தைப் பொறுத்ததல்லவென்றும் கூறினர்.

**தலைவர்** :- அந்த விஷயங்கள் வழக்கைப்பற்றியதால், அதைக் குறிக்கக்கூடாது.

**திரு. கெனமன்**:- நீதி மன்றத்தை ஸிட்னி அவமதித்ததை விட நான் அதிகம் அவமதிக்க மாட்டேன். நீங்களே (தலைவரே) நீதிமந்திரியாக இருப்பின் இந்த அறிக்கையை நிச்சயம் அனுமதித்திருக்க மாட்டீர்கள் (பலத்த சிரிப்பு). நீதி மந்திரி, மந்திரிப் பதவி மட்டுமல்ல, செனேட் மெம்பர் பதவியும் வகிக்கத் தகுதியற்றவர். சுண்ணம்புக்கும் வெண்ணெய்க்கும் வேற்றுமை அறியாதவர். ஸிட்னிமீது இச்சபையில் ஏதும் கூறப்பட்டிருப்பின் இதோ உள்ள உதவி நீதி மந்திரி (காரியப்பர்) ஏதும் உடன் பதில் கூறியிருக்கலாமே. அவர் அப்போது மௌனமாக இருந்தார். இப்போது அதிக மௌனியாக இருக்கிருர். (சிரிப்பு). விமலா மீது சாட்சியமில்லை என்று ஸிட்னி அறிக்கை வெளியிட்ட இரண்டு வாரத்தில் விமலா கைது செய்யப்பட்டுள்ளார். இதிலிருந்து ஸிட்னி, இக்கொலை வழக்கில் எவ்வளவு ஈடுபாடுடுள்ளவரென்பதை பரிசீலனை செய்யவேண்டும். இந்த ஒரு காரணத்துக்காகவேனும் நீதிமந்திரியைப் போகச் சொல்லவேண்டும். இன்று காலை ஸிட்னி கட்டாயமாக ஓய்வு பெறச் செய்யப்பட்டார். ஏன் இவ்வளவு கால தாமதம் செய்தார்? விமலா, ஸ்டான்லி, ஸிட்னி இவர்களை வேறு வழியில்லாமல் நீக்கியுள்ளனர். ஸிட்னியை ஏன் நீக்கினீர்களோ, அதற்கு இரட்டிப்பு காரணத்துக்காக நீதி மந்திரியையும் நீக்கவேண்டும்.

அரசியல் ஆசையுள்ள பொலிஸ் அதிகாரிகள் ஜனநாயகத்துக்கு ஆபத்தானவர்கள். பாகிஸ்தான், பர்மா முதலிய நாடுகள் நமக்கு எச்சரிக்கையாகும். நீதிமந்திரி போவதாகச் சொல்லும்போது, பிரதமர் ஏன் அவரைப் போக மறுக்க வேண்டும்? பொறுப்பற்ற ஒருவர் நீதிமந்திரிப் பதவி வகிக்கையில், பண்டார நாயக்கா கொலை வழக்கு விசாரணை சரிவர நடைபெறுமென்று பொதுமக்கள் எப்படி நம்புவார்கள்? இங்கு ஜனநாயகம் வெற்றிபெற, நீதி மந்திரியைப் பதவியிலிருந்து நீக்கவேண்டும். (கரகோஷம்)

திரு. இரியகொல்லை சிங்களத்தில் பேசுகையில், பிரேரணையை ஆதரித்தார். ஸிட்னியின் அறிக்கைக்கு முதல் பொறுப்பு பிரதமரே. அடுத்தபடி நீதிமந்திரி. மூன்ருவது தான் ஸிட்னி. இதற்காக ஸிட்னி நீக்கப்படுவதாயின், நீதி மந்திரியும் பிரதமரும் கூடவே நீக்கப்பட வேண்டும். அவ்வாறு நீக்கப்படவும், கொலைவழக்கு விசாரணை சரிவரநடைபெறவும் வேண்டுமானல் இந்த அரசாங்கம் ஒழியவேண்டும். முன்னள் பிரதமர் போதிசத்வராகி எங்கே இருக்கிருரோ? அவர் எங்கிருந்தாலும்சரி, இந்த அரசாங்கத்தை அவர் ஒப்பமாட்டார் (சிரிப்பு).

திரு. இரியகொல்லை, "கோகியா பாஷா"வின் அரசியல் ஜால வித்தைகளைக் கூறியதை, தலைவர் அனுமதிக்க மறுத்தார்.

திரு. வி.ஏ. கந்தையா (சமஷ்டிக் கட்சி) பிரேரணையை ஆதரித்துப் பேசினர். அவர் குறிப்பிட்டதாவது :- நீதி மந்திரி அனுமதித்த அறிக்கை இச்சபையை அவமதித்ததாகும். அவர் இப்பெரிய பதவியை வகிக்கத் தகுதியற்றவர். ஆனல் இந்த அரசாங்கம் ஏன் சரியான வழியைக் கடைப்பிடிக்க மறுக்கிறது? ஸிட்னியே நீக்கப்பட்டபோது, ஏன் நீதி மந்திரியையும் நீக்க மறுக்க வேண்டும் ?

ஸிட்னிமீது தவறு இருப்பின் அவர்மீது சட்டவிதிப்படி நடவடிக்கை எடுக்கலாம். ஆனல் அரசியற் காரணங்களுக்காக, அவசரமாகக் காரியம் செய்யப்பட்டுள்ளது. அந்த அறிக்கை அனுமதிக்கப் படாமலிருப்பின், ஸிட்னி வேலையை இழக்க நேரிட்டிராது போயிருக்கலாம். இது எப்படியாயினும், ஸிட்னி செய்த தவறைவிட நீதிமந்திரியின் தவறு அதிகமானதால், அவரை நீக்க வேண்டியது அதிக அவசியமாகும். (கரகோஷம்).

திரு. ரொபர்ட் குணவர்த்தன (சமசமாஜ) பிறகு சிங்களத்திற் பேசினர். பிரதமரைப் பார்த்துக் கைகாட்டி, விரலை ஆட்டிக் கர்ஜனை செய்தார். பிரதமர் தலைகுனிந்து, முகத்தில் ஈ ஆடாமல் கேட்டுக் கொண்டிருந்தார். விவாதத்தில் ஆதி முதல் முடியும்வரை சபையை விட்டுச் சற்றும் அகலாமல் மிகப் பொறுமையுடன் கேட்டார். வெலிமடைக்கு ரூ. 110000 கைலஞ்சமாகக் கொடுக்கப்பட்டுள்ளது என்று குணவர்த்தன கூறிவிட்டு; நியமன மெம்பர்கள், இந்த மோசமான அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டாமென்றும், அப்படி ஆதரித்தால் அவர்களே இந்நாட்டின் ஊழல்களுக்குக் குற்றவாளிகளாவர் என்றும் கூறினர்.

### பிரதமரின் பதில்

மாலை 6 மணிக்குப் பிரதமர் தகநாயக்கா பதிலளிக்கையிற் கூறியதாவது :-

எல்லாப் பேச்சுக்களையும் பொறுமையாகக் கேட்டேன். இப்பேச்சுக்களில் இரு விதங்கள் இருந்தன. அந்தப் பத்திரிகைக் கட்டுரை, இந்தச் சபையை அவமதித்ததாகும் என்று கூறப்பட்டது. அதை நான் திரும்பத்திரும்பப் படித்

(8A பக்கம் பார்க்க)

### அரசியல் வாதிகள்

"அரசியல்வாதிகள் அத்தனை பேரும் புரட்டுப் பேச்சாளரே" என்று நமது சகவர்த்தமானி ஒன்றிலே படித்தேன்.

இதைப் படித்ததும் என் மூளை வேலை செய்ய ஆரம்பித்தது. தேர்தல் காலத்திலே நம்மிடம் படி ஏறிவந்து, "நான் ஏழை பங்காளன். உங்களுக்கு அது செய்வேன். இது செய்வேன். எதுவும் செய்வேன்" என்றெல்லாம் கூறுகிருர்கள். ஆனல் தேர்தலில் வெற்றி பெற்று பார்லிமெண்ட் சபைக்குச் சென்றபின் ஏழைகளைத் திரும்பியும் பாராதவர்கள் எத்தனையோ பேர் !

அமைதியாக வாழ்ந்த நம்மிடையே வகுப்பு வெறிகளைக் கிளப்பிவிட்ட அரசியல் 'வியாதி'களை நினைத்தாலே பயமாக இருக்கிறது. இவர்கள் நமக்கு உபகாரம் எதுவும் செய்ய வேண்டாம். உபத்திரவம் செய்யாமல் இருந்தால் அதுவே போதும் என்று தோன்றுகிறதல்லவா?

என்ருலும் அரசியல்வாதிகளில் அத்தனைபேரும் புரட்டுப் பேச்சாளரென்பதை நான் ஒப்புக் கொள்ள முடியவில்லை. சில சத்திய சந்தர்களும் இருக்கிருர்கள்.

* * *

சில நாட்களுக்கு முன் இலங்கைக்கு வந்த ஓர் இந்திய எம். பி. யுடன் பேசிக்கொண்டிருந்தேன். அவர் இலங்கை இந்தியர் விஷயத்தில் விஷேச அக்கறை காட்டுபவர். நேருவுடன் அவர் சமீபத்தில் வெகு நேரம் பேசினராம். இலங்கை இந்தியரைப் பற்றி நீங்கள் ஏன் ஒன்றுமே கேட்கவில்லை? என்று நேரு அவரை விசாரித்ததற்கு "இலங்கை இப்போது ஒரு சாவீடாக இருக்கிறது. இச்சமயத்தில் இலங்கை இந்தியர் பிரச்சினையைப் பற்றி என்ன பேசுவது!" என்று பதிலளித்தாராம் அந்த எம். பி.

இலங்கை அரசியலில் இப்போது எல்லாமே ஒரே குழப்பம். பண்டாரநாயக்காவின் கொலைக்குப் பின், மந்திரி சபைக்கு நித்திய கண்டம். நாளை என்ன நடக்குமென்பது தெரியாது. இப்படிக் குழம்பியுள்ள நிலையில், எந்தப் பிரச்சினையைப் பற்றித்தான் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும்? பிரதமர் தகநாயக்காவின் நிலையை நினைத்தால் எனக்கு ஒரே பரிதாபமாகவுள்ளது.

* * *

தமிழ் நாட்டிலிருந்து சட்ட விரோதமாகப் பலர் இலங்கைக்கு வருவதைப்பற்றி காரணம் கேட்டேன். அவர்களில் அநேகமாக எல்லோருமே, ஏற்கெனவே இலங்கையில் இருந்தவர்களாம். கட்டாயத்தின் மீது இந்தியா திரும்பியவர்கள் என்றும், அவர்கள் தாங்கள் முன் இருந்த இடத்துக்கு வந்து வசிக்க விரும்புவது இயற்கையே என்றும், அதனல் தான் இங்கு வருவதாகவும் சொன்னர். சிலர் இதை பெரிய வியாபாரமாக நடாத்துவதாயும், அவர்களது ஏஜண்டுகள் தமிழ்நாட்டுக் கிராமங்களில் ஆசைவார்த்தைகள் ஏதேதோ சொல்லி உழைப்பாளிகளை ஏமாற்றி இங்கு அழைத்து வருவதாயும், இராணுவத்தினரைக் கண்டுவிட்டால், கடலிலேயே அந்த உழைப்பாளியைக் கையைப் பிடித்து இழுத்துத் தள்ளி விடுவதாயும், பலர் இதனல் உயிர் துறந்திருப்பதாயும் அவரிடம் சொன்னேன். சென்னை அரசாங்கம் தமிழ் நாட்டுக் கடற்கரையில் தீவிரமாகக் கண்காணித்து கள்ளத் தோணிக்காரர்களைப் பிடிப்பதாகச் சொன்னர்.

(8 A பக்கம் பார்க்க)

# டாக்டர் கொல்வின் போட்ட திடீர் குண்டு

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேன். அதில் ஒருவார்த்தையும் இச்சபை மெம்பர்களை எவ்விதத்திலும் தாக்கியதாகத் தெரியவில்லை. இச்சபையைப் பற்றி அதில் ஒன்றும் குறிப்பிடவில்லை.

அக்கட்டுரை தங்களைக் குறிப்பிடுவதாக மெம்பர்களே கருதிக் கொள்ளுகிறார்கள். கட்டுரையிலுள்ள விஷயத்துக்கும் சபை விவாதத்துக்கும் ஏதோ சில சம்பந்தம் இருக்கலாம். ஆனால் கட்டுரை அதிக விரிவானது. சபை விவாதம் அக்கட்டுரையை எழுதத் தூண்டியிருக்கக்கூடும். ஆனால் இக்கட்டுரையின் நோக்கம், இந்தச் சபையை அவமதிக்க வேண்டுமென்பதல்ல. பொலீசின் நற்பெயரைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதே.

அக் கட்டுரையில் "சந்தேகப்பேர்வழிகள்" "சதிகாரர்கள்" என்று குறிப்பிட்டிருப்பது இச் சபை மெம்பர்களையல்ல.

**திரு. நிமால்:—**

அது எங்களைத்தான்.

பிரதமர் மேலும் பேசியதாவது:—

கொலையைப்பற்றி நாட்டில்பல பல வதந்திகள் பரவியிருந்தன. இதில் எது உண்மை எது பொய் என்பதை அலசி, உண்மை நிலையைத் தெளிவாக்க வேண்டியது அவசியமாயிருந்தது. ஆனால் அக் கட்டுரை இச் சபை மெம்பர்களை அவமதிப்பதாக நினைத்தால், இது மறைமுகமாகவேனும் அப்படியிருப்பதாகக் கருதினால், அரசாங்கத்தின் தலைவர் என்ற முறையில் நான் இச் சபைக்கு மன்னிப்புத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். (அரசாங்கக் கரகோஷம்).

**டக்டர் கொல்வின்:—**

எந்தப் பத்திரிகையிலாவது, அந்த வதந்திகளிலே ஒன்றாயினும் பிரசுரமாகியுள்ளதா? அவ்வளவு நீளமாக ஸிட்னி பதிலளிக்கவேண்டிய அவசியமென்ன?

**பிரதமர்:—**

எவ்வளவோ துண்டுப் பிரசுரங்கள் வெளியாயின. இந்தப் பெரிய கொலை விஷயங்களைப் பொலிஸின் நீதி உண்மை காரணமாக ஓர் அறிக்கை வெளியிடப்படவேண்டியது அவசியமாக விருக்கிறது. ஆகவே கட்டுரையின் அடிப்படை நோக்கத்தைக் கவனித்தால், நீங்கள் நீதிமந்திரி மீதும் புகார் கூறமாட்டீர்கள்.

**டக்டர் என். எம்—**

கட்டுரை தயாரித்தது யார்?

**பிரதமர்:—**

நீதிமந்திரி, இந்தப் பொலிஸ் அதிகாரிக்கு அக் கட்டுரையை வெளியிட அனுமதி அளித்தார் என்பதே குற்றச்சாட்டு. அவர் அனுமதித்தாரா? என்பது முதலில் தெரியவேண்டும். சட்டவிதிப்படி நிரந்தரக் காரியதரிசியும், இலாகா தலைவரும் பத்திரிகைக்குக் கட்டுரையை அனுப்ப முடியும். சந்தேகம் ஏற்படும்போது மந்திரிசபை கலந்துகொள்ள வேண்டுமென்பது விதி. இதன்படி மந்திரியைக் கலந்துகொள்ளவேண்டுமென்றகட்டாயமில்லை. எப்படியும், அந்த நிர்வாகக் காரியம் சட்டப்படி இலாகா தலைவரின் காரியமே ஒழிய, மந்திரி செய்யும் காரியமாகாது. நாங்களெல்லாம் பொதுவாகப் பொறுப்பானவர்களே. ஆனால், குறிப்பிட்ட காரியத்துக்கு அந்த இலாகா தலைவரே பொறுப்பாளர்.

உதவி இன்ஸ்பெக்ரர் ஜெனரல் ஒரு இலாகா தலைவராவாரா? இந்த சந்தேகத்தை என் நிரந்தரக் காரியதரிசியிடம் இன்று கேட்டேன். அந்த விளக்கம் எனக்குக் கிடைக்கவில்லை. எந்த அதிகாரியும் விதியை மீறினால் அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும். அவரது மேலதிகாரி அதற்கு உடந்தையாக இருந்தால் அவர் மீதும் நடவடிக்கை சரியான சமயத்தில் எடுக்கப்படும்.

**ஒருவர்:—**

சரியான சமயம் என்பது எது?

**பிரதமர்:—**

இதற்குப் போதிய அவகாசம் வேண்டும்.

**திரு. பிலிப்:-**

இலாகா தலைவருக்கும் நிரந்தரக் காரியதரிசிக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டால்?

**பிரதமர்:**

மந்திரியைக் கலக்கவேண்டும்.

பல குரல்கள்:—

ஹ! மந்திரியே முடிவாகப் பொறுப்பானவரல்லவா?

**பிரதமர்:—**

இருங்கள், படிப்படியாகப் பதில் சொல்லுகிறேன் (எதிர்க் கட்சியில் கேலிச் சிரிப்பு.)

இக்கட்டுரை பிரசுரிக்கப்படுமுன் 4 படிகள் தாண்டப்பட்டுள்ளன. இந்த நிர்வாகக் காரியம் நீதி மந்திரியால் செய்யப்பட்டதல்ல. அதுவே எனது "கேஸ்."

**ஒருவர்** :—எல்லாம் குழப்படி கேஸ்.

**மற்றொருவர்** :—நீங்கள் ஒரு மன நோய் கேஸ்.

பிரதமர் பலர்குறுக்கிட்டுப் பேசினாலும், விடாப்பிடியாக, மேலும் பேசினார். "எதிர்க் கட்சியினர் கவனமாகப் பரிசீலனை செய்யாமல் நீதி மந்திரி மீதும் அரசாங்கத்தின்மீதும் குற்றம் சுமத்தியுள்ளனர். ஸிட்னி ஸொய்ஸா மீது நீதி மந்திரி "தகுதியான நடவடிக்கை எடுக்கும்படியே" அரசாங்கப் பார்லிமெண்ட் கட்சி கேட்டுள்ளது. நீதிமந்திரி, ராஜினாமாச் செய்வதாகப் பல முறை கூறினார். அவர் தவறு செய்ததாகக் கூறவில்லை. தம் சகாக்களுக்கு உதவவே இவ்விதம் கூறினார். ராஜினாமாச் செய்யவேண்டிய பெரிய விஷயம் அல்ல இது. மிகத் திறமையும், வாய்மையும் வாய்ந்தவர் அவர். மந்திரி சபையில் யாராவது இருக்கப்படாதென்று கருதினால் அவரை நாங்களே விலக்குவோம். ஆனால் இவ்விஷயத்தில் அப்படி ஒன்றும் இல்லை. (அரசாங்கக் கரகோஷம்.)

**மிஸ்டர் போர்ப்ஸ்** .—(நியமன மெம்பர்) நாட்டில் குழப்படி ஏற்பட அனுமதிக்கக் கூடாதென்றுகூறிப் பிரேரணையை எதிர்த்தார்.

திரு. கொல்வின் ஆர் டி' ஸில்வா விவாதத்துக்குப் பதிலளிக்கையில், அந்த ஸிட்னி அறிக்கையில் 8 விஷயங்கள், இந்த பார்லிமெண்டில் நடந்த விவாதத்திலிருந்தே நேர்முகமாக எடுக்கப்பட்டன எனக் கூறினர்.

**திரு. ஸி. பி. டி. ஸில்வா:** இது வழக்கு விசாரணை சம்பந்தமானது. இதைக் கூறக்கூடாது என்று ஆட்சேபிக்கிறேன்.

**தலைவர்** :—வழக்கைப் பற்றிக் குறிப்பிடாமல் பேசுங்கள்.

**டாக்டர் கொல்வின் :—** அது எனக்கும் தெரியும். நியமன மெம்பர்களுக்குச் சிறிதாவது கண்ணியமிருந்தால் அவர்கள் இப்பிரேரணைக்குச் சாதகமாக வாக்குச் செய்ய வேண்டும். ஆனால் அவர்கள் உளுத்துப் போன உரித்துக்கள். அவ்வித அழுகல் உரித்துக்களுடன் நாங்கள் சம்பந்தப்படாதது பற்றி மகிழ்ச்சியே! (கரகோஷத்தில் மிஸ்டர் போர்ப்ஸும் கலந்து கொண்டார்.) வதந்தி வதந்தி என்று கூறியதெல்லாம் வெறும் பித்தலாட்டமென்றும், அதில் குறிப்பிட்ட ஒவ்வொரு வார்த்தையும், சபை விவாதத்திலிருந்தே எடுக்கப்பட்டதென்றும் ஒவ்வொன்றாக டாக்டர் கொல்வின் படித்துக் காட்டினர். இடது சாரிகளே இக்கொலையில் சம்பந்தப்பட்டதாக அரசாங்க மெம்பர்களால் கூறப்பட்டது. கௌரவ பிரதமருக்கு ஏதாவது கௌரவம் இருப்பின், அவர் முதலில் எங்கள் பிரேரணைக்கு முதல் வாக்கு அளிக்க வேண்டும். போக்கிரிகளையும் அயோக்கியர்களையும் நாங்கள் விரட்டியடிப்போம். நீதி மந்திரி எவ்வளவு கண்ணியமானவர் என்பதை இதோ காட்டுகிறேன்."

இச் சமயம் திரு. ஸிட்னி ஸொய்ஸா, பப்ளிக் சேர்வீஸ் கொமிஷனுக்கு காலையில் எழுதியுள்ள கடிதத்தை டக்டர் கொல்வின் படித்தார். "தன் அரசியல் கௌரவத்தைக் காத்துக் கொள்ள, திகைப்பிலிருந்து விடுபட, என்னைக் கட்டாயமாக விலகும்படி செய்துள்ளனர். நான் நிரபராதி. நீதி மந்திரி, நிரந்தரக் காரியதரிசி, ஐ. ஜி. பி. இவர்களது அனுமதி மீதும் அதிகாரத்தின் மீதுமே அந்த அறிக்கையை நான் வெளியிட்டேன்." என்று டாக்டர் படித்தபோது, வெட்கம் வெட்கம் என்ற கோஷங்கள் எழுந்தன. நியமன மெம்பர்களுக்கு டாக்டர் கொல்வின் பலமான சாட்டை கொடுத்தார். நிலைமையைக் குழப்பி, அந்த அழுகலில் பிழைக்கும் பூச்சிகளாகிய விசேஷ உரித்துக்களுக்கு இந்நாட்டில் இனி இடமளிக்கப்படாதென்றார்.

'நீங்கள் மனிதரடங்கிய அரசாங்கமல்ல, அரசியல் மோசடிக்காரர்களடங்கிய அரசாங்கமே. நான் பிரதம மந்திரிகளைத் தனிப்பட்டுக்கௌரவிக்காவிடினும் நாட்டின் தலைவர் என்ற முறையில் பகிரங்கமாகக் கௌரவித்து வந்துள்ளேன். ஆனால் இன்று இந்தப் பிரதமர் பேசியபின் அந்த மரியாதையும் இவரிடம் இல்லாது போய்விட்டது.' இச்சமயத்தில் இந்தப் பீரங்கித் தாக்குதலைத் தாங்காமல், அரசாங்கக் கட்சியில் பலர் சபையிலில்லை. டாக்டர் ஸில்வா மேலும் கூறியதாவது:—

இந்தக் கட்சியின் மதிப்பும் கௌரவமும் காப்பாற்றப் படுவது எதிர்க்கட்சியின் கையில் தானுள்ளது. இரண்டே மாதங்களில் இந்த அரசாங்கத்தின் சாயம் வெளுத்துவிட்டது. இந்தப் பிரேரணையில் நாங்கள் ஸிட்னியைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஸிட்னியை இவர்கள் இனி ஐ. ஜி. பி. யாகவும் செய்யலாம். ஆனால் இச்சபையைத் தாக்க அனுமதித்த நீதி மந்திரி தான் நீங்கவேண்டும். இச்சபையின் கண்ணியத்தைக் காத்துப் பொது மக்களின் நலனைப்பாதுகாக்க விரும்பின் இப் பிரேரணையை ஆதரிக்க வேண்டும்" என்றார்.

இரவு 8-30 க்கு நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்குக்கு விடப்பட்டது.

**சாதகமாக 45 பேர்களும் பாதகமாக 46 பேர்களும் வாக்**களித்தனர். அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த மூவர், சாதகமாக வாக்களித்த போது எதிர்க் கட்சியினர் கரகோஷம் செய்தனர். சமஷ்டிக் கட்சியினர் ஏழு பேரும் வந்து, சாதகமாக வாக்களித்தனர். சேர் ராஸிக் பரீத் பிரேரணையை எதிர்த்தார். சேர் ஜோன் கொத்தலாவல வரவில்லை.

பிரேரணை தோற்றது என்று தலைவர் அறிவித்ததும், இரு தரப்பினரும் கரகோஷம் செய்தனர். "வெட்கம், வெட்கம் ராஜினாமா செய்யுங்கள்" என்று எதிர்க்கட்சியினர் கோஷமிட்டனர்.

மீண்டும் சபை டிசம்பர் 1ஆம் திகதி கூடுகிறது.

## அரசியல் வாதிகள்

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் பிடிபடுபவர்கள் முகாம்களிலே பெரிதும் இம்சைப்படுகிறார்களாம். காலையில் அரைருத்தல் பாணும், இரவில் கஞ்சியும் தான். ஏழு நாட்களில் அவர்கள் எலும்பும் தோலுமாகிறார்கள். இன்னும் அவர்கள் பல பல இம்சைக்கு உள்ளதாயும், சிறையிலுள்ள கொலைக் குற்றவாளிகளை விட அவர்கள் நிலை பரிதாபமாக வுள்ளதாயும் கேள்விப்பட்டேன்.

இதைப்பற்றி இந்திய அரசாங்கமும், இந்திய ஹைகமிஷனும் கவனமெடுத்து, தங்கள் நாட்டு "மன்னர்களான" இவர்கள் சிறைக் கைதிகளைப் போலவாவது நடாத்தப்படும்படி பார்த்துக்கொள்ள 'வேண்டாமா? என்று கேட்டேன்.

அந்த எம். பி. ஒன்றும் பேசாமல் மௌனம் சாதித்தார். இங்குள்ள இந்திய ஹைகமிஷனாவது இதைக் கவனிக்குமா?

—ஐயாறன்

<u>நீதி மந்திரி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்</u>

# ஒரு கடுகளவு மானமிருந்தால், எந்தப் பிரதமரும் ஸிட்னியை நீக்கியிருப்பார்

## பிரதமர் பதவி வகித்தவர் விஷயமே அப்படியாயின் இந்நாட்டில் யார் தான் பத்திரமாக வாழமுடியும்?

—வில்லியம் டி' ஸில்வா.

**நீதி மந்திரி மீது நம்பிக்கையில்லை என்று, டாக்டர் என். எம். பெரேரா, திருவாளர்கள் எஸ். ஜே. வீ. செல்வநாயகம், வி. ஏ. கந்தையா, எம். டி. பண்டா, பீட்டர் கெனமன், இவர்கள் உள்ளிட்டு 19 பேர் கொண்டு வந்த பிரேரணை மீது நேற்று காலை 10 மணிக்கு பார்லிமெண்டில் விவாதம் ஆரம்பமாயிற்று.**

**தகநாயக்கா மந்திரி சபையின் தலைவிதியையும் ஆயுளையும் தீர்மானிக்கும் இந்த முக்கிய தீர்மானத்தைப் பற்றி டாக்டர் என். எம். பலத்த எதிர்க்கட்சி கரகோஷங்களிடையே எழுந்து பேச ஆரம்பித்தார்.**

உதவி நீதி மந்திரி காரியப்பர், இரண்டு காரணங்களால் இதை ஆட்சேபித்தார். ஒன்று, இது பண்டாரநாயக்காவின் கொலை வழக்கு சம்பந்தமானதாலும், அவ்வழக்கு நீதி மன்ற விசாரணைக்கு வந்து விட்டதாலும் இதைப்பற்றிவிவாதிக்கக் கூடாதென்றும். மேலும் நீதிமந்திரி, செனேட் சபை அங்கத்தவராதலால் அவரைப் பற்றி இங்கு விவாதிக்கக் கூடாதென்றும் கூறினர்.

பிரேரணை கொலை வழக்கு விசாரணையைப் பற்றியதல்லவென்றும், அரசியல் சட்ட முறைபற்றியதென்றும், மந்திரி என்ற முறையிலேயே, நீதி மந் மந்திரியின் நடத்தையைப் பற்றி விவாதிக்கப் போவதாயும் டாக்டர் என். எம். பதிலளித்தார்.

தலைவர் ஆட்சேபனையை நிராகரித்து பிரேரணை ஒழுங்கானதே என்று, எதிர்க் கட்சி கரகோஷங்களுக்கிடையே அறிவித்தார்.

சபையில் பெருவாரியான அங்கத்தவர்களும் தங்கள் ஆசனத்திலிருந்து டாக்டரின் பேச்சை ஆவலுடன் கேட்டனர். அரசாங்கக் கட்சியில் சிலரது உடல் அந்தப்பக்கம் இருப்பினும் உள்ளம் டாக்டரின் பக்கம் இருந்தது. டாக்டர் என். எம். கர்ஜனை செய்த போது, அவர்கள் எதிர்க்கட்சியினருடன் சேர்ந்து சிரித்து தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

பிரதமர் கொலை வழக்கு நீதிமன்ற விசாரணைக்கு வந்து விட்டதால் அது பற்றி எதுவும் குறிப்பிட வேண்டாமென்று சபைத் தலைவர் கேட்டுக் கொண்டார். டாக்டர் என். எம். நீதி மந்திரி மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைப் பற்றிப் பேசியதாவது:-

நீதி மந்திரியின் மீது தனிப்பட்ட முறையில் எங்களுக்கு எவ்வித மனஸ்தாபமும் இல்லை. இது இச் சபையிலுள்ள ஒவ்வொருவரது சுய மரியாதையையும் பற்றியது. நம்மில் சிலர் தவறுகள் செய்யலாம். அவ்வப்போது அவற்றைத் திருத்திக் கொண்டு வருகிறோம்.

ஆனால், இந் நாட்டில் ஜனநாயக தர்மம் நீடிக்க வேண்டுமானால், மந்திரியும், அதிகாரிகளும் சில அடிப்படைக் கொள்கைகளை கௌரவிக்க வேண்டும். அதிகார வர்க்கம் இச் சபையின் நேர்மையான உரிமைகளை மீறிவிட நாம்அனுமதிக்கப் படாது. இச் சபையின் மேலான அந்தஸ்து மிக மிக முக்கியமானது.

இந்த நீதி மந்திரி தவறு செய்தது இது முதல் தடவையல்ல. அவர் இன்னும் கூட, தாம் ஸிட்னியின் அறிக்கையை அறிவித்தது சரியென்று சாதிக்கின்றார்.

**பேனாவும் மையும் தருவிப்பதே தமது கடமை என்று நீதி மந்திரி இக்கொலை வழக்கு விசாரணை சம்பந்தமாக செனேட்டில் கூறினார். இந்த வேலை மட்டுமே அவரது கடமையாயின் அதை அவரது பக்கத்திலுள்ள "பியூன்" அவரை விட நன்றாகச்செய்வாரே! (சிரிப்பு. இதில் அரசாங்கக் கட்சியினரும் கலந்து கொண்டனர்)** கௌரவ பிரதம மந்திரியும் கூட அவர் அறிக்கை வெளியிட்டது சரி என்று கூறினார். அப்படித் தானே?

**பிரதமர்:** சட்டப்படி அந்த முறை சரியென்றேன்.

**டக்டர் என். எம். பெரேரா:** சென்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் அரசாங்க அங்கத்தவர் ஒருவரே, எதிர்க் கட்சியினர் கூறிய குற்றச்சாட்டுகளில் 100க்கு 99 சரி என்றார். ஆனால் அரசாங்கக் கட்சியின் சார்பாக இதற்கு ஒருசமாதானமும் இதுவரைகூறப்படவில்லை. மந்திரி இதைப் பற்றி பத்திரிகைகளுக்கு அறிக்கை வெளியிட்டிருக்கலாமே. வவனியா அங்கத்தவர் நீண்ட கடிதங்களை முன்னம் எழுதிதமது நிலையைப் பத்திரிகை மூலம் விளக்கியுள்ளார். ஜா-எல அங்கத்தவர் (ஸ்டான்லி சொய்ஸா) மகத்தான காரியத்தைச் சாதிக்க ஆஸ்திரேலியாவுக்குச் செல்லுமுன் பத்திரிகைக்கு அறிக்கை வெளியிட்டார். அப்போது அதற்கு நான் பதிலளிக்கவில்லை. இச்சபையில் அதைப்பற்றிக் கூறலாமென்றே சும்மா இருந்தேன். அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் அல்லது நீதிமந்திரிஅறிக்கைவெளியிட்டிருக்கலாம். ஏன் அவர்கள் ஒன்றும் கூறாமல் ஒரு பொலிஸ் அதிகாரியைக்கொண்டு, வதந்திகளுக்குப் பதில் அளிக்கச்செய்ய வேண்டும்? ஜனநாயக பார்லிமெண்ட் முறைப்படி இந்த அரசாங்கம், தங்கள் கடமையைச் செய்யாமல் தவறான கோணல் வழியில் சென்றுள்ளது.

திரு. ஸிட்னி சொய்ஸா பொலிஸ் இலாகா தலைவருமல்ல. இச்சபையில் சாட்டப்பட்ட குற்றச் சாட்டுகளுக்கு ஒரு சில்லறை அதிகாரியைக் கொண்டு பதிலளிக்கச்செய்திருக்கிறார் நீதி மந்திரி. இதுதான் அவர் செய்த பெரிய குற்றம். செனேட்டர் தம் இலாகாவில் ஒரு அதிகாரியின்

(8B பக்கம் பார்க்க)

# தகாவும் என். எம். மும் சேர்ந்து சிரிக்க

## பார்லிமெண்ட் கூட்டம் ஆரம்பம்

— நமது பார்லிமெண்ட் நிருபர் —

ஒரு மாதத்துக்குப் பிறகு இலங்கைப் பார்லிமெண்ட் சபை சென்ற செவ்வாயன்று கூடியது. மீண்டும் பொதுமக்கள் அனுமதிக்கப்படவில்லை. வெள்ளை சேட்டும், சாரமும் அணிந்த இரகசிய பொலிசாரும், உத்தியோக உடை அணிந்த பொலிசாரும் தான் கலரிகளிலிருந்து கவனித்து வந்தார்கள். மேலேயுள்ள பத்திரிகைக் கலரிகளில் காதில் வைத்துக்கொண்டு கேட்கும் "இயர் போன்" அகற்றப்பட்டு விட்டன! இந்தக் கருவிகளை ஏன், யார் அகற்றிவிட்டார்களோ தெரியவில்லை. இதைப் பற்றி சார்ஜன்ட் இஸ்மைலிடம் தெரிவித்தேன். அதைப்பற்றித் தாம் கவனிப்பதாக அவர் வாக்களித்தார்.

முன்னர் பொலிஸ் அதிகாரியாக இருந்த இஸ்மைல், 12 வருஷகாலமாக இச் சபையின் சார்ஜன்ட் அட் ஆம்ஸாகக் கடமையாற்றுகிருர். சபைத் தலைவர் வரும்போது, வெள்ளித் தடியைத் தூக்கி முன்னதாக நடந்து "ஸ்பீக்கர்" என்று கணீரெனக் கட்டியம் கூறுகின்ருர். முன்னர் ஒரு சமயம் திரு. தகநாயக்கா எதிர்க் கட்சியிலிருந்து கலாட்டா செய்கையில் தலைவரின் உத்தரவின்மீது, இதே சார்ஜன்ட், தகநாயக்காவைப் பலவந்தமாக வெளியேற்றினுர். இன்று அதே 'கலாட்டா' தகநாயக்கா, சாந்தமே உருவெடுத்தது போல் பிரதமர் ஆசனத்தில் அமர்ந்திருக்கிருர்! காலம் செய்யும் கோலம்தான் என்ன!

### சிரித்துக்கொண்டு

2 மணி. "ஙிணு ஙிணு" வென்று பார்லிமெண்ட் மணி அடித்து எல்லாரையும் வருமாறு அழைத்தது. பிரதமர் தகநாயக்கா "டக்" என்று கணக்காக 2 மணிக்கு வந்து சேர்ந்தார். அவருக்கு நேர் எதிரிலே எதிர்க் கட்சித் தலைவர் வந்திருந்ததைக் கண்டதும், "என். எம். தங்கள் மனம் திருப்தியடையும் வகையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவாருங்கள்" என்று சிரித்துக்கொண்டே கூறினுர். இதைக் கேட்டு என். எம்.மும் வாய்விட்டுச்சிரித்தார். பாவம்! எந்தப்பிரதமருக்கும் பதவி ஏற்றதும், இப்படி வரிசையாக, நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் வந்ததில்லை. பிரதமரின் மனமெல்லாம் இப்போது இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைப் பற்றித் தான் கவலையில் ஆழ்ந்துள்ளது. பாவம்!

ராஜினுமாச் செய்த நிதிமந்திரி கடைசி பெஞ்சியிலே ஒரு மூலையில், பேசாமல் அமர்ந்திருந்தார். அவர் இருந்த ஸ்தானத்தில் புதிய நிதி அமைச்சர் வாலிபர் முஸ்தபா மூக்குக் கண்ணுடியுடன் குஷியாக அமர்ந்திருந்தார். அதே ஆசனத்தில், அவருடைய மாமனுர் காரியப்பர், பக்கத்தில் இருந்தார். மாமனுரும் மருமகனும் பார்லிமெண்டிலே பக்கத்தில் இருந்த காட்சி திருஷ்டி விழும்போலிருந்தது. தூக்குத் தண்டனையை மீண்டும் அமுல் நடாத்த வேண்டுமென்ற பிரேரணை பற்றி அரசாங்கம் சார்பில் வழக்கறிஞரான மருமகனும் மாமனுரும் தான் பேசினுர்கள். முஸ்லிம்கள் சிறுபான்மை சமூகமாக இருந்தும், மிக ராஜதந்திரத்துடன் நடந்ததால், இன்று பார்லிமெண்டில், தலைவர் பதவியையும், தபால் மந்திரி நிதி மந்திரி, உதவி நீதி மந்திரி இப்பதவிகளையும் அச்சமூகத்தினர்வகிக்க முடிவது குறிப்பிடத்தக்கது.

தூக்குத் தண்டனை மசோதாவை எதிர்ப்பதில் எதிர்க் கட்சிகள் சிரத்தை கொள்ளவில்லை. வாக்கு எடுக்கும்போது எதிர்க்கட்சி ஆசனங்கள் எல்லாம் காலி. சமஷ்டிக் கட்சியைச் சேர்ந்த திரு. அமிர்தலிங்கம் ஒருவர் மட்டுமிருந்து மசோதாவை ஆதரித்து வாக்களித்தார். 43 பேர் சாதகமாகவும், 13 பேர் எதிர்த்து வாக்களித்ததும், அரசாங்கக் கட்சியினர் பலமாகக் கரகோஷம் செய்தனர்.

கேள்வி நேரத்தின்போது அரசாங்கக் கடிதக் கூடுகளில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை டாக்டர் என். எம். மீண்டும் கூறி, பழைய நிதி மந்திரியின் மைத்துனருக்கு இவ்விஷயமாக ஏகபோக உரிமை அளிக்கப்பட்டதா? என்று கேட்டார். புதிய நிதி மந்திரி முஸ்தபா சாமர்த்தியமாக விடையளித்து, ஒரு கோடி 40 லட்சம் கூடுகள் பெற 'கிரவுன் ஏஜண்டு'களிடம் ஏற்பாடுகள் செய்திருப்பதாக அறிவித்து, நிலைமையைச் சமாளித்தார்.

### 'இல்லை. இல்லை'

பொலிஸ் அதிகாரி ஸிட்னி, தமது இரு சகாக்களைப் பற்றி புகார் கூறியுள்ளாரா? என்று டாக்டர் என். எம். கிளப்பிய கேள்விக்கு, பிரதமர், 'இல்லை இல்லை' என்று பதிலளித்தார். என்ருலும் 'டைம்ஸ்' பத்திரிகை தாங்கள் வெளியிட்ட செய்தி உண்மையே என்று சாதித்துள்ளது

இதைத்தவிர செவ்வாயன்று கூட்டம் ஒரே 'டல்லு' 'டல்லு'. மெம்பர்களில் பலரும் வெளியிலே மண்டபத்திலிருந்து கூட்டங் கூட்டமாக 'குசு குசு'ப் பேச்சுகள் நடத்தினர். எல்லாம் நம்பிக்கையில்லாத் தீர்மானம், தகநாயக்காவின் தலை எழுத்து இதைப் பற்றித்தான் பேச்சு. அரசாங்கக் கட்சிக் குள்ளாகவே தகநாயக்காவுக்கு விரோதமாக சதி வளர்ந்து வருகிறது.

நிலைமை மோசமாவதை உணர்ந்த மந்திரி ஆர் ஜி. சேனநாயக்கா, தமது உறவினரும் முன்னுள் பிரதமருமான சேர்ஜோன்கொத்தலாவலையை மீண்டும் பிரதமராக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்கின்ருர். இது வரை சுமார் 30 எம். பி. க்களின் ஆதரவைப் பெற்றுள்ளதாக வதந்திகள் அடிபடுகின்றன. சேர் ஜோனும், இதற்குச் சம்மதிப்பதாகத் தெரிகிறது. ஆனுல் கடைசி வரை தகநாயக்கா, பதவியை விட்டுக் கொடுக்கச் சம்மதிக்க மாட்டாரென்றும், ஸிட்னி, அவசியமானுல் நீதி மந்திரி இவர்களையும் அனுப்பி விட்டு, இந்த நெருக்கடியைச் சமாளிக்கலாமென்றும், கூடுமானவரை சபையைக் கலைக்க எம். பி.க்களில் பெருபாலோர் விரும்பவில்லையென்றும் தெரிகிறது. இதற்காக என்ன செய்யலாம் என்ற முயற்சியிலேயே சிறப்பாக அரசாங்கக் கட்சி அங்கத்தவர்கள் ஈடுபட்டிருக்கிருர்கள்.

### புதன்கிழமை

புதன்கிழமை உத்தியோகப் பற்றற்றவர் தினம். சாதாரணமாக எப்போதுமே இந்தத் தினம் அழுது வடியும். இப்போதோ வீடு பற்றி எரிகிறது. மற்ற விஷயங்களைப் பற்றிக் கவனிக்க யாருக்குத்தான் மனம் இடம் கொடுக்கிறது! 2 மணிக்குக் கூடிய சபை 3-30 மணிக்கு 20 பேர் கூட இல்லாததால் 'கோரம்' மின்றிக் கலைந்து விட்டது.

இதற்கிடையே வெலிமடை பிரதிநிதி ஸ்ரீமதி குஸுமா ராஜரத்ன, யூகோஸ்லேவியா ஸ்தானிகரை இலங்கையிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்ற தமது பழைய பல்லவியைப் பாடினுர். சிங்களத்தில் எழுதி வந்து, அதையே பேசுகிருர். பண்டாரநாயக்கா கொலையும் அவரது சதிதான் என்றும், தி.மு.க.வும் இச்சதியில் சேர்ந்துள்ளதாகவும் ஏற்கெனவே அவர் சபையில் பேசினுர். இதைச் சென்னை தி. மு. க. தலைவர் நெடுஞ்செழியன் மறுத்து அறிக்கை வெளியிட்டிருந்தார் என்ருலும் இந்த உருப்படாத தீர்மானத்தை அவர் கொணர்ந்து, பலர் தடுத்தும் விடாமல் பேசினுர். அவருக்கு பக்கவாத்தியமாக கம்பகா பிரதிநிதி எஸ். டி. பண்டாரநாயக்கா பேசி, யூகோஸ்தானீகரான டாக்டர் கோஸ்டிக்கை வெளியேற்ற வேண்டுமென்று கேட்டார்.

நல்ல வேளையாகப் பிரதமர் தகநாயக்கா எழுந்து, யூகோ பிரதிநிதி இலங்கைக்கு வெகு உதவியாக இருந்து வருவதாயும், அவருக்கு விரோதமாகப் பேசப்பட்டதைக் கேட்டு வருந்துவதாகவும் கூறினுர். முடிவில் வாக்குக்கு விடப்பட்டபோது, வெலிமடை, கம்பகா இவ்விரண்டையும் தவிர வேறு யாரும் வாக்களிக்கவில்லை. நாட்டுக்குச் செய்ய வேண்டிய எவ்வளவோ காரியங்களிருக்கையில் இவ்விதபயனற்றபேச்சுக்கள் மூலம் சபை நேரமும், பொதுமக்கள் பணமும் வீணுக்கப்படுகின்றன.

ஸி. ஸி. எஸ். ஸை நீக்கி எல்லா அரசாங்க சேவைகளையும் ஒரே சீராக்க வேண்டுமென்று தேமிஸ் பிரேரணை கொணர்ந்தபோது சபையில் கோரமில்லாது போகவே, அது கலைந்துவிட்டது.

# கடுகளவு மானமிருந்தால்

(8A பக்கத் தொடர்ச்சி)

கௌரவம் "ஏதோ ஒரு விதத்தில்" பாதிக்கப்பட்டதாகப் புகார் கூறுகிருர். "ஏதோ ஒரு விதத்திலாம்"(சிரிப்பு). அவரது சொந்த கௌரவத்தைப் பாதுகாத்துக்கொள்ள அதை அனுமதித்தாகக் கூறுகின்ருர். இதைப் பற்றி நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கலாமே. முன்னர் இதே போல் ஒரு விஷயத்தில் மாஜி விவசாய மந்திரி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்விதமே இப்போதும் செய்திருக்கலாமே! ஒரு அதிகாரி அநீதியாக தாக்கப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட மந்திரி இச் சபையில் எழுந்து, அவரைப் பாதுகாக்க வேண்டும். இது மந்திரியின் கடமை. இன்றேல், அந்த மந்திரி வெளியேற வேண்டும். ஒரு அதிகாரி இச் சபை விஷயத்திற்குப் பத்திரிகைகள் மூலம் பதில் சொல்லுவதாயின் இச் சபையால் என்ன பயன்? இனி எந்த அதிகாரியும் இவ்விதம் செய்யலாமே. இந்தப்பார்லிமெண்டின் மதிப்பும் மானமும் பறந்தே போய் விடும். நீதி மந்திரியின் இந்த நடத்தை இச் சபையின் மதிப்புக்கு ஒரு பெரிய இடியாகும்.

எந்த பார்லிமெண்ட் சரித்திரத்திலும் இவ்வித ஒழுங்கீனம் ஏற்பட்டதில்லை. இது பெரிய தப்பு. எந்த அரசாங்கமும் உடன் சம்பந்தப்பட்ட மந்திரிக்குக் கல்தா கொடுத்திருக்கும்.

இச்சபையின் கௌரவத்தைக் காக்க, எதிர்க்கட்சியினர் இப்பிரேரணை கொண்டு வரும் சமயத்தில், நேற்று நடுநிசியிலே, அரசாங்கக் கட்சி கூடி, இதைப்பற்றி விவாதிக்க ஆரம்பிக்கிறது. வெட்கம். நடைமுறைசட்டம் இதுபற்றித் தெளிவாகவுள்ளது. பத்திரிகைக்கு அரசாங்கத்திலுள்ள இருவித மானவர்கள் அறிக்கையை பொதுஜன நன்மைக்காக வெளியிடலாம். அவர்கள் நிரந்தரக் காரியதரிசியும், இலாகா தலைவருமே. தகவல் இலாகா மூலமே இது பத்திரிகைகளுக்கு வெளியிடப்படவேண்டும். அவசியமான சில சமயங்களில் நிரந்தரக் காரியதரிசி நேர்முகமாகப் பத்திரிகைக்குத் தகவல் கொடுக்கலாம். இதுவே சட்ட முறை. ஆனுல் இப்போது ஒரு சில்லறை அதிகாரி இச்சபையின் விவாதத்துக்குப் பதிலளிக்கின்ருர். ஆகவே ஸிட்னி சொய்ஸா, அரசாங்கச் சட்டப்படி குற்றவாளி. நீதி மந்திரி அனுமதித்தது காரணமாக அந்த அதிகாரி நிரபராதி ஆக மாட்டார்.

நீதிமந்திரி, சட்டத்துக்கு விரோதமாக ஓர் அதிகாரியை நடக்குமாறு செய்ய, ஸிட்னி தமது அறிக்கைக்கு "பிரதமரின் கொலையைப்பற்றி சில உண்மைகளைப் பொது மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும்" என்று தலைப்புக் கொடுத்துள்ளார். கொலையைப்பற்றிப் பேச அவர் யார்? இந்த சொய்ஸா ஒரு மண்டைக்கர்வம் பிடித்தவர். பொலிஸ் இலாகா அனைத்தின் சார்பாகவும் பேச அவர் யார்? இதை நீதி மந்திரி எப்படி அனுமதித்தார்? இந்தக் கடிதத்தை அவர் படித்தாரா? இவ்வித மந்திரியை ஆதரிக்கப் பிரதமர் வெட்கப்படவேண்டும். (கரகோஷம். இச்சமயம் பிரதமர் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டிருந்தார்). யார் இந்த ஸிட்னி சொய்ஸா? இந்த ஆசாமியின் திமிரையும் ஆணவத்தையும் பாருங்கள்! இந்த இலகாவுக்கு எந்த மாதிரி மந்திரி கிடைத்தார்! ஐ. ஜி. பிக்காகவும் அந்த அதிகாரி பேச வேண்டுமா? இனி ஒரு சில்லறை குமாஸ்தாவும் ஐ. ஜி. பிக்காகப் பேச அனுமதிக்கப்படுவார் போலும்.

(அரசாங்க நாற்காலிகள் பல இச்சமயம் காலியாக இருந்தன. எதிர்க்கட்சி பீரங்கி கர்ச்சிக்க ஆரம்பித்து விட்டது)

டாக்டர் என். எம். மேலும் பேசியதாவது:

விமலாமீது குற்றத்துக்கான சாட்சியமில்லை என்று அந்த அறிக்கையில் ஸிட்னி கூறுகின்ருர்.

தலைவர்:- வழக்கு விசாரணை பற்றி எதுவும் கூறப்படாது.

டாக்டர் என். எம். :- இல்லை. விமலா மீது குற்றத்துக்கான சாட்சியமில்லை என்பதை நீதி மந்திரி எப்படி ஆதரித்தார்?

டாக்டர் கொல்வின்:- அது தான் கோட்டை அவமதித்ததாகும். (திரு. சுபசிங்கா முதலியவர்கள் ஆத்திரத்துடன், "இதுதான் நீதியா? வழக்கை கொல்லுகிருர்கள்" என்று கூச்சலிட்டனர்)

டாக்டர் மேலும் பேசுகையில் ஐ. ஜி. பியையே காலைவாரிவிட, ஸிட்னி முயற்சித்ததாகக் கூறிவிட்டு, அவர் இந்தச் சபை மெம்பர்களையெல்லாம் அவமதித்துள்ளார். சந்தேகப் பேர்வழிகளென்கிருர் நம்மை. இச்சபையிடம் சம்பளம் வாங்கும் ஒரு சிப்பந்தியை இப்படிச்செய்ய அனுமதிக்கலாமா? ஒரு கடுகளவு மான மிருந்தால், எந்தப் பிரதம மந்திரியும் உடன் அந்த அதிகாரியை 'டிஸ்மிஸ்' செய்திருப்பார். இந்த அறிக்கையை நீதி மந்திரி அனுமதித்துள்ளார். நீங்கள் (பிரதமர்) சந்தேக ஆசாமியாக இருக்கலாம்.(கரகோஷம்) நான் அப்படியல்ல. (இச்சமயம் பிரதமர் ஒரு கைக்குட்டையை கொண்டு மூக்கைச் சிந்திக்கொண்டிருந்தார்). இந் நாட்டு மந்திரிகளின் உரிமையைக் காக்கும் இந்தச் சபையைப் பாதுகாக்க எல்லா மெம்பர்களும் ஒன்றுகூடி இப்பிரேரணையை ஆதரிக்கவேண்டும். (பலத்த கரகோஷம்).

முன்னுள் மந்திரி திரு. வில்யம் சில்வா, இப் பிரேரணையை ஆமோதித்தார். "அரசியல் சட்டப்படி வேறு மந்திரிகள் இல்லாவிடினும், பிரதமர், நீதிமந்திரி, நிதிமந்திரி இவர்கள் மூவரும் இருக்கவேண்டும். நீதி மந்திரி செனேட் சபை மெம்பராக இருக்க வேண்டும். பொலிஸ் இலாகாவைஅவரிடம் பிரதமர் ஒப்பிவித்தது முதல் தவருகும். இதன் காரணமென்ன? பழைய பிரதமரே இந்தத் தவறுக்குக் காரணமெனப்படுகிறது. அவர் இவ்வித பல தவறுகள் செய்த பலனை நாம் இப்போது அனுபவிக்கவேண்டியுள்ளது.

திரு. சில்வா:—

இவ் வழக்குப் பற்றிய வதந்திகளைப்பற்றி நான் பேசலாமா? (சிரிப்பு).

தலைவர்:—

கூடாது. (சிரிப்பு).

ஸில்வா;—

ஸிட்னி தமது அறிக்கையில் பொலிஸ் நோட் புத்தகத்திலிருந்து சில தகவல்களை வெளியிட்டார். அத் தகவல் அவருக்கு எப்படிக் கிடைத்தது? இதைப் பிரசுரிக்க நீதி மந்திரி அனுமதித்தது, நீதி நிர்வாகத்துக்கு முரண்பட்டது. இதை நீதி மந்திரி எப்படி அனுமதித்தார்? இது இந் நாட்டு நீதி நிர்வாகத்தையே பாழாக்கும். எல்லா வதந்திகளையும் அவர் குறிப்பிடவில்லை. தமது சகோதரரான டிக்கியைப் பற்றி ஒன்றும் கூருமல், விமலாவைப் பற்றி மட்டும் குறிப்பிட்டுள்ளார். இது திட்டமிட்டு வெளியிடப்பட்ட அறிக்கையாகும்.

ஆனுல் பிரதமரோ மந்திரி சபையில், இந்த அறிக்கைக்காக ஸிட்னியைப் பாராட்ட வேண்டுமென்றும் இதனுல் இந் நாட்டுக்குச் சேவை செய்துள்ளாரென்றும் கூறவில்லையா? இந்த அறிக்கைக்கு, இந்த அரசாங்கம், இந்த மந்திரி சபை அனைத்தும் பொறுப்பாகும். இந்த மந்திரி சபை இதற்குப் பொறுப்பானுல் இது அரசாங்க அறிக்கையாகும். ஆகவே இதை விவாதிக்க அனுமதிக்க வேண்டும்.

தலைவர்:- அது முடியாது.

திரு ஸில்வா:-

அப்படியானுல் பிரதமர் அந்த அறிக்கையை மறுக்க வேண்டும். நீதி மந்திரி இன்னும் மந்திரி சபையில் இருக்கின்ருர். ஆகவே இந்த மந்திரி சபை அனைத்தும் இதற்குப் பொறுப்பாகும். இந்த அறிக்கையைப் பற்றி ஐ. ஜி. பி. நிரந்தரக் காரியதரிசி இவர்களது கருத்துக்களென்ன? அவர்கள் மூலம் இது மந்திரிக்குச் சென்றிருந்தால், அவர்கள் என்ன குறிப்பிட்டுள்ளனர்? அந்த முறை அனுஷ்டிக்கப்படவில்லை. ஸிட்னி நேர்முகமாக மந்திரிக்கு இதைக்கொண்டு சென்றுள்ளார். இது மந்திரியின் வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டதா? கேளுங்கள். (கரகோஷம்) இது மிக முக்கியம். இது அசாதாரண முறை. நமது உயிர் இந்த மாதிரி ஆசாமியின் கையில் பத்திரமாகவுள்ளதா? (கரகோஷம்) அவர் மீது எனக்குத் தனிப்பட்ட முறையில் ஒன்றுமில்லை. ஆனுல் சட்டத்தை மீறும் ஒருவர் நீதி மந்திரியாக இருக்கலாமா? சற்றும் தகுதியற்றவர் இந்த மந்திரி. இவர் இப் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும். பிரதம மந்திரிப் பதவி வகுத்தவர் விஷயமாகவே இப்படியாயின், இந் நாட்டில் யார்தான் பயமின்றி வாழமுடியும்? இது சாதாரண கொலையல்ல. அவர் அதோ அந்தப் பிரதமமந்திரி ஸ்தானத்தில் இரண்டு மாதங்களுக்கு முன் இருந்தவர் வழக்கு விசாரணை, கட்சி அரசியல் வசதிக்கான முறையில் நடக்கிறது. நாங்கள் இதுபற்றிக் கூச்சலிடுவதில் என்ன தவறு? நீதி முறையில் நிர்வாகம் குறுக்கிடுகிறது. இதனுல் நீதிமுறையில் பொதுமக்களுக்கு நம்பிக்கையில்லாது போகிறது. இது கட்சிவிஷயமல்ல. இப் பிரேரணையை ஏகமனதாக அங்கீகரித்து இச் சபையின் மானத்தையும் மரியாதையையும் காப்பாற்ற வேண்டுகிறேன். (கரகோஷம்.)

# பெருவெள்ளத்துக்கான பாதுகாப்பு

## இதுவரை சேதம் மிகக் குறைவு

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம்

**யா**ழ்ப்பாணத்திலுள்ள எல்லாக் காரியாதிகாரிகளுக்கும் (டி. ஆர். ஓ.), கிராம விதானைமாருக்கும் மழை, வெள்ளத்தால் உண்டாகும் சேதங்களை ஊன்றிக் கவனிக்கும்படியும், அடிக்கடி தங்கள் பகுதிகளைச் சுற்றிப் பார்த்து நிலைமையைக் கிரகித்து அறிவிக்கும்படியும், பகுதிகளை விட்டு வெளியே போவதாயிருந்தால் தக்க ஒழுங்குகளைச் செய்து விட்டுப் போகும்படியும் உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. மழை வெள்ளத்தால் இன்றுவரை ஏற்பட்டுள்ள சேதம் அவ்வளவு மோசமானதாயிராவிட்டாலும், ஒவ்வொரு பகுதியிலும் எத்தனை வீடுகள் இடிந்து விழுந்தன, எத்தனை வீடுகளில் வெள்ளம் பிரவேசித்து விட்டது, எத்தனை பேர் வீடுகளைக் காலி செய்து கொண்டு போயிருக்கிறார்கள்—முதலிய விபரங்களைத் தரும்படி யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கேட்டிருக்கிறார்.

### குருநகரில்

பட்டினப் பகுதியில் ஆக குருநகரில் தான் கொஞ்சம் பலத்த நஷ்டம் உண்டாகியிருக்கிறது. இங்கு 30 குடும்பங்கள் வரை வீடுகளை இழந்து விற்பனவு வசதி இலாகா கட்டடத்திலும், விவசாய விற்பனவு பொருட் சங்க கட்டடத்திலும் தற்காலிகமாகக் குடியிருத்தப்பட்டிருக்கின்றன.

இவர்கள் எல்லோருக்கும் அரசாங்க அதிபரின் கட்டளையின் பேரில் இலவச "ரேஷன்கள்" விதானைமாரால் வழங்கப்பட்டன. திருநெல்வேலி, நல்லூர், கொட்டடி, கொழும்புத்துறை, சோனகதெரு, அரியாலை முதலிய இடங்களில் 20 வீடுகள் வரை இடிந்து விழுந்து விட்டன—175 வீடுகளில் வெள்ளம் புகுந்து விட்டது. இவ்வீடுகளில் வசித்து வந்தவர்கள் எல்லோரும் வெள்ளம் வற்றும் வரையில் இனசனங்களின் வீடுகளில் தற்காலிகமாகக் குடியிருக்கிறார்கள்.

### துரித நடவடிக்கை

குடிமனைகளில் புகுந்த வெள்ளத்தை வெட்டி வெளியேற்றுவதில் நீர்ப்பாசன இலாகா துரிதமான நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் மழை பெய்து வெள்ள ஆபத்து ஏற்பட்டால் வீடிழந்தவர்களைக் கிராம முன்னேற்ற சங்க கட்டடங்களிலும், சனசமூக நிலையக் கட்டடங்களிலும், கோயில்களிலும் குடியிருத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யுமாறு விதானைமாருக்குக் கட்டளை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

யாழ்ப்பாண பகுதி டி. ஆர். ஓ. கந்தோருக்கு வெள்ள நிவாரணம் கோரி இதுவரை ஆக 37 விண்ணப்பங்களே வந்திருக்கின்றன. இதிலிருந்து எதிர்பார்த்தளவுக்குச் சேதமுண்டாக வில்லையென்று ஊகிக்கலாம். ஆனல் இனிமேல் நிலைமை எப்படி எப்படியோ?

அடாது பெய்யும் மழை, அடுக்களைக்குள் வரும் வெள்ளம், இடிந்து விழும் சுவர்—இப்படியான நிஷ்டூரங்களுக்கிடையே மனிதரின் விபரீத போக்கும் சில இடங்களில் பளிச்சிடுகிறது. மேற்சொன்ன பகுதிகளில் வீடிழந்து தவிப்பவர்களுக்கு அரிசி, சீனி, பாண் முதலியவை கொடுக்கிறோமென்று அதிகாரிகள் முன்வரும் போது எமக்கு அதுவொன்றும் வேண்டாம், பணமே தேவை என்று பிடிவாதம் செய்பவர்களும் இருக்கின்றனர்.

---

# இரத்தினக் கம்பளம்

பதுமன்

**ஹ**னுமான் செய்து காட்டிய திருப்பணியைத் தமிழ் நாட்டுத் தலைவர்கள் சிலர் இன்றுந்தான் தொடர்ந்து பயபக்தியுடன் கையாண்டு வருவதைக் கவனிக்கும்போது, குரங்கிலிருந்துதான் தமிழன் தோன்றினன் என்ற முடிவே சரியானதெனப் பதுமனின் மூளைக்குத் தோன்றுகின்றது.

### ஹனுமான் அடிச்சுவட்டில்

பக்த ஹனுமான் இலங்காபுரியைத் தனது வாலினல் தீக்கிரையாக்கினன். பெரியார் ஈ. வே. ராமசாமி நாயக்கர் கணபதிராயரைக் குட்டிக் கும்பிடாமலே அவரை அப்படியே சுக்கு நூறாக்கிவிட்டு, இந்தியாப் படத்தைப் பிடி சாம்பராக்கி வந்தார். இவருடைய திருப்பணியை யார் பின்பற்றப் போகின்றனர் என எல்லோரும் அங்கலாய்த்துக் கொண்டிருக்கையில் முற்றிலும் எதிர்பாராத முறையில் பெரியாருக்கு ஒரு பக்தர் தாய்நாட்டிலேயே தோன்றிவிட்டார்.

### தீக்குச்சி செய்தவேலை

அவர் யாராக இருக்கலாமென்று அறிய நீங்கள் துடிதுடித்துக் கொண்டிருப்பதை அறிந்து, அவர்தான் எங்கள் மதிப்புக்குரிய சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் என்பதை அறியத் தருகின்றேன். தமிழ் மொழிக்கும் தமிழர் பண்பாட்டுக்கும் அளப்பரும் பணியாற்றி வரும் இராஜாஜியா கொள்ளியைக்கையில் எடுத்தார், என நீங்கள் ஏங்கக்கூடும். ஆம், அவர் அப்படியான ஒரு கைங்கரியத்தைத் தாம் செய்து முடித்திருப்பதாகவே கூறியிருக்கின்றார்.

சுதந்திரக் கட்சியை ஒரு தீக்குச்சிக்கு ஒப்பிட்டுத் திருநெல்வேலி மாநாட்டிற் பேசிய இராஜாஜி அத் தீக்குச்சியானது சிறியதொன்றாயினும், போலியான காங்கிரஸ் மாளிகையை அது மிக இலகுவாகத் தகனம் செய்துவிட்டதெனக் கூறினர்.

### தீப்பெட்டி விலையேற்றம்

தீக்குச்சியின் திருப்பணியைப் பற்றிப் பேசும்போது இலங்கையில் இந்நாட்களில் தீப்பெட்டிக்கு ஏற்பட்டுள்ள 'கிராக்கி' நினைவுக்கு வருகின்றது. இலங்கையிலே தீப்பெட்டி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்குப் போதியளவு மருந்துவகைகளும், குச்சிகளும் கிடைப்பதிற் சில பல இடையூறுகள் இருந்தமையினல் இலங்கைக்குத் தேவையான தீப்பெட்டிகளில் கணிசமான ஒரு தொகையை இந்தியாவிலிருந்து தருவிப்பதற்கு இலங்கை அரசாங்கம் முடிவு செய்தது. அத்துடன் இந்தியாவிலிருந்து வரும் தீப்பெட்டிகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மூன்றரைச் சதத்துக்கே பொது மக்களுக்கு விற்கவேண்டுமெனவும் அரசாங்கம் அப்போதே விலையையும் நிர்ணயித்திருந்தது.

### வயிறு எரிகின்றதே!

இந்த ஒழுங்கின் பிரகாரம் தீப்பெட்டிகள் வந்து கொண்டிருப்பதுஉண்மைதான்.எனினும் பாலைப்பழம் போல ஐந்துசதக் குத்தியை எடுத்து நீட்டினல்தான் தீப்பெட்டி கைக்கு எட்டுகின்றது. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு தீப்பெட்டிகளை வருவித்த இலங்கை அரசாங்கம் அதன் விலையையும் கட்டுப்படுத்தியிருக்க வேண்டும். விலையேற்றத்தால் கஷ்டமுறுபவர்கள் சாதாரண மக்களே. அவர்களுக்கு அது உற்ற துணை போன்றது. அதுவும் இந்தமாரி காலத்திற் கொட்டிலிலும் 'குடிசையிலும் வாழ்பவர்கள் விளக்கேற்றுவதற்குப்படும் கஷ்டம் கொஞ்சம் நஞ்சமல்ல. தீப்பெட்டித் தட்டுப்பாடும் விலையேற்றமும் இவர்களை எல்லாம் ஆட்டி வைக்கின்றனவே யென எண்ணும்போது வயிறு பற்றி எரிகின்றதே!

---

## மூவர் பிரச்சினை!

1. **வானெலிப் பேச்சாளர்:** எழுதும்போதோ பேசும்போதோ தெளிவும் உண்மையும் தான் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள். எழுதுபவர்கள் தங்கள் கருத்துகளை எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் சிறிய வசனங்களில், சுத்தமான தமிழில் எழுத வேண்டும். பேசுபவர்களும் அவ்விதமே படாடோபமான வார்த்தைகளை நீக்கி சிறு குழந்தைக்கும் விளங்கக் கூடிய முறையில் பேச வேண்டும். பத்திரிகையில் எழுதுபவர்கள் இந்த விஷயத்தில் மிகவும் கவனமாயிருக்க வேண்டும். ஓர் உதாரணம்: சில நாட்களுக்கு முன் ஒரு பத்திரிகையில் சங்கீதக் கச்சேரியைப் பற்றி எழுதிய ஒருவர், "பாடகி அடுத்தாற்போல 'கொக்கர' என்ற பாட்டை வெகு அழகாகப் பாடினர்" என்று எழுதியிருந்தார். இது தவறு 'கொக்கர கொக்கரகோ கோழியே' என்று முழு வரியையும் எழுதியிருக்க வேண்டும். இதே சங்கீத கச்சேரியைப் பற்றி ஒருவர் பேசுவதாகில் 'கொக்கர கொக்கரகோ கோழியே' என்று சும்மா சொல்லுவதிலும் பார்க்க சேவலைப்போல கூவிவிட்டால் மிகவும் பொருத்தமாயிருக்கும்.

2. **அறிவிப்பாளர்:** எமது அடுத்த நிகழ்ச்சி ஸ்ரீமதி லீலா குமாரியின் சங்கீதக் கச்சேரி. முதலில், 'காலைத் தூக்கி' என்ற பாட்டு.

3. **கேட்டுக் கொண்டிருக்கும் பத்திரிகையாளர்:** அட கர்மமே! அந்த மனிதன் பேசி முடிந்து ஒரு விநாடி கூட ஆகவில்லை. இப்படிக் கொலை பண்ணி விட்டாரே இந்த அறிவிப்பாளர். 'காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே' என்று சொல்லியிருக்கப்படாதா!

---

## 'வியப்பில்லை!'

**பி**ரதமர் தகநாயக்கா சமஷ்டிக் கட்சியின் ஒத்துழைப்பை நாடியதாக 'ஈழநாடு' 14-11-59 இதழில் நமது அரசியல் நிருபர் எழுதியிருந்த செய்தியைச் சம்பந்தப்பட்டவர்கள் மறுத்து அறிக்கைகள் வெளியிட்டிருந்தனர்.

இதில் வியப்பில்லை என்றும், பொறுப்பும் நம்பிக்கையுமுள்ள விஷயமறிந்தவர்கள் தெரிவித்ததைக் கொண்டே அதை வெளியிட்டதாகவும் நமது அரசியல் நிருபர் தெரிவிக்கின்றார்.

இத்தகவலை வெளியிட்டதன் மூலம் இந்நாட்டுக்கு, 'ஈழநாடு' நல்லதொரு பணி செய்துள்ளதாகப் பலர் பாராட்டி எழுதியிருக்கிறார்கள்.

## திரு. இராஜவரோதயம்

**த**மிழரசுக் கட்சித் தலைவரான திரு. இராஜவரோதயம், பல்கலைக் கழகக் கோர்ட்டுக்கு ஓர் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக, பார்லிமெண்ட் தலைவர் வெள்ளியன்று அறிவித்தார்.

## அவசரகால பிரகடனம்

டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் அவசரகால பிரகடனத்தைப் பிரதமர் நீக்கிவிடக் கூடும்.

## பண்டாரநாயக்கா கொலைவழக்கு

### ஏழு எதிரிகளுக்கும் விளக்க மறியல்

**தி**ரு. பண்டாரநாயக்கா சதி வழக்கில் கைதியான டிக்கி சொய்ஸா விடுதலை செய்யப்பட்டார். மற்ற ஏழுபேர்மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. டிசம்பர் 7-ந் திகதி வரை ஏழு எதிரிகளும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

---

## வட இலங்கை ஆசிரியர் சங்கம் நடாத்தும் கனிஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சை

வட இலங்கை ஆசிரியர் சங்கம் ஆண்டுதோறும் நடாத்தி வரும் கனிஷ்ட தராதரப் பத்திரப்பரீட்சை இவ்வாரம் ஆரம்பமாகி நடைபெறுகின்றது. யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் மன்னர் திருக்கோணமலைப் பகுதிகளிலுமுள்ள பள்ளிக்கூட மாணவர்கள் இப்பரீட்சைக்கு எழுதுகின்றார்கள். இவ்வாண்டு 3000க்கு மேற்பட்ட மாணவர்கள் இப்பரீட்சையில் தோற்றியுள்ளனர்.

---

# கொழும்பு மாநகரில் வலதுசாரி-இடதுசாரிப் போட்டி

## 161 நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் 37 தொகுதிகளுக்கு 161 நியமனப்பத்திரங்கள் இவ்வாரம் தாக்கல் செய்யப் பட்டன. இதற்கு முன்னர் இடதுசாரிக் கட்சிகள் ஒன்றையொன்று எதிர்த்துப் போட்டியிடுவதில்லை என்ற அதிகாரபூர்வமற்ற ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியிருந்தாலும் ஒருசில வட்டாரங்களில் மட்டுமே இதனைச் செயலில் காட்டியிருக்கின்றன. சில இடதுசாரிக் கட்சிகள் நிச்சயமாக வெற்றிபெறக் கூடிய வட்டாரங்களில் மற்ற இடதுசாரிக் கட்சிகள் போட்டியிடவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இம்முறை சுயேச்சையாகப் போட்டியிடுவோரைத் தவிர ஆறு கட்சிகள், ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, சுதந்திரக் கட்சி (தொழிற்சங்கப் பிரிவு), லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை விவசாய தொழிலாளர் ஐக்கிய முன்னணி, கொம்யூனிஸ்ட்கட்சி ஆகியவைபோட்டியிடுகின்றன.

முன்னாள் மேயரான திரு. என். எம். பெரேரா இம்முறை நகரசபைத் தேர்தலில் போட்டியிடவில்லை. மூன்று லங்கா சமசமாஜக் கட்சிப் பாராளுமன்ற அங்கத்தவர்களும்,ஒரு கொம்யூனிஸ்ட், இரண்டு சுயேச்சைப் பார்லிமெண்ட் அங்கத்தவர்களுமாக ஆறு பிரதிநிதிகள் போட்டியிடுகின்றனர். திருமதி விவியன் குணவர்த்தன, திரு. அனில் முனசிங்க, திரு. பெர்னட் சொய்சா, திரு. பீட்டர் கெனமன், திரு. ஆர். இ. ஜயத்திலக்கா, திரு. மாக்கான் மரிக்கார் ஆகிய பிரதிநிதிகளே போட்டியிடுகின்றனர்.

நியமனப் பத்திரத் தாக்கல் தினத்தன்று பச்சை, சிவப்பு, நீலக்கொடிகளை ஏற்றிய மோட்டார் ஊர்வலங்கள் நடைபெற்றன. அன்றே நகரசபைக்கு முன்னே வலதுசாரிக் கட்சியை ஆதரிப்போரும், இடதுசாரிக் கட்சிகளை ஆதரிப்போரும் பொருதினர். இருவருக்குக் காயம். நிலைமையைப் பொலிசார் சமாளித்தனர்.

நடைபெறப்போகும் கடும் போரின் எதிரொலியே இது எனக் கூறவேண்டும்.

அடுத்த மாதம் 19 ஆம் திகதி தேர்தல் நடைபெறுமெனத் தெரிகிறது. இதனிடையில் வலது-இடதுசாரிக் கட்சிகள் தங்கள் பலத்தைப் பெருக்கத் தங்கள் முழுச்சக்தியையும் உபயோகிக்க வேண்டியிருக்கும்.

---

## மழையுடன் காற்றும் சேர்ந்து மரங்களை வீழ்த்தின

யாழ்ப்பாணம்

வெள்ளிக்கிழமை இரவு தொடக்கம் யாழ்ப்பாணத்தில் பலமான காற்று அடிக்கத் தொடங்கியிருக்கிறது. மழையும் இடைவிடாது தூறிக் கொண்டேயிருக்கிறது. பல இடங்களில் மரங்களும் தந்திக் கம்பங்களும் அடியற்று விழுந்து விட்டன. காரைநகர் முதலிய தீவுப்பகுதிகளுக்கு பஸ் போக முடியாதபடி புன்னாலைப் பாலத்தின் மீது ஒன்றரை அடி ஆழத்துக்கு கடல் வெள்ளம் பெருக்கெடுத்தோடுகிறது. தந்தி, டெலிபோன் தொடர்புகளும் அறுந்து விட்டன. நீர்வேலி, கோப்பாய், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளிலுள்ள வாழைத் தோட்டங்களுக்கும் மரவள்ளித் தோட்டங்களுக்கும் காற்றினல் பெரும் சேதமுண்டாகுமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

யாழ்ப்பாண மேயரும் உதவி மேயரும் வேறு அரசாங்க அதிகாரிகளும் நகரிலும் பிற இடங்களிலும் சேதமடைந்த பகுதிகளைச் சுற்றிப் பார்த்து வருகின்றனர்.

## பிரிட்டிஷ் தொழிற் கட்சி எம். பி.க்கு

### சமாதானத்துக்கான நோபல் பரிசு

பிரிட்டிஷ் தொழிற் கட்சி பிரமுகரும், பார்லிமெண்ட் அங்கத்தினருமான பிலிப் நோஎல் பேக்கர் உலக சமாதானத்திற்கு உழைத்ததற்காக, அவருக்குச் சமாதான நோபல் பரிசு அளிக்கப்பட்டுள்ளது.

# நேரு - சௌ-என்லாய் சந்திப்பு விரைவில் ஏற்படுமா?

## 'இடைக்கால உடன்பாட்டு' நிபந்தனைகள்

சீனப்பிரதமர் அனுப்பிய கடிதத்துக்கு இந்தியப் பிரதமர் நேரு பதில் எழுதியுள்ளார். சீனப்பிரதமரைச் சந்தித்து எல்லைவிவகாரம் குறித்து பேச்சுவார்த்தைகள் நடாத்தத் தாம் சித்தமாக இருப்பதாகவும் ஆனால் இச்சந்திப்புக்கு முன்னதாக இருதரப்பினருக்கிடையே ஓர் இடைக்கால உடன்பாடு நிலைநாட்ட வேண்டும் என்றும் நேருஜி தமதுகடிதத்திற்குறிப்பிட்டுள்ளார். அவ்வுடன்பாட்டுக்குப் பின்வரும் நிபந்தனைகளை இருசாராரும் ஒப்புக்கொள்ள வேண்டும் என பிரதமர் நேரு யோசனை கூறியுள்ளார்.

1. லடாக்கில் ஒரு சூன்யப் பிரதேசத்தை அமைக்க வேண்டும். இதற்காக 1956 இல் சீனம் பிரசுரித்த படங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் எல்லையாக்க் கருதும் பிரதேசத்திற்குக் கிழக்கே சீனப்படைகளும் விலகி நிற்க வேண்டும். (இவ்வாறு இருதரப்பினரும் விலகிக் கொண்டால் 12,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள ஒரு சூன்யப் பிரதேசம் லடாக்கில் அமையும்). இப்பிரதேசத்தில் மக்கள் வசிக்காதபடியால் இங்கு நிர்வாக உத்தியோகத்தரை வைத்திருக்க வேண்டிய அவசியமும் இல்லை.

2. லோங்யூ பிரதேசத்திலிருந்து சீனப் படைகள் வெளியேற வேண்டும். இந்தியா இப்பகுதியை உடனடியாகக் கைப்பற்ற மாட்டாது.

3. வட, வடமேற்கு எல்லை 14,000 அடி தொடக்கம் 20,000 அடிவரை உயரமான பிரதேசங்களின் வழியாகச் செல்வதால் இப் பாகங்களில் ஆக்கிரமிப்பு நடைபெறுவது அசாத்தியம். இருதரப்பினரும் தத்தம் காவல் நிலையங்களில் இருந்து ரோந்துப் படைகளை அனுப்பாமலிருப்பதற்கு உடன்பட்டால் ஒரு மோதலும் நிகழமாட்டாது.

### நேருஜி உடன்பாடு

எல்லைப்புறத்தில் 25 மைல் அகலமான ஒரு சூன்யப் பிரதேசத்தை அமைக்க வேண்டும் என்ற சீனப் பிரதமரின் யோசனையை லடாக்கில் மாத்திரம் திருத்தங்களுடன் அமைக்க இந்தியப்பிரதமர் உடன்பட்டிருக்கிறார். வடகிழக்கிலுள்ள "மக்மோஹன் கோடு", சீக்கிம், உத்தர பிரதேசம், பஞ்சாப், ஹிமாச்சால் பிரதேசம் ஆகிய இராச்சியங்களின் எல்லைகளைப் பொறுத்த அளவில் சூன்யப் பிரதேசம் அமைக்கப்படுவதைப் பிரதமர் நேரு நிராகரித்துள்ளார்.

எல்லைப்புற நெருக்கடியைத் தணிப்பதற்கு ஒரு இடைக்கால நிலைமையை உருவாக்கியதும் வசதியான காலத்தில் வசதியான இடத்தில் சீனப் பிரதமரைத் தாம் சந்திக்க ஆயத்தமாக இருப்பதாகப் பிரதமர் தெரிவித்துள்ளார். இந்தியப் பிரதமரின் யோசனை

## இந்தியா

களை சீனப் பிரதமர் ஏற்று இரு நாடுகளின் பிரதமர்கள் சந்திப்பு நிகழ்வதற்கு வகை செய்வாரா? இக் கேள்விக்குப் பதில் விரைவில் தெரிந்துவிடும்.

### விமானத் தளம்

லடாக்கில் அக்ஸைசின்என்ற இடத்தில் சீனர்கள் ஒரு விமானத் தளத்தை அமைத்திருக்கிறார்கள் எனப் பிரயாணிகள் மூலம் வெளி வந்திருக்கும் செய்தியை உறுதிப் படுத்தவோ, மறுக்கவோ, தமக்கு ஆதாரமான விவரங்கள் ஒன்றும் கிடைக்கவில்லை என்று பிரதமர் நேரு சென்ற 19ஆம் திகதி லோக் சபையில் கூறினார்.

உத்தர பிரதேச இராச்சியத்தின் வட பாகத்திலுள்ள ப்ரஹோற்றி என்ற பிரதேசம் எந்த நாட்டிற்குரியதென முடிவாக நிர்ணயிக்கப்படாத பிரதேசமாக இருப்பதால் இந்திய-சீன உடன்பாட்டின்படி இப்போது அங்கு சீனப்படைகளோ இந்தியப் படைகளோ தங்கியிருக்கவில்லை எனப் பிரதமர் நேரு லோக் சபையில் கூறினார். முழு எல்லையும் இராணுவத்தினரின் மேற்பார்வையில் ஒப்படைக்கப்பட்டிருப்பதைத் தெளிவு படுத்தினார்.

கடந்த சனிக்கிழமை இந்திய பிரதேச சேனை தினக் கொண்டாட்டத்தில் பேசும்போது எல்லைப்புறத்தில் சீனத்தின் நடவடிக்கைகள், இந்தியர்கள் பிராந்திய சேனையில் சேர்ந்து பயிற்சிபெறவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துவனவாக இருக்கின்றன என்றும், இந்தியா கனரகத் தொழில்களில் விசேஷ கவனம் செலுத்தி யுத்த தளவாடங்களை இந்தியாவில் உற்பத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளதென்றும் கூறினார். சீனப் படைகள் இந்தியாவை மீட்க வருகின்றதென்ற பொய்ப் பிரசாரத்தை நேருஜி வன்மையாகக் கண்டித்தார்.

கடந்த புதன்கிழமை லோக் சபையில் சீன எல்லைவிவகாரம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்திய எல்லைகளில் சீனம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து யுகோசிலேவியாவின் அதிபர் மார்ஷல் றிற்றோ தமது அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறார்.

### இந்தியா-பாகிஸ்தான் தகராறு

இந்தியா - கிழக்குப் பாகிஸ்தான் எல்லை விவகார மாநாட்டில் முடிவு செய்த வண்ணம் அஸாம் எல்லையிலுள்ள துக்ககிராம் என்ற கிராமம் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 16மாத காலமாக இக் கிராமத்தைப் பாகிஸ்தானியர் கைப்பற்றி வைத்திருந்தனர். கடந்த 17-ந் திகதி ஒப்படைத்துவிட்டு வெளியேறினர்கள்.

அடுத்த மாத முற்பகுதியில் இந்தியா - பாகிஸ்தான் நிதிப் பங்கீடு பற்றிய மாநாடு இரண்டாவது முறையாகத் தொடர்ந்து நடைபெறும். இம் மாநாட்டின் பெறு பேறுகள் தீர்க்கமான முடிவுக்கு உதவுமென நிதி மந்திரி மொரார்ஜி தேசாய் நம்புகின்றார்.




# அணுகுண்டு பரீசோதனைகளை பிரான்ஸ் நடாத்தியே தீரும்

## ஐ. நா. தீர்மானத்துக்கு மறுப்பு

ருஷியா, ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய வல்லரசுகளும் ஏனைய நாடுகளும் அணுகுண்டுப் பரிசோதனைகளை நிகழ்த்தாமலிருக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளும் ஒரு பிரேரணையை ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அரசியல் சபை கடந்த 20ந் திகதி நிறைவேற்றியது. இந்தியா, இலங்கை உட்பட 24 நாடுகளால் கொண்டு வரப்பட்ட இப் பிரேரணைக்கு ஆதரவாக 60 வாக்குகள் கிடைத்தன; 17 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. பிரான்சு மாத்திரம் எதிர்த்து வாக்களித்தது. இப் பிரேரணை கடந்த சனிக்கிழமை ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ருஷியா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய வல்லரசுகள் தொடர்ந்து அணுகுண்டுப் பரிசோதனைகளை நிறுத்திவைக்க வேண்டும் எனக் கோரும் பிரேரணைக்கு 78 வாக்குகள் ஆதரவாகக் கிடைத்தன. ஏனைய நாடுகள் அணுகுண்டுப் பரிசோதனைகளை நிகழ்த்தக் கூடாது எனக் கோரும் பிரேரணையை ஆதரித்து 60 நாடுகள் வாக்களித்தன. 20 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. பிரான்சு மாத்திரம் பாதகமாக வாக்களித்தது.

### சகாராவில் பரீட்சை

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பொதுச் சபையின் முடிவை எதிர்த்து வாக்களித்த பிரான்சு சகாரா பாலை வனத்தில் முன்னர் திட்டமிட்டபடி அணுகுண்டுப் பரிசோதனைகளை நடாத்தப்போவதாக கூறியிருக்கிறது. ஆபிரிக்க ஆசிய நாடுகள் வன்மையான எதிர்ப்பையும், ஐக்கிய நாடுகள் தாபனத்தின் கோரிக்கையையும் பிரான்சு பொருட்படுத்தாமல் அணுகுண்டுகளை சகாரா பாலை வனத்தில் பரீட்சித்து உலகிற்கு தானும் ஒரு அணுகுண்டுகளை வைத்திருக்கும் வல்லரசு என நிரூபிக்கப் பார்க்கிறது. அல்ஜீரியாவில் கடந்த ஐந்து வருடங்களுக்கு அதிகமாக நடைபெற்றுவரும் சுதந்

## உலக நிலை

திரக் கிளர்ச்சிகளுக்கும் நரபலிக்கும் தீர்வு காண விரும்பும் இந்நேரத்தில் பிரான்சு அணுகுண்டுப் பரீட்சைகளை நடாத்தினல் பல ஆபிரிக்க நாடுகளின் நேச உறவை இழக்க வேண்டியும் நேரிடலாம். ருஷியாவும், அமெரிக்காவும், பிரிட்டனும் பிரான்சை ஒரு "அணுகுண்டு வல்லரசாக" அங்கீகரித்து அணுசக்தி இரகசியங்களைப் பரிமாறினல் பிரான்சு ஒருவேளை அணுகுண்டுப் பரீட்சைகளை கைவிடுவதற்கு இணங்கக் கூடும்.

### அல்ஜீரியா

பிரான்சின் ஜனதிபதி ஜெனரல் டீ கோல் சென்ற மாதம் வெளியிட்ட திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பிரெஞ்சு அரசாங்கத்துடன் பாரிஸ் நகரிற் பேச்சு வார்த்தைகள்

(15ஆம் பக்கம் பார்க்க)

# சிறுவர் பகுதி

## பாலு பெற்ற பரிசு

(க. அமிர்தகுமாரி — ப. எண்: 54)

ஓர் ஊரிலே ஒரு பிரபு இருந்தார். அவருக்கு ஒரு வேலைக்காரன் தேவையாக இருந்தது. வேலைக்கு வரும் ஆள் மிகவும் நேர்மை உள்ளவனாகவும், உண்மை உள்ளவனாகவும் இருக்கவேண்டும் என்று அவர் விரும்பினார். அப்படியான ஆளை எப்படித் தேடிப் பிடிப்பது என்று யோசனை செய்தார். அவருக்கு ஒரு யுக்தி புலப்பட்டது. உடனே தம் வீட்டுவேலைக்கு ஆள் தேவை என்று விளம்பரப்படுத்தினார். அந்த விளம்பரத்தை அறிந்து இரு பையன்கள் வந்து நின்றனர். அவர்களுடைய பெயர் பாலு, இராமு என்பதாகும். பாலுவும் இராமுவும் தாங்கள் வேலைபார்க்கச் சம்மதம் என்று தெரிவித்தனர். வாயில்காப்போன் இந்தச் செய்தியைப் பிரபுவிடம் சொன்னான். பிரபு அவர்களை உள்ளே அழைத்தார். பாலுவும் இராமுவும் பிரபுவின் முன் போய் நின்றார்கள். அவர் அவர்களைப் பார்த்துவிட்டு'நான் சொல்லும் வேலையை உங்களால் ஒழுங்காகச் செய்ய முடியுமா? உண்மையாக உழைப்பவர்களுக்குத்தான் தக்க பரிசு கிடைக்கும்' என்றார். அப்படியே செய்வதாகப் பாலுவும் இராமுவும் ஒப்புக்கொண்டார்கள். பிரபு, அவர்களைத் தமது மாளிகைத் தோட்டத்திலுள்ள கிணற்றடிக்கு அழைத்துச் சென்றார். பாலுவிடமும் இராமுவிடமும் ஒவ்வொரு மூங்கிற் கூடையைக் கொடுத்து "இதோ இந்தக் கிணற்றிலிருந்து தண்ணீரை மொண்டு நீங்கள் இந்தக் கூடையில் ஊற்றி நிறைக்க வேண்டும். இதுதான் நீங்கள் செய்யவேண்டிய வேலை. இதோ வாளி, கயிறு எல்லாமிருக்கின்றன" என்று சொல்லி உள்ளே போய்விட்டார். பிரபு சென்றபின் இராமு பாலுவைப் பார்த்து "இது என்ன பாலு? பைத்தியக்காரத்தனமாக இருக்கிறதே! எங்காவது மூங்கிற் கூடையைத் தண்ணீரால் நிரப்ப முடியுமா? தண்ணீரை ஊற்றியவுடனே அது முழுவதும் வெளியே ஓடிவிடுமே" என்றான். ஆனல் பாலு சற்றும் தாமதியாமல் மள மளவென்று வாளியைக் கிணற்றில் விட்டுக் கொண்டே "அதெல்லாம்பற்றி நமக்கு என்ன கவலை? எஜமான் இட்ட வேலையை வஞ்சனை யில்லாமல் செய்யவேண்டியதுதான் நமது கடமை. மற்றப் பொறுப்பெல்லாம் அவரையே சார்ந்தவை" என்று சொல்லித் தண்ணீரை மொண்டு கூடையில் ஊற்றினான். கூடையில் ஊற்றிய தண்ணீர் நொடிப்பொழுதில் ஒழுகிப் போய்க்கொண்டே இருந்தது. ஆனலும் பாலு சற்றும் சளைக்காமல் தன் வேலையிலேயே கண்ணாக இருந்தான். இராமு இதைச் சற்று நேரம் வேடிக்கை பார்த்துக் கொண்டே நின்றான். பின்பு சலிப்படைந்தவனாய் "பாலு! இந்த முட்டாள்தனமான வேலையை நீயே செய்துகொள். நம்மால் இயலாது", என்று சொல்லி, கையில் இருந்த கூடையை வீசி எறிந்துவிட்டுப் போய்விட்டான். பாலு மாலைவரையில் சலியாமல் உழைத்தான். வீட்டுக்குப் போகும் நேரம் வந்ததும் வேலையை நிறுத்திவிட்டுக் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தான். கிணற்று நீர் வற்றிப்போயிருந்தது. அப்போது 'கூடையின் அடியில் ஏதோ ஒரு பொருள் பள பளவென்று மின்னுவது அவன் கண்ணில் பட்டது. உடனே அதை அவன் வெளியே எடுத்துப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! அது ஒரு தங்க மோதிரம். ஆகா இப்போதல்லவா தெரிகிறது, பிரபுவினுடைய கருத்து. இந்த மோதிரத்தை எடுக்கவேதான் கிணற்று நீரை அவர் இறைக்கச் சொன்னார். ஒருகால் மோதிரம் தண்ணீருடன் வாளியில் வந்தால் அந்தத் தண்ணீரைக் கீழே ஊற்றும்போது கவனிக்கப்படாமல் அதுவும் எங்காவது மண்ணில் விழுந்து புதைந்துவிடக்கூடும் அல்லவா! அப்படித் தவறிப்போகாமல் இருக்கத்தான் தண்ணீரைக் கூடையில் ஊற்றச் சொல்லியிருக்கிறார். நீர் வெளியே வடிந்துபோக மோதிரம் மட்டும் கூடையில் தங்கிவிடும் அல்லவா? என்று வியந்தான். பின்பு பாலு பிரபுவிடம் சென்று மோதிரத்தைக் கொடுத்து வணங்கி நின்றான். தாம் இட்ட இந்த வேடிக்கையான வேலையைப் பாலு இவ்வளவு ஒழுங்காக நிறைவேற்றியிருப்பதையும், நேர்மையாக அந்த மோதிரத்தைத் தன்னிடம் சேர்த்ததையும் கண்ட பிரபுவுக்கு மிகவும் மகிழ்ச்சி உண்டாயிற்று. அவர் பாலுவினுடைய நேர்மையான குணத்தை மெச்சி அந்த மோதிரத்தை அவனுக்கே பரிசாக அளித்து அவனைத் தம்முடைய புதிய வேலைக்காரனாகவும் நியமித்துக்கொண்டார். பாலுவும் தன் உண்மையான உழைப்பின் மகிமையை எண்ணி மகிழ்வடைந்தான்.

## புதிய மருமக்கள்

பெயர்களும் பதிவு எண்ணும்

606. இ. மகேந்திரநாதன், இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

607. ஏ. கனகயா (கயா) மறையடித்த குளம், ஓமந்தை.

608. நோ. வீரசிங்கம், 3, றக்கா ஒழுங்கை, சுண்டுக்குளி.

609. செ. அ. மணிமாறன், 21/6, எட்மண்டன் வீதி, கிரிலப்பனை, கொழும்பு 6.

610. ந. பாலகுமார், 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

611. பி. சரகஸ்பதி, மே/பா. வி. சபாரத்தினம், மல்லாகம்.

612. க. சிவகுமாரன், மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.

613. ஜே. ஏ. ஜே. துரைசாமி, 'அமல வாசம்' இளவாலை.

614. ச. ஆனந்தராசா, மே/பா க. சங்கரப்பிள்ளை, வில்வளை, மாதகல்.

615. ந. அரசரெத்தினம், புது டிஸ்பென்சரி ஒழுங்கை, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.

616. ஆ. பெனடிக்ட் மரியதாஸ், 23/1, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

617. ஐ. தங்கத்துரை, மானிப்பாய் வடகிழக்கு, மானிப்பாய்.

அன்பான குழந்தைகளே,

அனைவருக்கும் வணக்கம். உங்களிற் பலர் எழுதிவரும் கடிதங்களில் யாழ்ப்பாணப் பட்டினத்திலுள்ள நகர மண்டபம் எப்போது நிறுவப் பெற்றதெனக் கேட்டிருக்கின்றீர்கள். அது நல்ல கேள்விதான். இம்மாபெரும் கட்டடம் 1936ஆம் ஆண்டில் நிறுவப்பெற்றது. பிள்ளைகளே! சந்தேகங்களை நீக்கிக் கொள்வதுசிறுவர்களாகிய உங்களுக்கு நல்லதே!

சின்ன மாமா

## உழைப்பே உயர்வு தரும்

(தவமணி தேவி — ப. எண். 453)

ஒருவர் ஒரு காரியத்தைச் செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணமுடையவராய் இருந்தால், மெய் வருத்தம், ஊண் உறக்கம், காலம் முதலியவற்றைக் கவனியாது தாம் எடுத்த காரியத்தை முடிக்க எவ்வளவு இடையூறுகள் ஏற்படினும் அவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல் மேலும் மேலும் முயன்று உழைக்க வேண்டும்.

நாம் முயற்சியுடையவர்களாக இருந்தால் எத்துறையில் சென்றாலும் வெற்றியடையலாம். விடாமுயற்சியின் பயனால் நாம் எல்லோரிடமும் நன் மதிப்பைப் பெறலாம். ஒரு கருமத்தைச் செய்து முடிப்பதற்கு, மன உறுதியும், விடா முயற்சியுமுள்ளவர்களாக இருக்க வேண்டும். அக் கருமத்தைச் செய்வதற்கு எவ்வித தடை ஏற்படினும் அவற்றை எல்லாம் விலக்கி, எந்நாளும் இடைவிடாது உழைக்கவேண்டும்.

ஒரு கருமத்தைச் செய்யும்போது ஒரே முறையில் வெற்றி அடைந்து விடலாமென்றெண்ணி விடக்கூடாது. பல முறை முயற்சி செய்ய வேண்டும். நல்ல பலன் கிடைக்க வேண்டுமென்றால் விடாமுயற்சியே சிறந்த வழியாகும்.

விடாமுயற்சியின் பயனால் எத்தனையோ பேர் அறிவாளிகளாகவும், செல்வந்தர்களாகவும், உயர்ந்திருக்கிறார்கள்.

மாணவர்களாகிய நாமும் "விடா முயற்சி" உடையவர்களாக இருந்தால்தான் வருங் காலத்தில் அறிவாளிகளாகவும், செல்வந்தர்களாகவும் திகழலாம்.

## உண்மைக் கதைகள்: ஹென்ரி மோர்றன் ஸ்டான்லி



ஸ்டான்லியும் லிவிங்ஸ்டனும்:- "ஸ்டான்லியும் லிவிங்ஸ்டனும்" ஆகிய இரு பெயர்களும் காலத்தால் பிரிக்கமுடியாதவை. இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்த கதை உணர்ச்சிகரமான கதையாகும். இக் கதையையே நீங்கள் தொடர்ந்து இப் பந்திகளிற் படித்து இன்புறப்போகின்றீர்கள்.



ஸ்டான்லி:—ஆபிரிக்காவின் ஆராய்ச்சியாளர்களுள் முதன்மையானவர்களில் ஸ்டான்லியும் ஒருவர். 1841ஆம் ஆண்டில் வேல்ஸில், ஏழைப் பெற்றோருக்கு மகனாகப் பிறந்த ஸ்டான்லியின் உண்மையான பெயர் ஜோன் ரோலண்ட்ஸ் என்பதாகும். தந்தையால் கைவிடப்பட்ட இவரைத் தாயார் சிறு வயதிலேயே அனாதை விடுதியில் சேர்த்துவிட்டார். அங்கு அன்பு கிடைக்காததால், ஸ்டான்லி பிறரிடமிருந்து ஒதுங்கி வாழும் மனப்பான்மை கொண்டார்.



அமெரிக்கா:—1858ஆம் ஆண்டில், தமது 17ஆவது வயதில், அனாதை விடுதியிலிருந்து தப்பி ஓடினார். அமெரிக்காவுக்குச் சென்றவொரு கப்பலில் எடுபிடி வேலை செய்யும் பையனாகச் சேர்ந்து, அமெரிக்காவுக்குப் போய்ச் சேர்ந்தார். அங்கு அவர் இறங்கும்பொழுது, அவரிடம் ஒரு சதமும் கிடையாது. தன்னந்தனியாக, எந்தவிதமான தொழிலிற் தேர்ச்சியுமற்றவராகப் புது உலகில் காலெடுத்து வைத்தார் ஸ்டான்லி.

(தொடரும்)

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

★ ஈழநாடு சிறுவர் பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் இங்குள்ள விண்ணப்ப பத்திரத்தை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள பத்திரம் 5-12-59 க்குப் பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் பத்திரத்தை அடுத்துவரும் சனிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை அங்கத்தவர் பத்திரத்தை நிரப்பி அனுப்பினல் போதுமானது.

★ ஈழநாடு அலுவலகத்திலிருந்து அங்கத்தவர் பதிவுத்தாள் கிடைத்தபின்னர்தான் ஈழநாடு சிறுவர் பகுதிக்கு அங்கத்தவர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் சிறுவர் பகுதி யில் வெளியிடப்படும்.

★ சிறுவர் பகுதி சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
ஈழநாடு சிறுவர் பகுதி,
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

### ஈழநாடு சிறுவர் பகுதி

விண்ணப்பப் பத்திரம்

(28-11-59)

அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு
வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னை ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்..............................................

விலாசம்..........................................

..................................

..................................

கையொப்பம்

பெற்றோர் அல்லது
ஆசிரியரின் கையொப்பம். வயது............

இங்கே வெட்டவும்

மலைநாட்டு மக்களின்

# சேமலாபநிதி - பிரயாண வசதிகள் தொழிலாளர்சக்தி கண்ட வெற்றி

— மலைமகன் —

**1958ஆம்** ஆண்டு அதிக எதிர்ப்பிற்கிடையே தொழிலாளர் சேமலாபநிதி மசோதா பாரளுமன்றத்திலே நிறைவேறியது. இவ்வாண்டு செப்டெம்பர் மாதத்திலிருந்து இந்த மசோதாவை அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்திலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(பத்து ஏக்கர் பரப்பிற்கதிகமான) 16 வயதிலிருந்து 59 வயதுவரையுள்ள எல்லாத் தொழிலாளரும் இந்தத் திட்டத்தின் பிரகாரம் பயனடைவர்.

## மோத்தா முயற்சி

பதினைந்துவருட இடைவிடா முயற்சியே இன்று பயனளித்திருக்கின்றதேயன்றி, பலர் பறைசாற்றித் திரிவதைப்போல் சேமலாப நிதித் திட்டம் மந்திர சக்தியால் கிடைத்ததன்று. இப் பெரும் வெற்றி தொழிலாளருக்கு அவர்களின் ஏகோபித்த சக்தியின் வலிமையை உணர்த்தவும், இலங்கைத் தொழிற்சங்க இயக்கத்தின் ஒரு சிற்பியான காலம்சென்ற திரு. ஜி. ஆர். மோத்தா போன்ற தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்தவும் வழிகாட்டியாக அமைதல் வேண்டும். இந்தத் திட்டம் திரு. மோத்தா அவர்களின் ஞாபகார்த்தச்சின்னமாகவிளங்கத் தகுதி வாய்ந்ததேயாகும். மலைநாட்டுத் தொழிற்சங்க இயக்கம் உச்சநிலையடைந்த 1945ஆம் ஆண்டு, திரு. மோத்தாவினால் கொண்டுவரப்பட்ட பதினைந்து அம்சக் கோரிக்கைகளிலே, இது. ஒரு முக்கிய கோரிக்கையாக இருந்தது. பின்னர் 1954ஆம் ஆண்டு, மீண்டும் தமது ஏழு அம்சக் கோரிக்கை மூலம் இந்தச் சேமலாபநிதித் திட்டத்தை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், முன்னுக்குக் கொண்டுவந்தது. இதன்பின்னர் எந்தத் தொழிற் சங்கமும் இதனை வலியுறுத்தாவிடினும், இ. தொ. காவின் கோரிக்கை நாட்டின் கவனத்தை ஈர்த்தது. அப்படியிருப்பினும் மக்கள் ஐக்கிய முன்னணி, அதிகாரத்துக்கு வந்த பின்னரே இக் கோரிக்கை பயனளிக்க ஆரம்பித்தது.

## பூர்வாங்க வேலைகள்

நமக்குத் தெரிந்தவரையில் இத்திட்டத்தைச்செயற்படுத்துவதற்கான பூர்வாங்க வேலைகளை, இவ்வாண்டு மே மாதத்திலேயே, முதலாளிகள் செய்ய ஆரம்பித்துவிட்டனர். ஆனால் தக்க சாதனங்களும், உத்தியோகஸ்தர்களும் இல்லாத காரணத்தால், அரசாங்கம் பின்தங்கிவிட்டது. இத் திட்டத்தைத் திறம்படச் செயலாற்றச்செய்ய, வருமானவரி இலாகா போன்ற ஒரு ஆற்றல் மிக்க இலாகாவை அரசாங்கம் நிறுவவேண்டும்.

ஐக்கியநாட்டுத் தொழில் ஸ்தாபனம், "ஒரு தொழிலாளி எந்தச்சமூகத்தைச் சேர்ந்தவராக இருப்பினும், அவர்கள் தாங்கள் செய்யும் தொழிற்றுறைக்கும், பொதுவாக சமுதாய முன்னேற்றத்திற்கும் செய்யும் சேவையை யொட்டி, எல்லா மனித உரிமைகளும் வழங்கப்படவேண்டும்" என்ற ஒரு கொள்கையைக்கொண்டிருக்கிறது. எனவே இந்தக் கொள்கையின் அடிப்படையிலே உதிக்கும் இத் திட்டம், எச்சமூகத்தைச்சேர்ந்த தொழிலாளிக்கும் பட்சாபாதம் காட்டவில்லை.

யார் விரும்பினுலென்ன விரும்பாவிட்டாலென்ன! எண்பத்தைந்து சத விகிதமான தோட்டத்தொழிலாளர், இலங்கைப் பிரஜைகளே. எனவே, வயது வந்த தொழிலாளர்கள் இந்தியாவுக்குச் சென்றே தங்கள் சேமலாபநிதியைப் பெற வேண்டும் என நிபந்தனையேதும் இருத்தல் கூடாது. இந்நாட்டிலே "நாடற்றவர்"களாக இருப்பவர்களை இந்தியாவுக்கு அனுப்ப இதனை ஒரு கருவியாகப் பாவிக்கக்கூடாது. எனவே இந்தப் பணத்தைத் தொழிலாளர் இங்கே பெறுவதற்கான வழிகளையமைத்துத் தொழிற் சங்கங்கள், இத்தொழிலாளரின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும்.

## வயோதிபரின் கதி?

இத்திட்டம் இப்போது வேலை செய்யும் தொழிலாளருக்கு மட்டுமே உதவுகின்றது. முப்பது நாற்பதாண்டுகள் முதுகொடிய உழைத்து, இன்றும் மரணத்தை நோக்கி நடந்துகொண்டிருக்கும் வயோதிபருக்கு இத்திட்டத்தின் பிரகாரம் எத்தகைய உதவியும் கிடைக்காது. இவர்களுக்கு நன்மை செய்யும் முகமாக, தொழிலாளர்களும், தொழிற் சங்கங்களும், இந்த வயோதிப தொழிலாளருக்கு அவர்கள் சேவைக்காக, தோட்ட நிர்வாகம் நன்கொடை கொடுக்க வேண்டும் எனக் கோரவேண்டும்.

இதே சமயத்தில் இந்த வயோதிபர் குடியிருக்க வசதியேற்படுத்தவும், நாம் பின்னர் கூறிய திட்டத்தின் மூலம் வலியுறுத்த வேண்டும். இன்று இவர்கள், தங்கள் சொந்தக்காரர்களுடனே அன்றி லயன் விருந்தைகளிலோ, மனிதர் வாழத் தகுதியற்ற வேறிடங்களிலோ வசிக்கின்றனர். ஒரு தொழிலாளி, நன்கொடை பெற்றதும், அவர் தோட்டத்தை விட்டு வெளியேற வேண்டுமென்பதும், தோட்ட முதலாளிகள் சம்மேளனத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள வேறெந்தத் தோட்டத்திலும் அவர்கள் ஏதும் இலேசான வேலை பெறுவது இயலாத காரியம்என்பதும் மலைநாட்டுத் தொழிற் சங்கங்கள் அறிந்த விஷயமே.

எனவே, இந்த பென்ஷன் பெற்ற வயோதிபருக்காக, மற்ற சோஷலிஸ நாடுகளைப் போல, வயோதிபருக்கான இல்லங்கள் அமைக்கப்பட வேண்டும் எனத் தொழிற் சங்கங்கள் தோட்ட நிர்வாகிகளைக் கேட்கவேண்டும்.

## பிரயாண வசதிகள்

தோட்டத் தொழிலாளர் சரித்திரத்திலேயே முதன் முறையாகத் தொழிலாளருக்கு நன்மை செய்யும் முகமாக தோட்டச் சொந்தக்காரர்கள் தங்கள் வாய்களைத் திறந்திருக்கின்றனர். ஒரு ஆங்கிலப் பத்திரிகை சமீபத்திலே, தோட்ட முதலாளிகள் சம்மேளனம், 'நாடற்ற தொழிலாளர் இந்தியாவிற்குச் சென்றுவர, அரசாங்கம் வசதி செய்து கொடுக்க வேண்டும்' எனக் கேட்டுள்ளதாகத் தெரிவித்தது. இத்தகைய வசதியேற்பட்டால் நாளடைவிலே, இலங்கை இந்தியர் பிரச்சினை கூடத் தீர வழியுண்டு என இவர்கள் நம்புவதாகப் பத்திரிகைச் செய்தி கூறியது. இந்த சேமலாப நிதியை 'அக்கரை'யில், கொடுப்பதாக இவர்கள் கூறுவிட்டால், 'நாடற்றவர்' பிரச்சினையை இது எப்படித் தீர்த்துவைக்க முடியும் என்பது நமக்கு விளங்கவில்லை.

கொத்தலாவல — தேசாய் ஒப்பந்தத்தை யொட்டி பேச்சு வார்த்தைகள் நடைபெற்றபொழுது, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளருக்கு நன்கொடை கொடுக்கப்பட்டால், அவர்கள் இந்தியாவுக்குப் போய்விட ஒப்புக்கொண்டு விடுவார்கள் எனக் கூறுவதற்கு, தோட்ட முதலாளிகள் சம்மேளனத்திலிருந்து, திரு. ஜே. ஏ. டி. பெரேராவைக் கூட்டிக்கொண்டு போயிருந்தார்கள். அவர்களது முயற்சி, உடனடியாக முறிவடைந்தது.

இந்தப் பிரயாணக் கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வர முன்பு, சுமார் ஐம்பதாயிரம் தொழிலாளர் ஆண்டுதோறும் இந்தியாவிற்குச் சென்றனர் என்பது உண்மையாக இருப்பினும், அங்கு சென்றவர்கள் அத்தனைபேரும் நிரந்தரமாக இந்தியாவிலேயே தங்கிவிட்டனரா என்பதுதான் நமது பிரச்சினை. ஆகக் கூடினால் அங்கு பின் தங்கியவர்கள் ஒரு சத விகிதத்திற்கும் குறைவாகவே இருக்கும்.

## தீமைகள் என்ன?

இதைப்போன்ற ஒரு திட்டம் வகுக்கப்பட வேண்டும் என முதலாளிகள் கூறும்போது, இதனால் ஏற்படப்போகும் நன்மைகளை விடுத்து, திரை மறைவிலே கிடக்கும் தீமைகளையே உற்று நோக்கவேண்டும். இதைப்போன்ற திட்டங்களை வகுக்கும்போது முதலாளிகள் தொழிலாளர் நலனைக் கருதாது தங்கள் நலனையே முக்கியமாகக் கருதுவார்கள். இதுவே அவர்களதுமதமாகும். எனவே, இந்தத் திட்டத்தை நன்கு ஆராய்ந்து தொழிற்சங்கங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும்.

ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயமாகக் கூறலாம். இந்தியாவுக்கு அவசியம் செல்லவேண்டியிருப்பவர்கள் இப்போதுபடும் கஷ்டங்களைத் தவிர்க்க முடியும். தங்களுடைய உள்ளூர் உறவினர், சிலவேளை பெற்றோரும் கூட, மரணப்படுக்கையில் இருக்கும்போதுகூட இந்தியாவுக்குச்செல்ல முடியாமலிருப்பவர்களுக்குப் பிரயாண வசதிகள் செய்து கொடுக்கப்பட்டால் மிகவும் இன்பமளிக்கும்.

சில தொழிற்சங்கத் தலைவர்கள் மாதமொரு முறையோ இந்தியாவுக்குச் சென்று திரும்புகையில், இந்தச் சலுகை ஏன் தொழிலாளருக்கு மட்டும் வழங்கப்படக் கூடாது என வியப்பு மேலிடுகிறது. எனவேதான் முதலாளிகள் சம்மேளனத்தின் இத்திட்டத்தை ஆராய்ந்த பின்னரே அதற்குத்தக்க ஆதரவு அளிக்கவேண்டும்.

எவ்வாறுயினும் தோட்டங்களிலே வசிக்கும் வயோதிபரில் பதினைந்து சத விகிதமானேர் என்ன ஆயினும் தங்கள் தாயகத்திற்குப் போய் விடுவார்கள். இந்த முயற்சியை தவறுன வழிகளால் தடை செய்வது அநீதியாகும்.

இதே சந்தர்ப்பத்தில் பல இன்னல்கட்கிடையே பிரயாணத்திற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டு, டிக்கட் கிடைக்காமல் திண்டாடும் தொழிலாளரைப் பற்றியும் கூற வேண்டியிருக்கிறது.

## வாரத்தில் 3 முறை

தலைமன்னருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே செல்லும் கப்பல் வாரத்தில் இப்பொழுது மூன்று தினங்கள் மட்டும் ஓடுவது தெரிந்ததே. இதன் விளைவாக இந்தியாவிற்குச் செல்லுவோர் வாரத்தில்மூன்று நாட்கள் மட்டுமே பிரயாணச் சீட்டைப் பெற முடியுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தினங்களிலும் குறிப்பிட்ட ஒரு சில புகையிரத நிலையங்களில் மட்டுமே இந்தப் பயணச் சீட்டுகள் கொடுக்கப்படுகின்றன. இங்கும் இத்தனை சீட்டுகள்தான் ஒரு தினத்தில் இந்தியா செல்பவர்களுக்குக் கொடுபடலாம் என வரையறுக்கப்பட்டிருக்கிறது.

வட்டகொடையிலிருந்து அட்டன் வரையிலும் உள்ள புகையிரத நிலையங்களுள் அட்டன் நிலையத்தில் மட்டுமே டிக்கட் கொடுபடுகின்றது. ஒரு தினத்தில் பத்து மூன்றும் வகுப்பு பிரயாணச் சீட்டுகள் மட்டுமே கொடுபடுகின்றன. இதன் விளைவாகப் பலர் புகையிரத நிலையத்துக்கு வந்து டிக்கட் கிடைக்காமல் திரும்பிச் செல்ல வேண்டியிருக்கிறது. தோட்டங்களிலிருந்து தங்கள் பற்றுச் சீட்டையெல்லாம் பெற்றுக் கொண்டு, டிக்கட் கிடைக்காத காரணத்தால் இந்தியாவிற்குச் செல்ல முடியாமல் இருப்போரின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது. தோட்டத்திலிருந்து வீட்டைக் காலி செய்யும்படி கண்டிக்கப்படும் நேரத்தில், இருக்க இடமின்றி இவர்கள் தவிக்க வேண்டியிருக்கிறது.

# மனைவியின் தேர்தல்!

— க. கணேசலிங்கம் —

**என்** மனைவியை நீங்களும் ஆதரிக்க வேண்டுமென்று என் நண்பரொருவரை வேண்டினேன். அவர் சங்கதியை உடனே அறிந்து கொள்ளாமல் புருவத்தை நெரித்தார். 'தேர்தலில் போட்டியிடுவது பற்றி உமக்குத் தெரியாதா?' என்றேன். 'அட அதுவா! எந்தக் கட்சி?என்ருர்.'சுயேச்சையாகத்தான்' என்றேன். 'ஏன் உங்களுடன் கூடத்தானே உங்கள் மனைவி இருக்கிறர்' என்று சிறிது வேடிக்கையாகக் கூறினர். 'பெண்ணுக்கு உரிமை கொடுப்பது ஆணின் கடமையல்லவா' என்றேன் கதிரையில் இருந்தபடியே.

என் வீட்டில் அவளுக்கு இரண்டு வோட்டுக்கள் நிச்சயமாக உண்டு. இதை நம்பித்தான் மனைவியைத் தேர்தலில் நிறுத்தினீரோ என்று விஷயத்தை அறியாமல் கேட்காதீர்கள்.

என் மனைவி தேர்தல் அலுவலாக வெளியே போய்விட்டாள். நான் வீட்டில் இருந்த வண்ணம் அதற்கான அடுக்குகளைப் பார்க்கின்றேன்.

* * *

மரத்தில் தேங்காய் பிடுங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்து 'ஓட்டைப் பார்த்துப் போடு' என்றேன். இறங்கிவந்த அவன், 'என்ன ஐயா ஒரு நாளுமில்லாமல் இப்படி அக்கறைகாட்டுகின்றீர்களே!' என்ருன். நான் சொன்னேன் 'வோட்டைப் போடும் பொழுதும் என்மனைவியின் பெயரைப் பார்த்துத்தான் போடவேண்டும். அதை ஞாபகப்படுத்தத்தான் இப்படிச் சொன்னேன்' என்று. பாடுபட்டுப் பிடுங்கிய அவனுக்கு இரண்டு தேங்காய் கொடுத்தால் என்ன நட்டமா? தேர்தல் நாளை நினை ஊட்டி இரண்டு மூன்று கொடுத்தேன்.

சும்மாவேண்டா வெறுப்பாக இருந்த நமக்கு இந்தத் தேர்தலால் எவ்வளவு சிரமம். தலையை ஆட்டி, பல்லைக் காட்டி.... அப்பப்பா! அப்படியென்ருலும் கூடத் தயவு காட்ட மாட்டார்கள் போலிருக்கின்றதே.

கம்பன் ஒரு பாட்டுக்கு ஆயிரம் பொன் கேட்டானும். இங்கேஇன்று ஒரு வோட்டுக்கு இதை விடக் கூடக் கேட்பார்கள் போலிருக்குதே. 18 வயதுள்ளவன் கூட வோட்டுப் போடலாமென்று வந்தாலும் எங்களைப் பொறுத்த வரையில் வோட்டுத் தட்டுப்பாடு இன்னும் இருக்கத்தான் செய்கிறது.

எல்லாத் தேர்தலும் தேர்தலல்ல - அபேட்சகரின்
பார்லிமெண்ட் தேர்தலே
தேர்தல்

இப்படி எங்கோ ஒரு புதுப் பத்திரிகையில் படித்திருக்கின்றேன். உண்மையில் மனுஷன் படுகிற கஷ்டத்திற்கு வெற்றியடைந்தால் இவர்களையெல்லாம் ஒரு கை பார்த்து விடலாம்.

சாதாரண மெம்பராக மட்டுமல்ல—என் மனைவியின் சாமர்த்தியத்திற்கு, மந்திரியாகக் கூட அவள் ஆகலாம். அடுத்தபடி

(13ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.


**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**
சிறுப்பர்

Std. 14.



## தமிழன் கண்ட உண்மை

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

நளாயினிகளும், சாவித்திரிகளும் தோற்றுதல் வேண்டும். அத்தகைய பெண் மணிகள் தோற்றக் கூடிய விதத்தில் எமது சமுதாய வாழ்க்கையும், கல்வி முறையும் உருப் பெறுதல் வேண்டும்.

### தவருன மனப்பான்மை

அறவாழ்க்கை அடிமை வாழ்க்கையென இக் காலப் பெண்கள் நினைக்கின்றனர். ஏன் ஆண்களுமே நினைக்கின்ருர்கள். கடமையின் உயர்வை அறியாத மனப்பான்மையே இத் தவருன கருத்துக்குக் காரணம். கடமை செய்வதாலும், பரோபகாரமாக வாழ்வதினுலும் தான் உள்ளத் தூய்மை ஏற்படும் என்ற உண்மையை இக்காலக் கல்வி முறை எமக்கு அறிவுறுத்தத் தவறிவிட்டது. உரிமைகளுக்கு வாதாடுவதும், உழைப்பதும் தான் உயர்வும், கௌரவமும் என எண்ணும் மனப்பான்மை, எங்கள் மனத்தில் கடமையின் உயர்வை மறைத்து விட்டது.

பெண்மை இழிவானது மன்று, ஆன்மை உயர்வானது மன்று. பெண்மைவேறு, ஆண்மை வேறு, வேருயினும் வாழ்க்கைப் பண்பிற்கு இரண்டும் இன்றியமையாதன: ஆண் தன்மையை இழந்த ஆணும், பெண் தன்மையற்ற பெண்ணும் உதவாப் பொருள்களாகும். பெண்மையைப் பேணி வளர்த்தல் பெண்களின் தர்மமாகும். ஆண்மையைப் பேணி வளர்த்தல் ஆண்களின் தர்மமாகும்.

### இயற்கைக்கு மாறு

பெண்மையின் இயற்கைக்கு மாருன வாழ்க்கை ஒழுங்குகளும், முறைகளும் பெண்ணினத்தைக் கெடுத்துச் சமூகத்திற்கு அழிவை ஏற்படுத்தும். பெண்மையும் ஆண்மையும் சிறந்து விளங்கும் இல்லத்தில் தான் "அறனும் அன்பும்" சிறக்கும். அன்பும் அறனும் நிறைந்த இல்லங்கள் நாட்டில் பெருகின், சமூகம் உயர்வடையும். சன சமூகம் உயர்வடைந்தால், உலகத்தில் சமாதானமும், அமைதியும், அன்பும், ஒற்றுமையும், கடமையில் பற்றும், கடவுளிடத்தில் அயராத அன்பும் நிலைக்கும்.

சமுதாயத்தின் உயர்வு. இல்லங்களில் தங்கியுள்ளது இல்லங்களின் உயர்வு இல்லாளில் தங்கியுள்ளதென்பது தமிழன் கண்ட உண்மை.

## மனைவியின் தேர்தல்!

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாக ஐயா இருக்கிருரே, அவர் 'மந்திரி மணளன்' என மரியாதையோடு அழைக்கப் படுவார். சோர்ந்த உள்ளத்திற்கு இவ் வார்த்தை சுறுசுறுப்பூட்டியது.

இதுகாறும் எனக்குச் சோறு சமைத்துப் போட்டவள் இனிமேல் அரசியலில் சட்டம் சமைக்கப் போகின்ருள். என்னுடன் எடுத்ததற்கெல்லாம் பேசிப் பேசி நன்ருகப் பேசப் பயின்றிருக்கும் அவள் வன்மைமிக்க பேச்சுக்களுக்குத்தான் இன்றைய அரசாங்கம் மிக ஆதரவு கொடுக்கும் என்பது அக்கம் பக்கத்து வீட்டாரின் கருத்து.

'அகப்பை பிடித்த கையே, அரசாங்கத்தையும் தாங்கிப் பிடிக்கும்' என்ற புது மொழி உருவாகுவதற்கு வழி வகுக்கப் போகின்ருள் என்மனைவி.

என் சிந்தை இப்படி விந்தையான பல எண்ணங்களை எண்ணிக் கொண்டிருக்கும்பொழுது ஓடிவந்தாள் என் வீட்டு வேலைக்காரி, நெல்லு மூடைக்குள் எலி புகுந்த மாதிரி. 'ஐயா' என்ருள். 'விஷயத்தை சொல்' என்றேன். 'எலி எல்லாக் காய் பிஞ்சுகளையும் தின்று விட்டது. இலையான் கொசுக்கடி தாங்கமுடியவில்லை, அடுக்களையில் இருக்க முடியாது. அம்மா எங்கே?' என்ற கேள்வியோடு நிறுத்தினள். 'இப்படியான இன்னல்களைத் தீர்க்கத்தான் அம்மா வெளியே போயிட்டா. தேர்தல் நடந்ததற்குப் பிறகு இவையெல்லாம் இருக்கின்றனவா பார்!' என்று உறுதி கலந்த ஆறுதல் கூறினேன்.

'பல பெண்களுடன் போகின்ருள் உங்கள்மனைவி; வழியிலே பார்த்தேன்' என்ருர் நண்பர் பொன்னுச்சாமி. 'என்னிலும் பார்க்க அவளுக்கு அதிகம்பேர் பழக்கம். அவளுக்கு அவளுடைய சினேகிதிமார் மட்டும் போட்டாலே தேர்தலில்வெற்றி பெற்றுவிடுவாள். நாடாளும் நட்சத்திரம் அவளுக்கு இருக்கிறதல்லவா!' என்ற நம்பிக்கை என் நெஞ்சில் உதித்தது.

பத்திரிகையில் அவள் வெற்றி பெற்ற செய்தியை எப்படிப் போடுவார்கள் என்று கற்பனை பண்ணிக்கொண்டே ஒரு பத்திரிகையைக் கையில் எடுத்து விரித்தேன். அதே சமயம் யாரோ வரும் சப்தம் கேட்டது. அவள் தான்; பாவம், தேர்தல் அலுவலாக எங்கெல்லாம் அலைந்தாளோ?

கையில் நிறையக் கடதாசிப் பெட்டிகள்! வழியில் ஏதேனும் பரிசுகள் கொடுத்தார்களோ? ஒருவேளை எல்லோருடைய வோட்டுகளையும் இப்போதே சுருட்டிக்கொண்டாளோ? இம் மாதிரி யோசனைகள் திசை மாறின.

'எப்படி என் 'சிலெக்ஷன்'?' என்ருள். பாம்புப் பெட்டியைத் திறந்திருந்தால் கூட அவ்வளவு பயந்திருக்க மாட்டேன். அவள் திறந்த பெட்டியினுள் இருந்தவை எல்லாம் விலையுயர்ந்த சேலைகள்!

"எலெக்ஷனுக்குக் கட்ட ஆனதாக ஒன்றும் இல்லையே. அதுதான் வாங்கினேன்'. என்ருள்.

'வோட்' எடுக்க வேண்டிய சிந்தனை அவளுக்கு. ஓடெடுக்க வேண்டிய நிலை எனக்கு!

அருள்வழி

நாவலர் பெருமானுக்கு யாழ்ப்பாணத்திலும், சென்னையிலும், சிதம்பரத்திலும் உருவச் சிலைகள் நாட்டவேண்டுமென இக் கட்டுரையாசிரியர் யோசனை கூறியுள்ளார். நாவலர் திருநாள் சென்ற திங்கட்கிழமை கொண்டாடப்பட்டது.

# நாவலர் பெருந்தகை, நமக்கொரு வழிகாட்டி

— முதலியார் செ. முத்துத்தம்பி —

கார்த்திகை மாதத்திலே, மக நட்சத்திரமும், சப்தமி திதியும் கூடிய புண்ணிய காலத்திலே, இரவு பத்து நாழிகையாகும்பொழுது தாமிருந்த இல்லத்திலே பிரமாதி வருடம்.அங்கில-ஆண்டு 1879—நாவலர் பெருமான் தமது 57ஆவது வயதில் சிவபதமடைந்தார். இத் தினம்பெரும் புண்ணிய தினமாகும். இத் தினத்தைத் தமிழ் பேசும் மக்கள்—முக்கியமாகச் சைவசமயத்தவர்-நாவலர்பெருமானை வாயார வாழ்த்தி, நெஞ்சார வணங்கிச் சிறப்பாகக் கொண்டாடக் கடமைப்பாடுடையவர்களாக இருக்கிருர்கள்.

### நாவலர் பிறந்திலரேல்

நாவலர் பெருமான் தமிழுக்கும், தமிழருக்கும், சைவத்துக்கும், சைவ சீலத்துக்கும், சைவ ஒழுக்கத்துக்கும், தமிழருடைய பண்பாட்டுக்கும் பேராபத்தான காலங்களில் செய்த பேருதவிகள் எழுத ஏட்டிலடங்கா. பேசில் பேச்சிலடங்கா. நாவலர் பெருமான் பிறந்திலரேல் எங்கள் கதி அதோகதியாகத்தான் முடிந்திருக்கும். இந்த உண்மையை, நாவலர் பெருமான் சிவ பதமடைந்த தருணத்தில் உயர் திரு. சி. வை. தாமோதரம்பிள்ளை பாடிய,

**"நல்லை நகர் ஆறுமுக நாவலர்**
**பிறந்திலரேல்**
**சொல்லு தமிழ் எங்கே?**
**சுருதி எங்கே?—எல்லவரும்**
**ஏத்தும் புராண ஆகமங்க**
**ளெங்கே? பிரசங்கமெங்கே?**
**ஆத்தனறி வெங்கே? யறை"**

என்ற வெண்பா நன்குணர்த்தக்கூடியதாக இருக்கின்றது.

பழனி ஈசான சிவாச்சாரியாரை சைவ சித்தாந்த உலகம் நன்கறியும். சித்தாந்த உலகிலே ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர். இத்தகு பெருமைமிக்க மகான் முதன் முதலில் யாழ்ப்பாண சைவபரிபாலனசபையிலே பேசுகையில் ஆறுமுகநாவலரைப் பற்றிக் குறிப்பிட்டுக் கூறியது மயிர்க்கூச் செறியக்கூடியதாக இருக்கின்றது.

"இவ்வியாழ்ப்பாணம் நாவலர் பெருமான் திருவவதாரம் செய்த சைவத்திருநாடு. இந்த நாட்டில் காலெடுத்துவைக்கவும் நான் அஞ்சுகின்றேன். நான் எங்கு சென்ருலும் நாவலர் பெருமான் எழுதிய இரண்டாம் சைவ வினவிடை, நான்காம் பாலபாடம்,பெரியபுராண வசனம் இவைகளை உடன் எடுத்துச் செல்வேன். இங்கும் கொண்டுவந்திருக்கிறேன். அவகாசம் கிடைக்கும் நேரமெல்லாம் அவைகளைப் படிப்பேன். எனக்கவை உறுதுணை"

என்று அவர் பேசியுள்ளது கற்ருரைக் கற்ருரே காமுறுவர் என்ற பேருண்மையை விளக்குவதாக இருக்கின்றது.

### தவப்பயனகத் தோன்றியவர்

எங்கள் நாவலர் பெருமான் பாண்டிமழவர்குடியிலே, கார்காத்த வேளாளர் மரபிலே, ஞானப்பிரகாச முனிவர் வழியிலே, ஈழவளநாடு செய்த தவப்பயனகத் தோன்றியவர். ஏறத்தாழ 365 ஆண்டுகளுக்கு முன்னர் பறங்கியர் தலைவனுக்கு உணவுக்காகப் பசுதானம் செய்ய மனமொருப்படாது, தான் பிறந்த பொன்னுட்டைத் துறந்து, வீடு வாசல், இனசன பந்துக்கள் அனைவரையும் பிரிந்து வேதாரணிய மார்க்கமாகத் தமிழ்நாடு சேர்ந்து சைவம் வளர்த்தவர். ஞானப்பிரகாச முனிவர் என்பதை சைவ உலகம் நன்கறியும். யானை வரும்பின்னே மணி ஓசை வரும் முன்னே என்பது போல ஞானப்பிரகாச முனிவர் முன்னே தோன்றினர். ஐந்தாம் குரவர் ஆறுமுகநாவலர் அவர் பின்னே தோன்றினர்,

### அச்சகம் நிறுவினர்

நாவலர் பெருமான் தம் காலத்தில் செய்து முடித்த பணிகள் பலப்பல. இன்னும் செய்து முடிக்க எண்ணியிருந்தவையோ எண்ணிலடங்கா.

நாவலர் பெருமான் மாணவர்களைச் சேர்த்து, ஊதியம் யாதும் பெருது தமிழ்க் கல்வியும், சமயக் கல்வியும் கற்பித்தார். அக் காலத்தில் இவரிடத்தில் பாடங் கேட்டவர்கள் சதாசிவப்பிள்ளை, சுவாமிநாதையர், நடராசையர், விசுவநாதையர், ஆறுமுகப்பிள்ளை, கந்தசுவாமிப்பிள்ளை, ஆறுமுகம் செட்டியார் முதலானவர்களாவர். இவர்கள்கற்றுத்தேறிய பின் நாவலர் பெருமானுக்கு உதவியாக சைவத் தொண்டிலும், தமிழ்த் தொண்டிலும் ஈடுபட்டார்கள்.

இவர் யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயருடன் கல்விச் சாலை இரண்டினை நிறுவி செவ்வனே நடாத்தி வந்தார். யாழ்ப்பாணத்தில் அச்சகம் ஒன்றினை நிறுவிப் பல நூல்களை வெளியிட்டார். பாலபாடங்கள், சைவ வினவிடைகள், இலக்கணச் சுருக்கம், பெரிய புராண வசனம் முதலியன இவர் வெளியிட்ட நூல்களிற் சிலவாம்.

### ஒப்பற்ற பிரசங்கம்

முதன் முதலாக யாழ்ப்பாணச் சிவன் கோவிலில் சைவப் பிரசங்கம் செய்ய அரம்பித்த இவர், 32 ஆண்டுகள் வரை தமிழ் நாடெங்கும் பிரசங்கம் செய்தார். உலகப் பிரசித்தி பெற்ற பேச்சாளர்களில் இவரும் ஒருவராக விளங்கினர். இவருடைய பேச்சு, விவேகானந்தர், சுரேந்திரநாத் பனர்ஜி, எட்மன் பேர்க், டெமொஸ்தெனிஸ், சிசரோ முதலிய உலகப் பேச்சாளர்களுடைய பேச்சுகளுக்கு ஒப்பாகும். திருவாவடுதுறை ஆதீனத்தில் ஒப்பற்ற பிரசங்கம் ஒன்றினை நிகழ்த்திய போதுதான் இவருக்கு நாவலர்ப் பட்டம் வழங்கப்பட்டது.

தமிழ் நாடெங்கும் சைவ வித்தியாசாலை நிறுவி, பின்பொரு பல்கலைக் கழகம் காணவேண்டுமென்றிருந்தநாவலரின் ஆவல் நிறைவேருமல் போனது தமிழ் மக்களது துர்ப்பாக்கியமேயாகும்.

கீரிமலைச் சிவன் கோவிலையும், திருக்கேதீச்சரத்தையும் முன்போலக் கட்டி வைக்க வேண்டும் என்ற ஆசை இவருக்கு மெத்தவிருந்தது. இன்னும் இவர் செய்ய நினைத்த பணிகள் எத்தனையோ. சைவத்துக்கும் தமிழுக்கும் இவர் செய்யாதது, செய்யத் தொடங்காதது, செய்ய எண்ணுதது ஒன்றுமேயில்லை. நாவலர் பிறந்திலரேல் - சைவமுமில்லை, தமிழுமில்லை, தமிழர் பண்பாடுமில்லை.

நாவலர் பெருமான் எங்களுக்கொரு முன் மாதிரியாக நடந்து காட்டினர். அவர் எங்களுக்கொரு வழிகாட்டி.

### பெருந்தகையாளர்

தமக்கென ஒன்றையும் சீவிய கால முழுவதிலும் பிறரிடத்தில் ஒரு போதும் யாசித்தறியாத பெருந்தகைமையாளர். பேரிரக்கம் படைத்தவர். ஆனல், குரு நிந்தை, சிவ நிந்தை கண்டவிடத்து கோபம் மூண்டுவிடும். பாண்டி மழவர் குடியில் பிறந்தவருக்கு இது இயல்பு போலும். தமிழர்கள்—சைவர்கள் வேறு யாரைத்தான் பின்பற்றி வாழமுடியும்?

(15ஆம் பக்கம் பார்க்க)


உத்தரவாதமுள்ள

ஜெயிஸ் ப்ளூயிட்

நெருப்புத் தண்ணீரையே வாங்குங்கள்.




'ஜெயிஸ்'

— மார்க்கையும் —

'உதய சூரியன்'

அடையாளத்தையும் தாங்கிய லேபிளையும் மூடியையுமுடைய

ஜெயிஸ் ப்ளூயிட்

நெருப்புத் தண்ணீரே சிறந்தது.

சினிமா உலகம்

# மனைவியே மனிதனின் மாணிக்கம்

**மனைவியே மனிதனின் மாணிக்கம்** படத்தின் மூலம், கோல்டன் பிலிம்ஸ் கொம்பனி தமது 'மாணிக்கச் சரக்கை' மக்களிடம் செலுத்த எத்தனித்திருக்கிறது. இன்றைய தங்க, வைர நகைகளிற் போல, இந்த மாணிக்கத்திலும் அசலும், நகலும் சேர்ந்து தானிருக்கின்றன.

கதையிலே புதுமையோ விறுவிறுப்போ இல்லை. தாரணி அறியத் தாரமாகக் கொண்டவளைத் தள்ளி வைத்துவிட்டுத் திக்குத்திசை தெரியாது அலையும் அறிவிலிக் கணவனின் கதைதான் இது. கதையில் ஒரு மர்மமும் புகுத்தப்பட்டுள்ளது. ஆனால், படம் முடிந்த பின்னும், அந்த மர்மம் என்ன என்பது எவருக்குமே விளங்கவில்லை. ஓர் இடத்திலே, சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன், விஜயகுமாரியை • வெருட்டுகிறார்: 'பர்மாவில் நீ செய்ததைச் சொன்னேனே, பிறகு.....' அப்படியென்று. ஆனால், பர்மாவில் நடைபெற்ற அந்த மர்மச்சம்பவம் மர்மமாகவே இருந்து விடுகிறது.

கதாநாயகனாக வந்து, பாலாஜி தம்மால் இயன்றளவுக்குப் பிரயாசத்துடன் நடித்துள்ளார். ஆனாலும், அவரது முகபாவத்தில் மாற்றம் அவசியம் வேண்டும். முடுக்கி விட்ட இயந்திரத்தைப் போலச் சில சமயங்களில், அப்படியே முழியையும், முகத்தையும் வைத்துக் கொள்கிறாரே! அது ஏன்?

பண்டரிபாயின் நடிப்பில் புதுமையாகவொன்றும் சொல்வதற்கில்லை. பொறுமையாக நடிக்கிறார். நாம் அமைதியாகப் பார்க்கிறோம்.

நாகையாவின் விஷயமும் அப்படியே.

விஜயகுமாரி அழகாக நடித்திருக்கிறார். அவரது உடலில் கவர்ச்சியும், நடிப்பில் நயமும் தென்படுகின்றன. இரண்டுமே ரசிகர்களுக்குப் பிடிக்கும்.

தங்கவேலுவின் ஹாஸ்யம் அருமையாக இருக்கிறது. எம். சரோஜா அவருக்குப் பூரண ஒத்துழைப்பை அளிக்கிறார். ஆனாலும் அவரைப் பார்த்துத் தங்கவேலு, 'நான் ராஜா; நீ ராணி; உன்னப்பன் சாம்பிராணி' என்னும் பொழுது, அவருக்குக் கோபம் வராமல், பின் என்ன தான் செய்யும்?

சட்டாம்பிள்ளை வெங்கட்ராமனை வில்லன் பாகத்தில் நடிக்க வைத்தவர்கள், அதைப்பற்றி இரு தடவை யோசித்திருக்க வேண்டாம்?

பாலாஜியின் கொம்பனியில் மனேஜராக வருபவர், படத்தில் பல்வேறு வேடங்களில் தோன்றுகிறாரே!

## பட விமர்சனம்

படத்தின் கடைசிப் பதினைந்து நிமிஷம் சிறிது விறுவிறுப்பாக விருக்கிறது. அந்த விறுவிறுப்புக்கு மெருகூட்டுகிறது ஈ. வி. சரோஜாவின் நடனம்.

படத்தின் ஆரம்பத்திலேயே தங்கவேலுவும், நாகையாவும் கல்யாணப் பந்தலில் நின்று கொண்டு உங்களை வரவேற்கிறார்கள். விட்டு விட்டுப் போக மனம் வருமா?

## சுமங்கலி

**சுமங்கலி** படத்தில் ஒரு விசேஷம் உண்டு. அதுதான், படத்தின் தலைப்புக்கும், படத்துக்கும் ஓரளவுக்காவது சம்பந்தம் உண்டு என்பதே. தன்னுடைய மகளைக் கொல்ல வந்த குடிகாரத் தந்தை, அவள் மணவறையில் சுமங்கலியாக விருப்பதைப் பார்த்துக் கண் கலங்கி, தடுமாற்றம் அடைந்து, மனம் மாறுவது படத்திற்குத் தனிஅழகைக் கொடுத்து விட்டது என்றே சொல்லவேண்டும்.

படம் தொடங்கி ஒரு சில காட்சிகள் திரையில் ஓடியதும், எமக்கு ஒரே நேரத்தில் பல படங்கள் பார்ப்பது போன்ற பிரமையும் தட்டத்தான் செய்கிறது.

கதையில் பல தொடர்பற்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன. அத்துடன், குடிகாரச் சின்னப்பன் மகாராஜாவாக மாறிவிடும் கதையை வேறெங்காவது கேட்டிருக்கிறீர்களா? என்றாலும், இடையிடையே சில நல்ல கருத்துக்கள் கதையில் தோன்றுகின்றன..

பாலாஜி விவசாயி வேடத்தில் நடிக்கிறார். அவருக்கும் விவசாயத்துக்கும் வெகுதூரம் என்பது அவரது தோளில் எக்கச்சக்கமாகத் தொங்கும் மண் வெட்டியே சொல்லும். நடிப்புச் சில இடங்களில் சோபிக்கிறது; பல இடங்களில் சோதிக்கிறது.

ஈ. வி. சரோஜா மயிலம்மாவாக வருகிறார். அவருடைய நடிப்பில்முன்னேற்றம்காணப்படுகிறது. முக்கியமாகத்தன் தம்பியுடன் சம்பாஷிக்கும் பொழுது, இயற்கையான கிராமத்தியப் பேச்சும், நடிப்பும் அவரிடம் தோன்றுகின்றன. நடனங்களை நன்றாக ஆடியிருக்கிறார்.

ஈ. ஆர். சகாதேவன் குடிகாரச் சின்னப்பனாக நடித்துள்ளார். தோற்றமும், நடிப்பும் பாத்திரத்திற்கு ஏற்ற முறையில் அமைந்துள்ளன. ஆனால், அவருடைய குரல்தான் தெளிவான சப்தமின்றிக் 'கப்'பென்றிருக்கிறது.

'கப்'பென்று என்ற சொல்லை உபயோகிப்பதில் ஹாஸ்யம் ஏதோவொரு தனிச் சிறப்பைப் பெற்று விடுகிறது என்றோ, என்னவோ, அதைப் பல சந்தர்ப்பங்களிலும் உபயோகிக்கின்றார் பக்கிரிசாமி!

வில்லனாகத் தோன்றும் வில்லன் நடராஜா என்பவர் தமது பாத்திரத்துக்கு உயிர் அளித்திருக்கின்றார். அவருடைய தோற்றம் பிரபல ஆங்கில நடிகர் யூல் பிரைனரை எமக்கு நினைவூட்டுகின்றது; சில இடங்களில், நடிப்பும் கூட. அவருக்கு இப் படம் ஒரு வெற்றி.

டைரக்ஷனில் பல குறைகள் உள்ளன. ஒளி, ஒலிப்பதிவில் விசேஷமாகக் கூற ஒன்றுமில்லை.

பாடல்கள் கருத்துச் செறிந்தவை. படத்தின் ஆரம்பப் பாடல் உழவரைப் பற்றியது; அது உள்ளத்தைத் தொடுகிறது.

பொறுமையைச் சோதிக்கும் படம் சுமங்கலி; ஆனால், சில நல்ல கருத்துக்களுக்காகவும், வில்லன் நடராஜாவின் நடிப்புக்காகவும் பொறுத்துக் கொள்ளலாம்.

—மின்மினி

## பார் பார் பட்டணம் பார்!

'பார் பார் பட்டணம் பார்' என்ற படத்தை கவுண்டர் பிலிம்ஸார் உருவாக்கி வருகிறார்கள். டி. ஆர். மகாலிங்கமும், மாலினியும் பிரதம பாகங்களில் தோன்றி நடிக்கும் இப் படத்தைப் பெருமாள் இயக்குகிறார். எம். எஸ். கண்ணன் கதை, வசனம் எழுதியிருக்கிறார்.

'பார் பார் பட்டணம் பார்' என்ற பெயரைக் கண்டதும் பார் பார் படங்களின் பெயரைப் பார்!' என்று சொல்லத் தோன்றவில்லையா நமக்கு?

## மரணத்தை வென்ற மனிதன்

ருஷியாவிலே மரணத்தை மனிதன் வெல்ல முயற்சிக்கின்றான், நிஜ வாழ்க்கையிலேயே. நாம் அதைப் படத்திலாவது முயற்சிக்க வேண்டாமா? ஸி. பி. புரொடக்ஷன்ஸ், இந்தக் காரணத்திற்காகத்தானோ என்னவோ, தமது படத்திற்கு 'மரணத்தை வென்ற மனிதன்' என்னும் பெயரைச் சூட்டியிருக்கின்றனர். சௌகார் ஜானகி, சுந்தரிபாய், தங்கவேலு, ரங்கராவ், பி. டி. சம்பந்தம் முதலியோர் இப்படத்தில் பங்குபற்றுகின்றனர்.

## ஹோமி வாடியாவின் "சம்பூரண ராமாயணம்"

வட இந்தியா சினிமாப்பட இயக்குநரான ஹோமிவாடியா 'சம்பூரண ராமாயணம்' என்னும் படத்தை வர்ணத்தில் தயாரிக்க உத்தேசித்துள்ளார். மஹிபால் இராமனாகவும், அனீற்றா குகா சீதையாகவும் இப் படத்தில் தோன்றுவார்கள். பல வட இந்திய படத் தயாரிப்பாளர்கள் சம்பூரண ராமாயணக் கதையைப் படமாக்க எண்ணியிருந்தனர். ஆனால் எண்ணத்தைச் செயற்படுத்துவதில், ஹோமி வாடியா வென்றுவிட்டார் போலத் தெரிகிறது.

## பொன்னு விளையும் பூமி

என்ன? 'பொன் விளையும் பூமி' 'பொன்னு விளையும் பூமி' யாக மாறிவிட்டதே என ஆச்சரியப்படுகிறீர்களா? படத்தின் தயாரிப்பாளர்களான ஓரியன்றல் மூவீஸ் தான் இப்பெயர் மாற்றத்தைச் செய்துள்ளனர்.

துரிதமாக வளர்ந்து வரும் இப்படத்தை பீம்சிங் இயக்குகின்றார். ஜெமினி கணேசனும், பத்மினியும் முக்கிய பாத்திரங்களில் தோன்றுகின்றனர். வசனத்தைச் சோலைமலை எழுதியுள்ளார்.

## குழந்தைகள் கண்ட குடியரசு

பத்மினி பிக்ஸர்ஸார் தயாரித்து வரும் ஒரு படத்தின் பெயர்தான் 'குழந்தைகள் கண்ட குடியரசு'. இப்படத்தை பி. ஆர். பந்துலு இயக்குகிறார். இக்குழந்தைகள் படம் பரணி ஸ்டூடியோவில் வளர்ந்து வருகின்றது. விந்தன் படத்தின் வசனத்தை எழுதுகிறார். மூலக் கதை மராத்திய எழுத்தாளர் தாதா மிராசியினுடையது.

# கலை தரும் கருத்து

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலை உலகமோ எல்லையற்ற அகண்ட பிரதேசமாகும்.

வியாசர் பாரதத்தை எழுதலாம். அதில் வில்லிபுத்தூரர் தனது பதிப்பெடுக்கலாம். பாஞ்சாலியின் சபதத்துக்கு மட்டும் பாரதியார் தனது முத்திரையைப் பொறிக்கலாம். எங்கள் நாட்டு சு. வே. ஒரு இழையை மட்டும்உருவி 'மணற் கோவில்' என்ற அழகிய உருவகக் கதையை உருவாக்கலாம். ஓர் எழுத்தாளன் விட்டுச் சென்ற ஓட்டை உடைசல்களை இன்னோர் எழுத்தாளன் நிரவலாம். ஓர் எழுத்தாளன் விட்டுச்சென்ற சந்து பொந்துகளை அடைத்து இன்னோர் எழுத்தாளன் மணியாசு பிடிக்கலாம்.

எழுத்தாளன் 'போட்டோ' பிடிக்கும் 'கமரா'வோ அல்லது 'காபன்' பிரதியெடுக்கும் இயந்திரமோ அல்ல. நாம் மின்னலிடையையும், அன்னநடையையும் வாழ்க்கையிற் கண்டதில்லை. ஆனால் ஒரு சிறந்த எழுத்தாளன், இவற்றை எங்கேயோ பார்த்திருக்கிறோமென்ற மயக்கத்தை எமக்கு ஏற்படுத்தி உண்மையென்று நம்பும்படிசெய்து விடுகின்றான். பத்துத்தலை இராவணனையும் எருமையில் ஏறிவரும்யமனையும் எழுத்தாளனால் தான் கற்பனை செய்ய முடியும்.

இந்த அபூர்வ ஜந்து (எழுத்தாளன் என்று வாழும் கலைஞன்) சிருஷ்டிப்பது தான் என்ன? எழுத்தாளன்(ஜிப்பா, பாக்கெர்பேனா,கலையாத கேசம் ஆதியாம் அலங்காரங்களுடன் நடைபயில்வோர் அல்ல) படைத்து அளிக்கும் கலையின் பெயர் என்ன?

அவர்கள் படைக்கும் கலையின் பெயர் இலக்கியம்.

அப்படியாயின், இலக்கியம் என்றால் என்ன?

இதைப் பற்றிச் சற்றே சிந்தித்துப்பார். சர்ச்சையைப் போதிமர நிழலில் வைத்துக் கொள்வோம்.

உனக்கு என்றுமே வழி காட்ட நினைக்கும்

—வெ. வீ. வி. தேசிகர்.


வெகுவிரைவில் திரையிடப்படும்!

சென்ட்ரல் (கொழும்பு) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்)

லிபர்ட்டி (பதுளை) ஜோதி (திருக்கோணமலை)

ஏ. நாகேஸ்வரராவ் -- ஜமுனா

நடித்த

கண் நிறைந்த கணவன்



அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க

சில நாட்களுக்கு மட்டும்

திரையிடப்படுகிறது!

சென்ட்ரல் (கொழும்பு)

எம். ஜி. ராமச்சந்திரன்

அஞ்சலிதேவி

வீரப்பா

காலஞ்சென்ற

என். எஸ். கிருஷ்ணன்

என். எஸ். கே. மதுரம்

கே. ஏ. தங்கவேலு

முத்துலெட்சுமி

நடித்த

சக்கரவர்த்தி திருமகள்

(புதிய கொப்பி)

## இப்படியும் சொன்னுர்கள்

ஒவ்வொரு விஷயத்தையும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்துவதே அரசாங்கத்தின் கொள்கையாகும்.

—எம். டபிள்யு. மெதிவாக்க.

சீன—இந்திய எல்லையில் ஆக்கிரமிப்பு நடந்திருப்பதாகக் கூறுவதற்கில்லை.

—அஜாய் கோஷ்.

எங்கள் கட்சி அங்கத்தவர்களுடன் பதவிகளைப்பற்றிப் பேசித் தமது பொன்னை நேரத்தைப் பாழாக்கிக் கொள்ளப் பிரதமர் ஒரு முட்டாளல்ல.

—எஸ். ஜே. வி. செல்வநாயகம்.

இலங்கைப் பிரதமர் திரு. தகநாயக்க ஒரு கொம்யூனிஸ்ட் எதிர்ப்பாளர். இலங்கைத் தமிழர்களும் கொம்யூனிஸ எதிர்ப்பாளர்களே எனத் தெரிகிறது.

—அவுஸ்திரேலியப் பிரதமர் கேஸி

வெளிநாட்டு உதவியை நிர்வகிக்க ஒரு தனிப்பகுதி அவசியமென்பதைப் பிரதமரிடம் தெரிவித்துள்ளேன். இந்த இலாகா பிரதமரினதோ அல்லது நிதி மந்திரியினதோ அதிகாரத்தின்கீழ் செயலாற்றலாம்.

—எம். எம். முஸ்தாபா.

திரு. தகநாயக்கா பிரதமராகப் பதவியேற்ற காலந் தொட்டுச் சுறுசுறுப்பாகவே உழைத்துவருகின்றுர். கொண்டாட்டங்களுக்குப் போகவும் நேரமில்லை. அவரை 'டெம்பிள்ட்ரீஸ்' மாளிகையிலிருந்து வெளிக் கொணர்வதே கஷ்டமாகிவிட்டது.

—டக்டர் என். எம். பெரேரா.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் ஆரம்பகர்த்தாக்களில் நானுமொருவன். அத்துடன், மந்திரிசபையில் உள்ள கட்சி அங்கத்தவர்களுள், மூத்தவர்களில் நானும் ஒருவனுவேன்.

—சி. ஏ. எஸ். மரிக்கார்.

தகநாயக்காவும், அவரது மந்திரிசபையும் திருமதி பண்டாரநாயக்காவின் முந்தானையைப் பிடித்துக்கொண்டு, தம்மைக் காப்பாற்றும்படி கேட்கிருர்கள்.

—டக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா

## நமக்கொரு வழிகாட்டி

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாவலர் பெருமான் ஆதியில் குடியிருந்த வீடு முழுவதாகப் பழுதடைந்து ஒரு சுவர் மாத்திரம் தப்பியிருக்கின்றது.

அந்த இடத்தில் அவருக்குக் கோவில் கட்டி, அவரின் திருவுருவச் சிலையைப் பிரதிட்டை செய்து, பூசை விழா நடக்க ஒழுங்கு செய்ய வேண்டும்.

அவருக்கு யாழ்ப்பாணத்திலும், சென்னையிலும், சிதம்பரத்திலும் உருவச்சிலைகள் நாட்ட வேண்டும்.

அவருடைய உண்மையான புகைப்படத்தை மூவர்ணப் பொலிவுடன் அச்சிட்டு குறைந்த விலைக்கு விற்க ஒழுங்கு செய்ய வேண்டும். ஒவ்வொரு தமிழ் மகன் இல்லத்திலும் இவர் படம் இருக்கவேண்டும்.

நாவலர் எழுதிய கடிதங்களைச் சேகரித்து, அச்சிட்டு வெளியிட வேண்டும்.

நாவலர் பெருமான் எழுதிய கடிதங்கள், அவர் உபயோகித்த பேனு, பென்சில்கள், அவர் அணிந்திருந்த பட்டுப் பீதாம்பரங்கள், உருத்திராக்க மாலைகள், அவர் பூவெடுத்த பூக்கூடைகள் முதலியவற்றைச் சேகரித்து ஒரு பொதுவான இடத்தில் யாவரும் தரிசிக்கக் கூடியதாகப் பத்திரப்படுத்தி வைக்க வேண்டும்.

### நாம் செய்ய வேண்டியன

நாவலரது நூல்களை மலிவுப் பதிப்பாக அச்சிட்டு வெளியிட வேண்டும். அவரது வாழ்க்கை வரலாற்றினை ஆங்கிலத்தில் எழுதி மேல் நாடெங்கும் பரப்புதல் வேண்டும்.

அவரைப் பற்றிப் பிரசங்கங்கள் செய்ய வேண்டும். செய்விக்க வேண்டும். அவரது குருபூசை எங்கும் சிறப்பாக நடைபெற ஒழுங்கு செய்தல் வேண்டும்.

சைவமும், தமிழும், தமிழர் பண்பாடும் மெத்தச் சீர்கெட்ட நிலையிலிருப்பதால், இன்னுமொருமுறை நாவலர் பெருமானை அனுப்பி வைக்குமாறு இறைவனை இறைஞ்சுதல் வேண்டும்.

இவைகளைச் செய்ய ஒரு தொண்டர் படையினை அமைத்தல் வேண்டும்.

இவ் வழிமுறைகளைப் பின்பற்றி ஒழுக வேண்டியது தமிழ் மக்களின் தலையாய கடமையாகும். வெள்ளம் போல் தமிழர் கூட்டம், வீரம் கொள் கூட்டம்—உடலினல் பலராக இருந்த போதிலும் உள்ளத்தால் ஒன்றுபட்டு நாவலர் பெருமான் புகழினை நானிலம் எங்கும் பரப்பும் பணியில் ஈடுபட்டுழைக்க வேண்டும்.

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

[2ஆம் பக்கத் தொடர்ச்சி]

சிகள் கோப்பாய் இடைத்தேர்தலில் போட்டியிட முன்வருவதில் வியப்பெதுவுமில்லை. தனிப்பட்டவர்களுக்காகவோ அல்லது குறுகிய நோக்கங்களுக்காகவோ வாக்குரிமை அளிக்காது, கட்சிரீதியில், ஒவ்வொரு கட்சியினதும் கொள்கைகளை அலசி, ஆராய்ந்த பின்னர் தமது வாக்குக்களை உபயோகிப்பதே தமிழ் மக்கள் இன்று ஆற்ற வேண்டிய முக்கியமான கடமையாகும். இன், மொழி உணர்ச்சிகள், எமது எதிர் காலத்தைப் பாழாக்கும் விதத்தில், எமது கண்களை மறைக்க விட்டுவிடக் கூடாது. உணர்ச்சி நேரத்துக்கு நேரம் மாறும் தன்மையது; உண்மை அப்படியான தொன்றல்ல. இதைக் கோப்பாய் தொகுதி வாக்காளர் தமது மனத்தில் நிறுத்தியே செயலாற்றுவர் என நம்புகிறேன்.

எம். மகேஸ்வரன்
கோப்பாய்.

## தீப்பெட்டி தட்டுப்பாடு

தீப்பெட்டிகளின் விலை பற்றிய செய்தியொன்று அண்மையில் ஒரு தினசரிப் பத்திரிகையில் வெளியாகியிருந்தது. அச் செய்தியின்படி தீப்பெட்டிக்குத் தட்டுப்பாடு இல்லையென்றும், ஒரு தீப்பெட்டி மூன்றரைச் சதத்திற்குப் பெறலாமென்றும் அறிந்தோம். ஆனல், இது உண்மையான நிலையை விளக்கவில்லை. மொத்த வியாபாரிகளுக்குக் குறைந்த விலையில் கொடுக்கப்படும் தீப்பெட்டிகள், சில்லறை வியாபாரிகளுக்கு அவ்விதம் கொடுக்கப்படவில்லை. மொத்த வியாபாரிகளுக்கு அளிக்கப்படும் சலுகை, சில்லறை வியாபாரிகளுக்கு இல்லாதபடியினல், கைத்தொழில் அதிபர் குறிப்பிட்டபடி மூன்றரைச் சதத்திற்குத் தீப்பெட்டி விற்பது இலகுவல்ல.

க. பரமலிங்கம்
யாழ்ப்பாணம்

## பொருளாதார உரிமைகளைப் பெற தொழிலாளர் ஒற்றுமை அவசியம்

யாழ்ப்பாணம்

"தேசிய உதவிநிதித் திட்டத்தில் இப்பொழுது பீடித் தொழிலாளரும் சேர்ந்து விட்டதால், இத்திட்டம் முறையாக நடைபெறுவதில் அவர்கள் அக்கறை காட்ட வேண்டியது அவர்களது கடமையாகும்" இவ்வாறு அகில இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக்காரியதரிசி திரு. வி. ஏ. கந்தசுவாமி, அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர். இதுவே பீடித்தொழிலாளர் ஐக்கிய சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டமாகும். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

'எமது சங்கத்தின் முயற்சியினலும், உழைப்பினலுமே இந்தியாவிலிருந்து இறக்குமதி குறைக்கப்பட்டது. இதன் பயனுக, இன்று இலங்கையில், பீடி உற்பத்தி வேகமாக வளர்ந்து வருகின்றது. ஆயிரக் கணக்கான தொழிலாளருக்கு வேலையும் அளித்து வருகின்றது'.

முன்னுள் நகரசபை அங்கத்தவரான திரு. எம். கார்த்திகேசன் பேசுகையில், பொருளாதார உரிமைகளைப் பெறுவதற்கு மட்டுமன்றி, 1956 ஆம் ஆண்டில் மக்கள் பெற்ற வெற்றியை நிலை நாட்டக்கூடிய அரசாங்கத்தை ஆக்குவதற்கும், இன்று, தொழிலாளரிடையே ஒற்றுமை அவசியம் தேவையெனக் குறிப்பிட்டார்.

திருவாளர்கள். எஸ். ஜெயசேனு, வி. கே. அப்துல்லா குட்டி, என். பப்லிஸ், ஏ. கே. அலி, கே. ஜமால்தீன் முதலியோரும் பேசினர். திரு. ஏ. கே. மொஹிதீன் வரவேற்புரை வாசித்தார்.

பின்வரும் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு. எஸ். ஜெயசேனு, உதவிக்காரியதரிசி: திரு. ஏ. நாகராஜா, பொருளாளர்: திரு. எம். கே. சந்திரன், செயற்குழு அங்கத்தவர்: திருவாளர்கள் என். பப்லிஸ், கே. ரி. செல்லையா.

19 அங்கத்தவர்கள் அடங்கிய ஒரு பொதுக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## விலங்குடன் கொண்டுவரப்பட்டார்!

கண்டி சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓடி, சென்னையில் பிடிபட்ட மாஜி புரக்டர் கொலுகல, கொழும்புக்கு விலங்குடன் விமான மூலம் கொண்டுவரப்பட்டார்; அவர் சிறையிலிருந்தும், நாட்டிலிருந்தும் தப்பி ஓடிய விபரங்களை ரகசிய பொலிசுக்குத் தெரிவித்த பின், கொழும்பு வெலிக்கடை சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். கண்டி நீதிபதி மாணிக்கவாசகரின் தலைமையில் மூவரடங்கிய நீதி சபை அவர் வழக்கை விசாரிக்கும்.

## வாக்காளர் இடாப்பில் ஒரு லட்சம் கண்டித் தமிழர்

புதிய வாக்காளர் இடாப்பில் சுமார் ஒரு லட்சம் மலைநாட்டுத் தமிழர் இடம் பெறுவரென்று எதிர்பார்க்கப்படுகிறது. பதிவுப் பிரஜையானவர்களில் 60 ஆயிரம் பேரும் மற்ற 40 ஆயிரமும், இலங்கையில் வம்சாவளிப் பிரஜை என்ற முறையிலும் வாக்காளராகவும் வாக்காளர் இடாப்பில் பெயர்களைச் சேர்க்க வேண்டியவர்கள் ஒருமாதத்தில் மனுச் செய்யவேண்டும். இலங்கை தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த திரு. டி. ராமானுஜம் இவ்வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிருர்.

## கண் கண்ட தெய்வம்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிட்டனர். அந்தத் தோட்டத்தில் இரு சங்கங்களாம். ஏதாவது கலகம் வரலாமென்று, தோட்டத்துரை அஞ்சி, பொலிசின் உதவி கேட்டிருந்தார். எங்களுக்குப் பின்னலே அந்தப் பொலிஸ் காரும் வந்துசேர்ந்தது.

பல தலைவர்கள் பேசினர். எல்லாவற்றையும் மிகக் கவனமாக அம் மக்கள் கேட்டனர். நிர்வாகிகளின் தேர்தல் மிக அமைதியாக, ஒழுங்காக நடந்தது.

பிறகு மற்ருெரு தோட்டத்தில் கூட்டம். அங்கும் சிங்களவர் உள்ளிட்டு பல மக்களும் கூடி மிக உற்சாகம் காட்டினர். கிராமிய நடனங்களுடன் ஊர்வலம் நடந்தது. பேச்சுகள், தேர்தல்கள், வாழ்க கோஷங்கள், மாலைகள்; காங்கிரசைத்தான் தெய்வத்தைவிட மேலாக அவர்கள் நம்பியிருப்பதைக் கண்டேன்.

காங்கிரஸ் நிர்வாகிகளின் பொறுப்பு மிக அதிகம். லட்சக் கணக்கான வறிய குடும்பங்களின் எதிர்காலம் அவர்களைப் பொறுத்தே உள்ளது. வேலையில்லாத வாலிபர்களைக் காங்கிரஸ் பதிவுசெய்து, தோட்டலயன் வீடுகளையும், சுற்றுப்புறங்களையும் சுகாதாரமுறையில் மேம்படுத்தலாம். உழைப்புத்தான் உண்மைச் செல்வம். அந்த உண்மைச் செல்வத்தை வைத்துக்கொண்டு, பிறர் கையைச் சிறிய விஷயங்களுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பது, வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவதுபோலாகும். சம்பளத்துக்குத்தான் வேலைசெய்யவேண்டுமென்று, தங்களைக் கூலிக்காரர்களாக ஆக்கிக் கொள்ளாமல், தொண்டர்களாக சமூக ஊழியர்களாக மதித்து, தாங்கள் வசிக்கும் பகுதிகளை சுத்தமாக மேம்படுத்திக் கொள்ள முன்வந்தால் தெய்வமும் அவர்களுக்கு உதவி செய்ய முன்வரும். அங்கு கஷ்டங்கள் இருப்பினும் மக்களிடையே அதிக நம்பிக்கையும், உற்சாகமும் சக்தியுமுள்ளது. எதிர்கால இலங்கையில், மலைநாட்டுத் தமிழருக்கு மேலான இடம் காத்திருக்கிறதென்பதை நேரில் கண்டு கொழும்பு திரும்பினேன்.

## உலகநிலை

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடாத்துவதற்கு தற்காலிக அல்ஜீரிய அரசாங்கம் கைதிகளாக இருக்கும் ஐந்து அல்ஜீரிய தேசிய வாதிகளைக் கொண்ட ஒரு குழுவினரின் பெயர்களை கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டது. சுய நிர்ணய உரிமை குறித்து உத்தரவாதங்கள் அளிக்கப்படும் வரை போர் ஓய்வை நிலைநாட்ட முடியாதென்ற நிபந்தனையை இவர்கள் விடுத்திருப்பதால் பிரான்சு இவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடாத்த சம்மதிக்க மாட்டாது எனத் தெரிகிறது.

ஐக்கிய நாடுகள் தாபன பொது மகா சபையில் அல்ஜீரியா பிரச்சினை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் படுவதற்கு முன்னதாக அல்ஜீரிய தேசிய வாதிகளின் தலைவர்களுடன் ஆலோசனைகளை ஆரம்பிக்க ஜனுதிபதி டீகோல் விரும்புவதாகத் தெரிகிறது. இவ் வாரம் முடிவடைந்ததும் பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டும் என சில அல்ஜீரிய தேசிய வாதிகள் கருதுகின்றனர். இதுவரை 1,45,000 அல்ஜீரிய தேசிய வாதிகள் வரை தம் உயிரைப் பலியிட நேரிட்ட இச் சிக்கலுக்கு அதி விரைவில் தீர்வு காண வேண்டியது அவசியம். இரு தரப்பினரும் விரைவில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பார்களா?

### பெருந்தலைவர் மாநாடு

பெருந்தலைவர் மாநாட்டிற்கும் ஜனுதிபதி ஐஸனேவரின் சுற்றுப்பிரயாணத்திற்கும் ஒழுங்குகள் நடைபெறுகின்றன. பிரித்தானிய வெளிநாட்டு மந்திரி பாரிஸிற்கு விஜயம் செய்தும் மேற்கு ஜேர்மனியின் பிரதமர் டாக்டர் கொன்ராட் அடினேர் லண்டன் மாநகருக்கு விஜயம் செய்தும் பெருந்தலைவர்மாநாடு படைக்குறைப்பு போன்ற விஷயங்கள் குறித்து ஆலோசனைகள் நடாத்தியிருக்கின்றனர் ஜனுதிபதி ஐஸனேவர் தமது டிசம்பர் மாதச் சுற்றுப் பிரயாணத்தின்போது ஸ்பெயினுக்கு விஜயம் செய்யவும் தூனீசியாப்பிரதமரைச் சந்திக்கவும் இணங்கியிருக்கிருர்.

## ஈழத்தின் இயற்கைக் காட்சிகள்

★

### 'போட்டோ' அழகுப்போட்டி: மூன்று பரிசுகள்

இலங்கையின் இயற்கை அழகு உலகப் புகழ் பெற்றது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, மலைநாடு உட்பட இலங்கையின் பல பகுதிகளிலும் இயற்கை அன்னையின் வனப்புக்கள் மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்து ஈழ நாட்டுக்குப் பெருமை அளிக்கின்றன.

நீங்கள் விரும்பும் அழகுக் காட்சிகளைப் படம் பிடித்து **கலைப்பகுதி, ஈழநாடு, தபாற் பெட்டி எண் 49, யாழ்ப்பாணம்.** என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள்.

இப்படங்களில் தரமானவற்றை அவ்வப்போது 'ஈழநாடு' இதழ்களில் பிரசுரித்து, சன்மானம் அளிப்போம். ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிரசுரமான படங்களைத் தொகுத்து, அவற்றுள் மிகச் சிறந்த மூன்று போட்டோக்களை கலைவல்லுனர் மூவர் அடங்கிய குழு தெரிந்தெடுப்பார்கள். இவற்றுக்கு முறையே ரூ 50, ரூ 25, ரூ 15 என மூன்று பரிசுகளை **ஈழநாடு** அளிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்ருேம்.

- போட்டோவின் அளவு, 6" X 4"
- முடிவு திகதி 31-12-59

படங்களுடன் அதுபற்றிய குறிப்பும் அனுப்பப்படவேண்டும். படம் அனுப்புபவரின் பெயரும் விலாசமும் கடதாசியில் தெளிவாக எழுதிப் படத்துடன் இணைத்தல் வேண்டும்.

கெபிட்டி (கொட்டாஞ்சேனை)

"போர்! போர்!" என்று பொருமி எழுந்த வீரபாண்டிய கட்டபொம்மன் இன்றுடன் இலங்கையில் 100-வது நாளாகக் கர்ஜித்துக் கொண்டேயிருக்கிறன்! கேட்டதா உங்களுக்கு அவன் கர்ஜனை?

நடிகர் திலகம் சிவாஜி கணேசன்

நடித்த

வீரபாண்டிய

கட்டபொம்மன்



மகத்தான 6-வது வாரம்! செல்லமஹால் [கொழும்பு]

பி. எஸ். சரோஜா, டி. கே. பாலச்சந்திரன், என். எஸ். கே. மதுரம், ராகினி, சந்திரபாபு, ராஜசுலோசன, டி. பி. முத்துலட்சுமி

மற்றும் பலர் நடித்த

பாண்டித்தேவன்

(தமிழ்)

கதை-டைரக்ஷன்:


கே. சுப்பிரமணியம்

இதயங் கவர்ந்த 7-வது வாரம்!

கிங்ஸ்லி - பிளாஸா வெலிங்டன் விஜயா

(கொழும்பு) (யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு)

மற்றும் பதினெரு திரைகளில்!



★ எண்ணற்றேர் கண்டுகளிக்கும் கருத்துடைக் காவியம்!

★ பண்புடையோர் பார்த்துப் பாராட்டும் பைந் தமிழ் ஓவியம்!!

★ நாடும் ஏடும் போற்றிப் புகழும் தீந்தமிழ் கலைப் பொக்கிஷம்!!!

★ நாவலரும் பாவலரும் நயந்து கூறும் நற்றமிழ் திரைச் சித்திரம்!!!!

இன்றே உங்கள் குடும்பத்துடன் பார்த்து இன்புறுங்கள்!

ஜெமினி கணேசன், பி. சரோஜாதேவி, நாகேஸ்வரராவ், விஜயகுமாரி, தங்கவேலு, எம். சரோஜா, நம்பியார், எஸ். டி. சுப்புலெட்சுமி முதலியோர் திறம்பட நடித்த

வீனஸ் பிக்சர்ஸ்

கல்யாண பரிசு


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ந் திகதி வெளியிடப்பெற்றது.